புது எழுத்து

8

ஆவணி 2003

ஆசிரியர் மனோன்மணி

கோ பி கி ரு ஷ் ண ன்

புது எழுத்து 8
ஆவணி 2003

தனி இதழ் விலை ரூ.30
ஆண்டு சந்தா ரூ. 200

ஆசிரியர்
மனோன்மணி

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
மனோன்மணி
39/20 ஜே.கே.சி தெரு,
காவேரிப்பட்டிணம் 635 112
கிருஷ்ணகிரி மாவட்டம்.
பேசி: 954343 252665

இந்த இதழில்...

புகைப்படங்கள்:
ஆர்.ஆர். சீனிவாசன், குட்டி ரேவதி

ஓவியங்கள்:
வாசுதேவ், சிவா

அட்டை ஓவியம்:
சிவா

அச்சுக்கோர்ப்பு வடிவமைப்பு:
ஜீவா கம்ப்யூட்டர்ஸ், செங்கம்.

அச்சு:
செந்தில் அச்சகம், தருமபுரி.

நம்பிக்கை (சிறுகதை)

கோபிகிருஷ்ணன்

அன்புத் தோழரவர்களுக்கு,

உங்களுக்கு என் பணிவும் தோழமையும் கலந்த வணக்கம். நலம்தானே?

உங்கள் சிறுகதைத் தொகுப்பு அது வெளியான 56 ஆம் நாள்தான் காணக்கிடைத்தது. மிககுந்த வலியுறுத்தலுக்குப் பிறகு, என் நச்சரிப்பைச் சகித்துக்கொள்ள முடியாமல் தம் அலுவலக நூல் சேகரிப்பிலிருந்து எடுத்து என் வீட்டுக்கு வந்து அதைக் கொடுத்துவிட்டுப் போனார் நாராயணன் அய்யா.

புத்தகம் கிடைத்த பரவசத்தில் நாராயணன் அய்யாவுக்குத் தேனீர்கூட வாங்கிக் கொடுக்காமல் உங்கள் புத்தகத்தில் என்னை ஆழ்த்திக்கொண்டேன். நாராயணன் அய்யாவுக்கு அவர் செய்த உபகாரத்துக்கு நன்றி சொன்னேனா, அவரிடம் என்ன பேசினேன், அவர் எப்போது போனார் - எதுவும் என் பிரக்ஞையில் இல்லை. நாராயணன் அய்யா என் தன்மைகளுக்குப் பழகிப்போனவர். ஆதலால் அவர் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்க மாட்டார் என்பது மட்டும் உறுதி.

உங்கள் புத்தக வெளியீடும் கருத்தரங்கும் நடந்த கூடத்துக்கு நான் வந்தேன்தான்; ஆனால் இலக்கிய ஈடுபாட்டால் அல்ல. என் ஒரே குட்டி இளவரசியின் திருமணத்துக்கு நண்பர்களை அழைக்கவே வந்தேன். கூடத்தின் வெளியே இருந்த நண்பர்களுக்கு அழைப்பிதழ்களை விநியோகிக்கவே எனக்கு நேரம் சரியாக இருந்தது.

கூடத்தின் உள்ளே வந்திருந்தால் உங்களையும் பிற எழுத்தாளர்களையும் பார்த்திருக்கலாம். உங்களை எப்பொழுது கடைசியாகப் பார்த்தேன்? அக்டோபர் 1996-ல் அந்தக் கிறித்துவ விடுதியில். என் துறை சாந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றி மட்டும் பேசி மிகவும் கண்ணியமாக நடந்துகொண்டீர்கள்.

இன்று, நான்கு ஆண்டுகள் கழித்து உங்கள் சிறுகதைத் தொகுப்பின் மூலமாக நான் உங்களுடன் உரையாடுவதாகக் கற்பிதம் செய்துகொள்கிறேன். உங்களைச் சந்திக்க வேண்டும். உங்கள் பரந்துபட்ட தோழமைபற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன் ஒரு பணிநிமித்தம் தென்காசியைக் கடந்து சென்றும் உங்கள் வீட்டுக்கு வர இயலாமலேயே போயிற்று. என் ஜோலிகள் அந்த மாதிரி. அடுத்த முறை தென்காசி பக்கம் வந்தால் உங்கள் இல்லத்துக்கு நிச்சயம் வருவேன்.

உங்கள் 15.09.2000 நாளிட்ட கடிதத்தை இன்று மீண்டும் படித்தேன். சாதாரண நலன் விசாரிப்புக் கடிதமே என்றாலும் உங்கள் வார்த்தைகளுள் தொக்கி நிற்கும் மென் உணர்வுகள் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. உங்கள் அந்தத் திருமண வாழ்த்துக் கடிதத்தை என் மகளுக்கு மீண்டும் காட்டி, உங்கள் புத்தகத்தைக் காட்டி, அதன் ஆசிரியர் என்று சொன்னேன். என் மாப்பிள்ளையிடமும் உங்கள் புத்தகத்தைக் காட்டினேன், மிகுந்த பெருமித உணர்வோடு.

உங்களுக்குக் கடிதம் எழுதி மாதக்கணக்கில் ஆகின்றது. நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரிவிப்பது என் தோழமைரீதியான கடப்பாடு ஆகும். உங்களுக்கு ஓய்வு கிடைக்கும்போது இதைப் படித்தால் போதும். அவசரம் இல்லை.

27.01.1999-க்குப் பிறகு, நான் எந்த நிறுவனத்திலும் வேலை செய்யவில்லை. அலுவலக விதிகளை என்னால் சகித்துக்கொள்ள இயலவில்லை. ஏதோ எழுத்து வேலைகள் - மொழிபெயர்ப்பு, மதிப்புரை - போன்றவைகளைச் செய்து மாதம் ஓராயிரம் சம்பாதிக்கிறேன். தீபாவளிக்கு மீனாட்சி ஒரு நீலநிற சட்டை எடுத்துக் கொடுத்தார். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இல்லாமை ஒரு பெரிய இழப்பாகப்படவில்லை. 'கோடு' சென்ற ஆண்டு இதழ் ஒன்றில் வந்த 'பரிணாமம்' கதையை நீங்கள் படித்திருக்கக்கூடும். அதில் வரும் பாட்டு,

"உன்னிடமிருந்து எனக்கு எதுவும் வேண்டாம்

என்னை என் போக்கில் விட்டுவிடு..."

நான் சமூகத்தை விளித்துச் சொன்ன வார்த்தைகள். எனக்கு வேலையெல்லாம் ஒன்றும் வேண்டாம். என் தனித்துவம் எனக்குப் புனிதமானது. இல்லையா தோழரே!

என் மகளின் திருமணம் மூன்று தோழியர், நான்கு தோழர்களின் நிதியுதவி மூலம்தான் நடந்தது. எனக்குச் சமீப காலமாகக் குடும்பம் என்ற அமைப்பில் நம்பிக்கை குறைந்துகொண்டு வருகிறது. ஒரு கூட்டு வாழ்க்கைதான் உணர்வுகளின் பயங்கரக் கூர்மையை மழுங்கடித்து வாழ்க்கையைச் சகித்துக்கொள்ள உதவியாக இருக்கும் என்று

கருதுகிறேன். சில, பல நண்பர்கள் சேர்ந்து இதெல்லாம் நடக்குமா அல்லது வெறும் ஒரு 'உடோப்பியா' தானா?

அடடா, நாராயணன் அய்யாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டேனே, அவரைப்பற்றி அதிகம் ஒன்றும் சொல்லாமல்! மிகவும் ஆச்சரியத்தைக் கொண்டிருக்கிறது. அவரது ஆளுமை தனியார் நிறுவனம் ஒன்றில் குமாஸ்தாவாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார். அவர் கடந்த ஒன்றரை ஆண்டு காலம் தான் அவரை எனக்குத் தெரியும். அவருக்கு ரூ.3,000 மாதச் சம்பளம் புத்தகப் புழு. கையில் கிடைக்கும் எல்லாப் புத்தகங்களையும் வாசித்து விடுவார். அவருக்கு என்னைவிட ஒரு வயது குறைவு: ஐம்பத்து நான்கு வயது மனிதர் சாப்பிடவே மாட்டார். தேனீரும் சிகரெட்டுமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். திட உணவு வாழைப்பழம் எப்போதாவது இரண்டு இட்லி அல்லது கொஞ்சம் தயிர்ச்சாதம் . அவர் வாழைப்பழத்தைச் தேசிய உணவு என்பார். பொது ஒழுக்கத்தில் அவருக்கு அபார நம்பிக்கை : மது அருந்த மாட்டார். புலால் உண்ண மாட்டார். ஒருத்தனுக்கு ஒருத்திதான். இந்த மூன்று கொள்கைகள் தாம் அவரது ஆளுமை அவருடைய இருப்பிடம் அமைந்தகரையில். அலுவலகமும் அமைந்த கரையில்.

எப்பொழுதாவது நாராயணன் அய்யாவை அவரது அலுவலகத்தில் சந்தித்து முரளி டீ ஸ்டாலில் தேனீர் அருந்தி கால் மணிநேரம் பேசிக்கொண்டிருப்போம். அந்த மாதிரி ஒரு சமயத்தில் தான் அந்தப் பெரியவரைச் சந்தித்தேன். அழுக்கு முழுக்கால்சட்டையும் அழுக்குச் சட்டையும் அணிந்து கொண்டும், காலணியின்றி, தலைநிறைய நரையுமாய் என் அருகில் அவர் வந்தார். மிகவும் உரிமையுடன் " வாத்தியாரே, ஒரு டீ வாங்கிக் குடு" என்றார். தொனியில் தயக்கம், கூச்சம், தாழ்வு எதுவுமில்லை. என் கையில் அப்பொழுது காசு இருந்தது. டீ வாங்கிக்கொடுத்தேன். அவ்வளவே.

நாராயணன் அய்யா அவரைப்பற்றி, என்னிடம் சொன்னார். ஒரு காலத்தில் அவர் ஒரு பெரும் பணக்காரராம். அண்ணன் தம்பிகளுக்குள் சொத்துத்தகராறு வந்ததில் சகோதரர்களின் சூழ்ச்சியால் அவர் பேரிழப்புக்கு உள்ளானாராம். மற்றவர்கள் வாங்கித்தரும் டீதான் அவருக்கு உணவாம்.

அந்தப் பெரியவரைச் சந்தித்த பிறகு எனக்குக் கூட்டு வாழ்க்கையில் இருந்த நம்பிக்கை கூடியது. அவர் என்னை அந்நியன் என்று நினைக்கவில்லை. ஒரு சகமனிதராகவே பாவித்திருந்தார். தன் செயலை யாசகம் என்றும் நினைக்கவில்லை.

தோழரே, கடிதத்தை முடித்துக்கொள்கிறேன். உங்கள் எழுத்தில் பொதிந்திருக்கும் வாழ்க்கை மீதான விழைவும் நன்னம்பிக்கையும் தான் என்னை உங்கள் பால் ஈர்த்தன. இந்த நிலை என்றும் நிலைக்கட்டும்.

அடுத்த மாதம் கிடைக்கும் உதவித்தொகையில் ரூ.150 மீதம்

பிடித்து, என் தேவைகளைக் குறைத்துக்கொண்டு உங்கள் சிறுகதைத் தொகுப்பை வாங்கிவிடுவேன். அது என் நூல் சேகரிப்பில் அவசியம் இடம் பெற வேண்டிய புத்தகம். மேலும், என் இன்றைய நெருக்கடி நிலையில் எனக்கு வாழ்க்கை மீதான விழைவு நிறையத் தேவை. உங்கள் இலக்கியப் பணி என்றும் தொடரட்டும்.

நன்றியும் நல்வாழ்த்துக்களும்.

தோழமையுடன்,
கோபிகிருஷ்ணன்
26 அக்டோபர் 2000

மனநிலைப் பிறழ்வு பற்றிய படைப்புகள்



கோபிகிருஷ்ணன்

விஞ்ஞானம் தன் வசதிக்காகவும் சுலபமான புரிதலுக்காகவும் நிறைய விஷயங்களைத் தனித்தனியே பிரித்து வாழ்க்கையைக் கூறு போட்டுப் பார்க்கிறது. ஆனால் இலக்கியம் என்பது அவ்வாறல்ல. எந்த ஒரு பிரச்சினையையும் வாழ்க்கையிலிருந்து பிரிக்காமல் பார்க்கிறது இலக்கியம். மனநிலைப் பிறழ்வு பற்றிய படைப்புகள் பிறழவை இந்த முறையிலேயே அணுகியுள்ளன?

முதலில் க.நா.சு. அவர்களின் 'பித்தப்பூ' வை எடுத்துக் கொள்வோம். நிறையப்படித்த தியாகுவுக்கு மனநிலை பிறழ்ந்து விடுகிறது. சிகிச்சையில் இருந்துகொண்டே அன்றாட வாழ்விலும் பங்கு கொள்கிறார். பிறழ்ந்த நிலையிலேயே ஒருநாள் அவர் இறந்துவிடும் பரிதாபத்துடன் நவீனம் முற்றுப்பெறுகிறது.

நவீனம் பிறழ்வு பற்றிய பல சிந்தனைகளை முன் வைக்கிறது. பிறழ்வு

என்றால் என்ன என்பது பற்றி ஓரிரு வார்த்தைகள் முதலில் சொல்வது நல்லது. பிறழ்வு என்பது முதலில் ஒரு சமூகத் தீர்ப்பு. சமூகம் ஒருவனை மனநிலை பிறழ்ந்தவன் என்று தீர்மானிக்கிறது. அதன் பிறகே அது உண்மையாகிறது.

இப்பொழுது நவீனம் முன்வைக்கும் சிந்தனைகளைப் பார்ப்போம். மனநிலை பிறழ்ந்த சில கதாபாத்திரங்கள் நவீனத்தில் வருகின்றன. அடிக்கடி புடவை, துணிமணிகளைக் களைந்து போட்டுவிட்டு 'அய்யோ நெருப்பு நெருப்பு' என்று ஓடஆரம்பித்துவிடும் தியாகுவின் அத்தை(பக்கம் 12). வீட்டு மானம் பறிபோய்விடக்கூடாது என்பதற்காக அவள் கட்டிப் போடப்பட்டிருக்கிறாள். பிறழ்வு ஒரு சமூகப் பிரச்சினையாகிவிடுகிறது என்பது சுட்டப்பட்டிருக்கிறது. சமூகம் தன்னைப் பிறழ்வின் பாதிப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ள பிறழ்ந்தவனை ஒதுக்கி வைத்து விடுகிறது. புலியைக் கூண்டிலடைப்பது போல.

ஒரு பைத்தியக்காரன் தன் மேல் கல்லெறிவது ஓர் இடத்தில் சொல்லப்படுகிறது. இங்கும் பிறழ்வு சமூகப் பிரச்சினையாவது சுட்டப்படுகிறது.

கிருஷ்ணய்யர் என்ற பைத்தியம் தூணியில் கட்டப்பட்டிருக்கிறார். மந்திர உச்சாடணையில் பிசகு ஏற்பட்டதால் கிருஷ்ணமூர்த்திக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. அதீத கடவுள் பக்தியும் எப்படிப் பைத்தியமாவதற்கு வழி கோலுகிறது என்பதும் சொல்லப்படுகிறது. கிருஷ்ணமூர்த்தி அளிக்கும் வார்த்தைகளின் வினோதமான விளக்கங்களும் கூறப்படுகிறது. இதெல்லாம் பிறழ்வின் வெளிப்பாடுகள்.

ராமச்சந்திர சாஸ்திரிக்குப் பிடித்த பைத்தியத்துக்குக் காரணம் மனைவி சோரம் போவது. இதை அவர் வெளியில் சொன்னதும் கோபம் கொண்ட கள்ளக்காதலன் அவரைத் தலையில் அடித்துக் காயப்படுத்தி விடுகிறான். ராமச்சந்திர சாஸ்திரிக்கு உபகாரம் செய்யும் மகாலிங்க ஐயரும் சுயலாபம் கருதியே செய்கிறார். இதில் நிலைபிறழ்ந்தவர்கள் ராமச்சந்திர சாஸ்திரியா இல்லை அவரைச் சுற்றியுள்ள இந்த இரு கயவர்களா என்ற கேள்வியைப் பூடகமாக எழுப்புகிறது நவீனம்.

சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிற கல்லெறி பெறும் பைத்தியங்கள் பற்றியும் நவீனம் குறிப்பிடுகிறது. இது மனநிலை பிறழ்ந்தவர்களுக்குச் சமூகம்கொடுக்கும் மரியாதை.

பத்திரிகை நடத்த உதவ முன்வரும் நண்பருக்கும் பைத்தியம் பிடிக்கிறது. அவர் திண்ணையில் கட்டப்பட்டிருக்கிறார். யாருக்கும் எந்த விதத்திலும் சித்த ஸ்வாதீனம் இல்லாமல் போகலாம் தான்: மனத்தில் தாங்க முடியாத கவலை, உடலில் அடிப்படுதல் அல்லது வியாதியின் கொடுமை போன்ற காரணங்களினால் பைத்தியம் பிடிக்கலாம் என்ற வாக்கியங்கள் நினைவுகூரத்தக்கன. பலவேளைகளில் பீதியும் கவலையும் மனநோய்க்கு

வழிகோலுகின்றன என்ற கூற்றையும் இங்கு நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

'நான் எங்கேயும் தனியாக நடந்துபோகமாட்டேன் சார்: என்னை யார் என்று தெரிந்து கொண்டு கூட்டம் கூடித் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள்' என்று சொல்லும் ஒரு அம்மாவும் பைத்தியம் பிடித்தவள் தான். தன்னை மேன்மையாகக் கருதிக்கொள்ளும் நோய்க்குறி இந்த அம்மாவிடம் காணப்படுகிறது.

பரங்கிப்புண், முக்கியமாக மன நோய்வரக் காரணமாக இருப்பதும் ஓர் உளவியல் உண்மை. இதுவும் நவீனத்தில் கூறப்படுகிறது.

உடுக்கடிப்பது ஒலிப்பது போலவும் பூசாரி உரத்த குரலில் குறிசொல்வது போலவும் தனக்கே ஏற்பட்டுவிடுவதும் குறிப்பிடப்படுகிறது. இது மாய ஒலி என்ற நோய்க்குறி. தாற்காலிகமானதென்றாலும் இதுவும் பிறழ்வுதான்.

தியாகுவின் மனநிலைப் பிறழ்வுக்குப் புறக்காரணம் தெளிவாகவே இருக்கிறது. கார் விபத்தில் காதலி இறந்து விடுவது, தியாகுவுக்கு விபத்தில் தலைக்காயம் ஏற்பட்டு பல நாட்கள் சுயநினைவின்றிக் கிடப்பது ஆகியவை. தியாகு சிகிச்சைபெற்றுக்கொண்டே வேலையிலும் இருக்கிறார். சில சமயம் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுகிறார். சங்கராச் சாரியரிடம் போகிறார். மனதுக்கு அது ஆறுதலாக இருக்கிறது. மன அமைதி நாடி சித்திரம், இலக்கியம் இவற்றில் ஈடுபடுகிறார். மனநலச் சிகிச்சையில் இருப்பவர்கள் குடிக்கக்கூடாது. குடித்தால் மனநல மருந்துகளான அமைதிப்படுத்திகள் வேலை செய்யாது. தெரிந்தும் குடிக்கிறார். அதீத மனச்சோர்வுக்கு ஆளாகி சாவு பற்றிய சிந்தனைகளைத் தழைக்கவிடுகிறார். அவருக்கு மறதி வேறு. படித்தும் தன் முழுத்திறமையை வெளிப்படுத்துச் சமூகம் (வேலைச் சூழல்) அனுமதிக்கவில்லை. கிட்டத் தட்ட ஒரு சிதிலமடைந்த வாழ்க்கை. மரணத்தில் அவருடைய பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கிறது. தியாகுவின் கதாபாத்திரம் கண்முன் நிற்கும் பாத்திரம்.

தவிர, சராசரித் தன்மையிலிருந்து, விலகி வாழும் எவரையும் சமூகம் பைத்தியம் என்று கூறுகிறது. சுயநலம் கருதாது காசை ஊராருக்குச் செலவுசெய்து அழிப்பவன் பைத்தியக்காரன். வேலைக்குப் போகாமல் முழு நேரமும் எழுதிக் கொண்டிருக்கும் இலக்கியவாதி பைத்தியக்காரன். லட்சியவாதி பைத்தியக்காரன். இப்படி நிறைய விஷயங்களை நவீனம் சொல்லிக் கொண்டே போகிறது.

நவீனத்தைப் படித்து முடித்ததும் முதலில் எழும் கேள்வி: யாருக்குப்பைத்தியம் பிடித்திருக்கிறது: இந்தச் சமூகத்துக்கா அல்லது...? யார் பிரகாரம் ஒருவர் பைத்தியம் என்பது இன்னும் தீர்மானமாகாத விஷயம். நிறைய எதிர் உளவியல் புத்தகங்கள் நம்மிடையே நிலவிவருகின்றன. மனச்சிதைவைப் புகழ்ந்து எழுதப்பட்ட ஒரு

புத்தகமும் இருக்கிறது. ஒரு உளவியல் மருத்துவரால் எழுதப்பட்டதுதான் இந்தப் புத்தகம். மனநிலைப் பிறழ்வே வெறும் கட்டுக்கதை என்கிறது மற்றொரு புத்தகம். மனச்சிதைவு அனுபவத்தை ஓர் ஆன்மீக அனுபவமாகப் பார்க்கிறது ஒரு புத்தகம். சரிவரப் பெயர்ப்பலகை குத்தமுடியாத நோய்க்குறிகளை மனச்சிதைவு என்று வரையறைப்படுத்தும் குறையும் குறைந்தபாடில்லை. மனம், மனநிலைப் பிறழ்வு எல்லாம் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராகவே இருந்து வருகிறது.

அடுத்ததாக பாதசாரி அவர்களின் 'காசி' என்னும் கதையை எடுத்துக் கொள்வோம். ஓரளவு படித்த, நல்ல இலக்கியம் பரிச்சயம் உள்ள காசிக்கு நிகழும் மனநிலைப் பிறழ்வைக் கதை விவரிக்கிறது. இந்தக் கதை 'மீனுக்குள் கடல்' என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

சிகரெட் பிடிப்பதைப் பால்வராத முலைக்காம்பை உறிஞ்சுகின்ற மாதிரி உணர்கிறார் காசி. இது வாய் வழிப் பாலுணர்வுத் தேக்கம் Oral fixation என்று கொள்ளலாம். சுயமைதுனம் கட்டுக்கடங்காத ஒரு பிரச்சினையாக இருக்கிறது இவருக்கு. இவருக்குப் பல காதல் அனுபவங்கள். இவருக்கு வேண்டியது உடலுறவு கொள்ள வயதில் மூத்த தாயான பெண். இது ஓர் Oedipus சிக்கல். இதனால், வாழ்வில் ஏற்படும் அசம்பாவிதங்கள்: கல்யாணம் ஆனால் மனச்சீக்கு தீர்ந்துவிடும் என்ற பாமரத்தனமான நம்பிக்கை: தவித்துத் தவித்துச் சிலதடவை தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவது: எந்த வேலையிலும் காலூன்ற முடியாத நிலைகொள்ளாமை: பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் பயம்: வாழ்க்கையில் ஓர் அவநம்பிக்கை எல்லாம் சொல்லப்படுகின்றன. இதில் குடிப்பழக்கம் வேறு. உடைந்து போன மணவாழ்க்கை ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருக்கும் சின்னாபின்னத்துக்குக் கூடுதல் சேர்க்கையைத் தருகிறது. ஏதோ வனாந்திரத்துக்கு ஓடிப் போகலாம் என்கிற தப்பித்தல் எண்ணம்: சதா கனவுகளின் தொந்தரவும் இயலாமை காரணமாக அழுதல்: ஒரு கனவில் ஒரு பெண் சிலையின் மார்பகத்திலிருந்து பால்குடித்தல் போன்ற ஆழ்மன விகல்பம். இப்படியே காசியின் மனநிலைப் பிறழ்வு விவரிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. நல்ல ஒரு நட்பை இழந்தது இவர் சரிந்ததற்குக் காரணமாக வைக்கப்படுகிறது.

உண்மையில் காரணம் இதைவிட ஆழமான ஒன்றாக இருக்க வேண்டும்.காசியின் பிரச்சினை முடிவில்லாததாகத் தொடர்கிறது.

கடைசியில் இவர் ஓரளவு மனம்தேறுகிறார் 'சுயம் நசித்து' விட்ட நான்கைந்து நண்பர்கள், எழுத்து, படிப்பு இவைதான் தனக்கு நம்பிக்கை வரக் காரணம் என்கிறார் இவர். காசி தேறியிருப்பது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். பிறழ்ந்த நிலைக்கு முன்பாக இருந்த பழைய சுவாதீனமான நிலைக்குத் திரும்பியிருக்கிறாரா என்பது தெரியவில்லை. சிலவேளை உளவியல் சிகிச்சை கூட ஓரளவுதான் பலனளிக்கிறது. அதிகபட்சம் நோயாளி தன் நோய்க்குறிகளுடன் வாழக்

கற்றுக்கொள்கிறான். அந்த அளவு இருந்தால் கூடப் போதுமானது. மனநிலை பிறழ்ந்த ஒருவருக்கு நோயின் உக்கிரம் தணிந்த பிறகு தனது நோயைப்பற்றிய உள்ளுணர்வு ஏற்பட்டாலே பிறர்போல வாழ நிச்சயம் முடியும். காசி நம் மனதை நெகிழவைக்கும் ஒரு கதாபாத்திரம்.

அடுத்து சொல்லப்படவேண்டியது பாதசாரி அவர்களின் இன்னொரு படைப்பான 'இலைகள் சிரித்தன'. இதுவும் 'மீனுக்குள் கடல்' என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

இரவில் அப்பாவைக் காணோம். மகனின் மனம் அல்லாடுகிறது. ஏற்கனவே அப்பா சுகவீனமாக இருந்தபோது 'அப்பா இன்று இறந்துவிடுவார்' என்று தினமும் எண்ணிச் சஞ்சலப்பட்டதுண்டு. இதுவே ஓர் Obsession ஆட்டிப்படைக்கும் எண்ணம். மகனுக்கு இரவில் விழித்துப் படிக்கும் பழக்கம். இரவில் மட்டுமே இவர் முழு ஆசுவாசத்துடன் இருக்கிறார். இரவில் இவர் காதுக்குள் ரேடியோவின் மெலிதான ரீங்காரம் கேட்கிறது. இது மாய ஒலி நோய்க்குறி. அப்பாவோ வேண்டாத சிறுசிறு பொருட்களையெல்லாம் பத்திரப் படுத்திவைத்திருப்பவர். இது அவ்வளவு கடுமையாக எடுத்துக் கொள்ளவிட்டாலும் ஒரு eccentricity ஒரு சிறு குணவினோதமாகவேனும் கொள்ள வேண்டும். கடைசியில் அப்பா வீடு திரும்புகிறார். மகனுக்கு மன உளைச்சலிலிருந்து விடுவிடுப்பு கிடைக்கிறது.

நோய்க்குறிகள் சில சுவாதீனமுள்ளவர்களிடமும் இருக்கும். ஒரு நோய்க்குறி அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காதவரை பிரச்சினையில்லை. சிலவேளை மனநிலைப் பிறழ்வு சில அனுகூலங்களைக் கூடப் பெற்றுத்தரலாம். ஒரு தடவை மனநிலை பிறழ்ந்து குணமானவர் ஒருவரால் - எல்லோராலும் அல்ல - உருவெளித் தோற்றத்தை பிரக்ஞையுடன் கொண்டுவரமுடியும். ஒரு கூட்டல் கணக்கைப் பேப்பர் பென்ஸில் வைத்துப் போடவேண்டும் என்ற அவசியம் இல்லை. எண்களை உருவெளித் தோற்றத்திலேயே கொண்டு வந்து போட்டுவிடலாம். அதேபோல் வானொலிப் பெட்டியின் துணை இல்லாமலேயே லதாமங்கேஷ்கரின் பாட்டை மாய ஒலியைத் தட்டிவிட்டுக் கேட்டு மகிழலாம். அப்படியானால் மனநிலைப் பிறழ்வை முழுக்க முழுக்க ஓர் அபாக்கிய நிலை என்று கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்தது, உமாவரதராஜன் அவர்களின் 'உள்மன யாத்திரை' என்னும் சிறுகதைத் தொகுப்பு. இது மனநிலைப் பிறழ்வு பற்றியது இல்லையெனினும் சில கதைகள் மனத்தின் செயல்பாட்டை ஊடுருவிப் பார்த்தல் intro Speckon என்ற நிலையில் அமைந்துள்ளன. இதுவும் ஒரு குறிப்பிடத்தக்கத் தொகுப்பு. குறிப்பாக சூரியனின் முன்புறம் என்னும் கதையில் ஒரு அனுபவம் குறிப்பிடப்பட்டிருக்கிறது: ஓர் இருட்குகை. அதனுள் அசைவற்று நான் கிடந்தேன். மரணத்தின் அரும்பு மயிர்களை நான் புரிந்து கொண்டேன். அசைய முடியவில்லை-இடது புறமும் சரி,

வலது புறமும் சரி. ஏதோ ஒரு பாட்டை நான் அந்தப் பொழுது கேட்க விரும்பினேன் (பக். 112) இதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வா.சு.ரா.வின் 'நேசம்' என்னும் சிறு கதைத் தொகுப்பில் 'பாலா' என்னும் சிறுகதை இடம்பெற்றிருக்கிறது. மனஅதிர்ச்சிக்குள்ளாகும்போது, சந்தேகத்தின் அடிப்படையில் ஏற்படும் மனச்சிதைவு நோய்க்கு (Paranoid sehizophrenia) உள்ளாகும் ஓர் இளம் பெண்ணின் நிலை இக்கதையில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து க. சமுத்திரம் அவர்கள் எழுதியுள்ள 'வெள்ளைச்சுவரை நோக்கி......' என்ற புத்தகத்தைக் குறிப்பிட வேண்டும்.

முதலில் இந்த நவீனத்தில் உள்ள குறைகளைச் சொல்லிவிட்டு நிறைகளுக்கு வருகிறேன். ஆசிரியர் அடுக்குமொழிகளிலும் ஒலி நய வெளிப்பாடுகளிலும் தன்னை இழந்துவிடுகிறார் என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆங்கில வார்த்தைகளைத் தமிழில் எழுதும் போது உச்சரிப்பு பிசகாமல் எழுத வேண்டும் பக்கம் 173-ல் 'பொர்ஸிகுலைன்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சரியான உச்சரிப்பு 'பொல்லிக்யூலர்' சிக்மண்ட் ஃப்ராய்டை எட்மண்ட் பிராய்ட் என்று குறிப்பிட்டிருக்கிறார் ஆசிரியர் இதையும் இவர் திருத்திக் கொள்ள வேண்டும். ஃபோபியா என்ற வார்த்தையை 150 ஆம் பக்கத்தில் தவறான அர்த்தத்தில் உபயோகித்திருக்கிறார். தன்னை மற்றவர்கள் கிண்டல் செய்வதான நினைப்பு காதிரைச்சல் தன்னைப் பிடிக்கப்போகிறது என்றபயம்(Persecutory delusion) சிதைவின் நோய்க் குறிகள். இந்த நோய்க்குறிகளை மெய்யப்பனுக்குச் சிகிச்சை அளித்த உளவியல் மருத்துவர் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை போலும். மெய்யப்பனைப் பிடித்துள்ள நோய்Compulsive neurosis என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மனச்சிதைவு நோய்க் குறிகளும் இன் நோய்க்குறிகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருப்பினும் மேலே சொல்லப்பட்டவை மனச்சிதைவின் நோய்க்குறிகளே உளவியல் சார்ந்த இந்தத் தவறுகளை ஆசிரியர் திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் அவரைத் தோழமையுடன் கேட்டுக்கொள்வேன்.

இப்பொழுது நவீனத்தில் உள்ள நிறைகளைப் பார்ப்போம். சில பகுதிகள் உருக்கமாகவும் மனதைத் தொடும்படியும் அமைந்திருக்கின்றன. சில வாசகங்கள் அருமையாக உள்ளன. உதாரணம்: மனவாதை இல்லாமல் ஞானப்பேறும் இல்லை என்னுரை நன்றாக வந்துள்ளது. மனநோய் பற்றிய ஆசிரியரின் ஆரோக்கியமான கண்ணோட்டம் என்னுரையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. காதல் தோல்வி ஒரு மனிதனை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பது நன்றாகவே சித்திரிக்கப்பட்டிருக்கிறது. நோய்க்குறிகளின் வர்ணனைகள் நன்றாக அமைந்திருக்கின்றன. என்றாலும் ஆசிரியர் சற்று மிகைப்படுத்தியிருக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆசிரியர் Hypnotherapy-யை நன்கு விளக்கியுள்ளார்.

ஆனால் இந்தச் சிகிச்சைமுறை இப்பொழுதுதெல்லாம் அரிதாகக் கையாளப்பட்டு வரும் ஒன்று. மனநோய்க்கு சமூக அமைப்பும் காரணம் என்ற முக்கியமான உண்மையை ஆசிரியர் சொல்லியிருக்கிறார். உடல் ஊனமுற்ற சத்யாவின் பாத்திரப்படைப்பும் பியூன் முனுசாமியின் பாத்திரப் படைப்பும் நன்கு அமைந்துள்ளன. இதெல்லாம் பாராட்டப்பட வேண்டியவை

அடுத்தது ஜுலை 1989 'மீட்சி' யில் வெளிவந்த 'முடியாத சமன்' என்னும் கோபி கிருஷ்ணனின் சிறுகதை. பாலுணர்வில் சிக்கல் உள்ள ராமபத்திரனின் பிரச்சினை முன்வைக்கப்படுகிறது. 'காசி' யில் பெண்சிலையின் மார்பகத்தில் காசி பால்குடிப்பதாக வருகிறது. ராமபத்திரனுக்குச் சற்று வித்தியாசமான பிரச்சினை. அம்மனுடன் உடலுறவு கொள்வதாகக் கனவு காண்கிறார் ராமபத்திரன். பிறழ்வு சமூகக் கட்டுக்கோப்புகளை உடைத்தெறிந்து விடுகிறது.

அடுத்தது கோபிகிருஷ்ணனின் 'பிறழ்வு விடிவு' என்ற குறுநாவல். 'உணர்வுகள் உறங்குவதில்லை' என்ற தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது. ராமனுக்கு மனச்சிதைவு நோயும் ஆட்டிப்படைக்கும் எண்ணங்கள் என்ற நோயும் பீடித்திருக்கின்றன. ராமனுக்கு இவை பெரும் மன உளைச்சலைத் தந்தாலும், உளவியலில் பரிச்சயம் இருப்பதால் இந்நோய்க்குறிகள் அவரது அன்றாட அலுவலைப் பாதிக்கவில்லை. சிகிச்சைக்கென்று புறப்படும் போது வழியில் ஒரு கார் விபத்தில் மாட்டிக் கொண்டு தலைக்காயம் ஏற்படுகிறது. அவருக்கு அதுவே மின் அதிர்வுச் சிகிச்சைபோல் அமைந்து தாற்காலிகமாக நோயிலிருந்து விடுவிடுப்பு ஏற்படுத்துகிறது. ஆனால் திடீரென்று மீண்டும் ஆட்டிப்படைக்கும் எண்ணம் ஆரம்பமாகிறது.

என் கதைகளைப் பற்றிச் சொல்ல, அவற்றை விமர்சிக்க எனக்கு உரிமை இல்லை என்றபோதிலும், பிறழ்வு குறித்தான இக்கட்டுரையில் இவ்விரண்டையும் ஒதுக்க முடியவில்லை. இதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வாழ்க்கையின் மேம்போக்கான அழகைக் கூட பிறழ்வு என்ற பிரச்சினை குலைத்துவிடுகிறது. வாஸ்தவம்தான். ஆனால் பிறழ்வுகள் நிகழாமல் இல்லை. பிறழ்வு என்பது வாழ்க்கையின் யதார்த்தத்திலிருந்து ஒரு தப்பித்தல். வாழ்வதும் வாழ்வைச் சகித்துக் கொள்ள முடியாதபோது வாழ்விலிருந்து தப்பிப்பதும் மனிதர் செயல்களே.

இலக்கியம் வாழ்க்கை சார்ந்தது. வாழ்க்கை மனிதர்களுடையது. மனம்தான் மனிதன். சிலவேளைகளில் அது பிறழ்ந்து விடுகிறது. அதைப்பற்றியும் படைப்புகள் வருவது வரவேற்கத்தக்கது. மனநிலைப் பிறழ்வுபற்றியும் மன வளர்ச்சி குன்றிய நிலைபற்றியும் நம் தமிழ்ச் சினிமாக்கள் தரங் கெட்டதுமான கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பிறழ்வுகுறித்தான இலக்கியப்

படைப்புகள் வருவது நல்லது.

கடைசியாகச் சில வார்த்தைகள். கனவு இதழில் வெளிவந்த ஜெயமோகன் அவர்களின் 'வனம்' என்னும் சிறுகதையும் கணையாழி இதழில் வெளிவந்த பாவண்ணன் அவர்களின் 'தனுசு' என்னும் குறுநாவலும் இக்கட்டுரையில் இடம் பெறவில்லை. ஏனென்றால் இரண்டும் 1990 இல் வெளிவந்தவை. எண்பதுகளில் வெளிவந்த படைப்புகள் ஏதாவது விடுபட்டுப் போயிருந்தால் அது என் கவனக்குறைவைக் காட்டுகிறது. இதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

கோபிகிருஷ்ணன் வாழ்வும் எழுத்தும்

அமரந்த்தா

சிறுகதை என்ற இலக்கிய வடிவத்திற்கு இலக்கணமாகப் பலவற்றைச் சொல்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் உதாரணமாக வெவ்வேறு ஆசிரியர்களின் எழுத்தை முன்வைக்கிறார்கள். இதுதான் சிறுகதை என்று குறிப்பிடப்படும் சிறப்பைப் பெற்ற சிறுகதைகள் இருக்கின்றன. கோபிகிருஷ்ணனின் "முடியாத சமன்" சிறுகதைத் தொகுதியைப் படித்தபின் அப்படி ஒரே ஒரு கதையை அல்லது சில கதைகளை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லமுடியும் என்று தோன்றவில்லை இருபத்தியாறு சிறுகதைகள் அடங்கிய "முடியாத சமன்" கோபிகிருஷ்ணன் எழுதிய சிறந்த சிறுகதைகளின் தொகுதி என்று வேண்டுமானால் சொல்லலாம். இதிலுள்ள ஒவ்வொரு சிறுகதையும் தன்னளவில் வாழ்வின் ஒரு குறிப்பிட்ட கோணத்தை வெளிகாட்டுவதைப் பார்க்கலாம். மனநோய்க் கூறுகள் மலிந்த தமிழ்ச் சமூகத்தின் உறுப்பினர்களைக் கதை மாந்தர்களாகக் கொண்ட இச்சிறுகதைகள், வாழ்வின் பல்வேறு நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றன. சக மனிதர்கள் மீது கோபிகிருஷ்ணனுக்கு உள்ள அக்கறையும் அன்பும்தான் கேலியும் கிண்டலும் கலந்து அவரது கதைகளில் பதிவாகியுள்ளன என்று மேலோட்டமாகப் பார்க்கும்போது தோன்றலாம். ஆனால் மனித

வாழ்வின் வெவ்வேறு நிலைமைகளை அவர் எவ்வாறு உள்வாங்குகிறார், அவை எவ்வாறு அவரை பாதித்துள்ளன என்பதுதான் அவரது எழுத்து சொல்வது. இதனாலேயே எதுவும் கதையென்ற அளவில் நின்றுவிடாமல், வாசகர்களை - அவர்களது உணர்வு நிலையை தொந்தரவுக்கு உள்ளாக்குகின்றன.

நடுத்தர வர்க்கத்தின் அன்றாட வாழ்க்கையில் நேரிடும் சுவையான நிகழ்வுகள், போலியான மதிப்பீடுகள்,அவலங்கள், அற்பத்தனங்கள், கல்வியின் போதாமைகள், மனித மாண்புகளின் வீழ்ச்சி, தோழமையும் காதலும் அபத்தமாக புரிந்து கொள்ளப் பட்டிருப்பது குறித்த கவலைகள், எள்ளல்கள், பணத்தையும் சமூகப்பொது மதிப்பீடுகளையும் புறக்கணித்ததால் தனிமைப்பட்டு, அதனால் வாழ்வில் சந்திக்க நேர்ந்த சில இக்கட்டான நிலைமைகள் என்று தன் வாழ்வில் கண்டவற்றையே இவர் கதைகளாகப் பதிவு செய்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

உளவியல், சமூக சேவை இவ்விரண்டிலும் முதுகலைப்பட்டம் பெற்றவர் கோபிகிருஷ்ணன். அவருக்கிருந்த ஆங்கிலப்புலமையும் குறிப்பிடத்தகுந்தது. தமிழில் அவருக்கிருந்த தேர்ச்சியை அவரது படைப்புகள் சொல்லும். அதுவே அவரிடம் பலர் பொறாமை கொண்டு பகைமை பாராட்டக் காரணமாக இருந்தது. இத்தனைக்கும் அவரது தாய்மொழி தமிழல்ல - சௌராஷ்டிரம்.

கோபிகிருஷ்ணன் ஒரு எழுத்தாளராக அறிமுகம் ஆகுமுன்னரே பல்துறை அறிஞர் என்று எனக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருந்தார். உளவியல், உடற்கூறு, மனநிலை பிறழ்வு, கல்வித்திட்டம், குழந்தைகளின் மன இயல்பு, தமிழ்ச்சமூக பொதுப்புத்தி, மனித மதிப்பில் செல்வத்தின் பங்கு, தடய அறிவியல், நமது மருத்துவக் கொள்கையின் கோளாறுகள் என அவரது அறிவு பரவலானது. எனவேதான் நடப்பியலின் தன்மைகளை அவரால் உடனடியாகப் புரிந்து கொள்ளவும், அவற்றிலிருந்து விலகியிருந்து கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளவும் முடிந்தது. ஒருவகையில் இது அவருக்குத் தீமையே செய்து வந்தது - தொடர்ச்சியாக அவர் சூழலின் இரக்கமின்மையையும்,அநீதியையும் கண்டு கொதித்துப் போனார். சக மனிதர்களின் சுயநலமிக்க செயல்களாலும் நியாயமற்ற நடவடிக்கைகளாலும் மனக்கசப்பும் வேதனையும் அடைந்து அதனை வெளியே சொல்லமுடியாமல் தவித்தார். ஆனால் இதனாலெல்லாம் அவர் தனது மென்மையான இதயத்தை இழந்துவிடவில்லை. அதனால்தான் அவருக்கு நண்பர்கள் அதிகம். பலர் அவர்மீது பகைமை பாராட்டவும் அதுவே காரணம். ஏனென்றால் பெரிய பெரிய உண்மைகளை நகைச்சுவை கலந்து படரென்று போட்டு உடைத்துவிடும் தார்மீக ஆவேசம் அவருக்கிருந்தது. "கருத்தரங்கில் கணக்கில் கொள்ளப்பட்டவை" "மிகவும் பச்சையான வாழ்க்கை", "சமூகப்பணி", போன்ற கதைகளை அவரால்தான் எழுத முடியும்.

கோபிகிருஷ்ணன் சிறந்த மொழிபெயர்ப்பாளரும்கூட. தமிழிலும்

ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை பெற்றிருந்த அவர், பல நூல்களை மொழிபெயர்த்திருக்கிறார். கடைசியாக அவர் மொழிபெயர்த்தி வந்த நூல் முற்றுப்பெறவில்லை. ராஜினி திரணகம (இலங்கை-இவர் கொலைசெய்யப்பட்டு இறந்தார்) "எழுதிய முறிந்த பனை" நூலின் முதல் இரண்டு அத்தியாயங்கள் கோபிகிருஷ்ணனின் மொழிபெயர்ப்பில் "தாகம்" இதழில் வெளியாகியுள்ளன. இவை கோபிகிருஷ்ணனின் மொழிபெயர்ப்புத் திறனுக்கு சான்று கூறுபவை. நான் இதுவரை செய்த மொழிபெயர்ப்புகளில் ஆகக் கடினமான " நிழல்களின் உரையாடல்" நாவலுக்கு திருத்தங்கள் செய்யவும் செழுமைப்படுத்தவும் பத்து நாட்கள் விடுப்பு எடுத்துக்கொண்டுஉடன் அமர்ந்து எனக்கு கோபி உதவினார். அந்த நாட்கள் என்றும் என் நினைவில் நிலைத்திருக்கும்.

ஆரோக்கியமான உடல்-மனநிலையில் கோபி மிகுந்த உற்சாகமாக, மகிழ்ச்சியாக இருந்த நாட்கள் அவை. அவற்றைத் தொடர்ந்து வந்த நாட்களில் நான் பிரச்சனைகளில் அழுத்தி மிகுந்த மனவேதனைக்கு ஆளாகியிருந்தேன். அந்நிலையிலிருந்து நான் மீண்டுவர உதவி என்னைத் தாங்கிப் பிடித்தவர்கள் இருவர். ஒருவர் கவிஞர் வத்ஸலா, மற்றவர் கோபிகிருஷ்ணன். ஒருநாள் காலையில் கோபி மிக உற்சாகமாக வந்து என்னை வெளியே அழைத்துப் போனார். தன்னிடம் நிறைய பணம் இருப்பதாகவும் எனக்கு ஏதாவது வாங்கித்தரப் போவதாகவும் சொன்னார். கட்டாயம் நான் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார். பின்பு தானாகவே, இசை உங்களுக்கு மிகவும் பிடிக்குமல்லவா, சில ஒலி நாடாக்களை வாங்கிப் பரிசளிக்கப் போகிறேன் என்றார்.மைலாப்பூர் கிரி டிரேடிங் ஏஜன்ஸியிலிருந்து இம்ரத்கான், கங்குபாய் ஹங்கல், ஹரிப்ரசாத் சௌரசியா ஆகியோரது ஒலி நாடாக்களை வாங்கிப் பரிசளித்தார். முதல்நாள்வரை அவர் சில்ட் அஃப் சர்வீஸ் நிறுவனத்தில் பார்த்துவந்த வேலையை ராஜிநாமா செய்ததில் கிடைத்த பணத்தில்தான் இவ்வாறு செலவு செய்தார் என்று பின்னால் தெரிந்து கொண்டேன்...

நடைமுறை வாழ்வில் ஆழ்ந்த கவனம் செலுத்திய இவருக்கு, நடுத்தர வர்க்கத்தினரின் உளவியலைக் கண்ணாடிபோல பிரதிபலிக்க முடிந்துள்ளது. எனவேதான் கதையைத்தேடி இவர் பயணிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. அன்றாட வாழ்வில் எதிர்ப்படும் மனிதர்கள், விலங்குகள், வண்டிகள்,பறவைகள், ஈ கொசுக்கள்கூட இவருக்கு கதைப்பொருள்களாகி விடுவதைப் பார்க்கலாம். குட்டிகள் ஈன்ற ஒரு பெண்நாயை (தெருநாயை) வைத்து பெண்ணிய நோக்கியான சிறந்ததொரு சிறுகதையை (ஆண்) அவரால் தரமுடிந்திருக்கிறது.

முடியாத சமன் என்ற தலைப்பில் இவர் எழுதியுள்ள சிறுகதையைப் பற்றி மட்டுமே சொல்ல நிறைய இருக்கிறது. மனநிலை பிறழ்வு ஒரு நோயாகக் கருதப்பட்டு, தவறாக சிகிச்சையளிக்கப்படும் அவலத்தை இந்தக் கதையைப்போல வேறெதுவும்-மனநிலை பிறழ்வு குறித்த தனிநூல்கள் கூட - இவ்வளவு தெளிவாக விளக்கிவிட முடியாது. ஜி.

நாகராஜனின் முற்றுப் பெறாத குறுநாவல் 'குறத்தி முடுக்கு', சிதம்பரம் பத்மினி வழக்குமன்றத்தின் முன்பு அளித்த வாக்குமூலம், மக்கள் கண்காணிப்பு அமைப்புக்கு தர்மபுரி தங்கம்மாள் அளித்த வாக்குமூலம் - இவற்றுக்கு அடுத்தபடியாக என்னை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆட்படுத்தியது 'முடியாத சமன்' சிறுகதைதான். கதைக்கு கோபி தேர்ந்தெடுத்த தலைப்பு கச்சிதம் - அவரது தமிழறிவுக்கு ஒரு சான்று.

படிக்கிற நமக்கே இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறபோது, கதையை எழுதியவர் எவ்வளவு மன உளைச்சல் பட்டிருக்க வேண்டும். அதுபோன்ற அவலநிலை உளவியல் குறித்த நூல்களை அவர் எழுதுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். இத்துறை தொடர்பாக உலவும் தவறான கருத்துக்கள், பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் நிலைமை, வழங்கப்படும் தவறான சிகிச்சை என ஒவ்வொன்றும் அவரைத் தொந்தரவு செய்திருக்க வேண்டும். அதனால் அருமையான சில நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. (1) உள்ளேயிருந்து சில குரல்கள் (2) கொஞ்சம் அவர்களைப் பற்றி...... (இணையாசிரியர்கள்: சுஃபி, லதா ராமகிருஷ்ணன் (3) சமூகப் பணி அ-சமூகப்பணி எதிர்-சமூகப்பணி (இணையாசிரியர்: சுஃபி)

இதற்கு நேர் எதிரான மனநிலையில் நகைச்சுவை கொப்பளிக்க அவர் எழுதிய சிறுகதைகள் அவரது நுண்ணறிவின் வெளிப்பாடுகளே. "எங்கள் எண்ணங்கள்", "பேய்", "மயிரே துணை", "எப்படியோ எல்லாம் மர்மமாக இருந்தால் சரி" ஆகிய கதைகளை மறக்க முடியாது.

மென்மையான உணர்வுகளைக் கொண்டிருந்த காரணத்தால் அநீதி கண்ட பொழுதெல்லாம் எதிர்வினை காட்டிய அவர், அடிக்கடி வேலையை இழந்து பொருளாதார நெருக்கடிக்கு ஆளானார். மனநிலை பிறழ்வுக்கும், மனமுடைந்த நிலைக்கும், அதீத பரபரப்பு நிலைமைக்கும் மாறி மாறிச் சென்று மீண்டார். மருந்துகளுக்கும் சிகரெட் பிடிக்கும் நிரந்தர அடிமையானார். டேபின் டென்னிஸ் என்ற பெயரில் இவர் எழுதிய குறுநாவல் இத்தகைய பரபரப்பு மனநிலையில் எழுதப்பட்டதுதான். வேலை,ஊதியம்,சமூக மதிப்பு இவை பற்றிய தெளிவான புரிதல் இருந்ததால்,சமூகத்தில் தனது எளிய நிலை அவரை பாதிக்கவில்லை. உளவியலாளர், சமூகப்பணியாளர், தட்டச்சர், மொழிபெயர்ப்பாளர், பிழை திருத்துபவர் என அவர் பார்த்த வேலைகள் ஏராளம். தனது எளிய நிலை குறித்து அவருக்கு எவ்வித தாழ்வுணர்வும் இருக்கவில்லை - ஆனால் அவரது எளிமை ஒன்றையே காரணமாக்கி அவரை அவமதித்தவர்கள் அதிகம். எதையும் பொருட்படுத்தாமல் தான் சரியென்று நம்பிடப்படியே அவர் நடந்துகொண்டார். சூழலின் அவலம் தாளாமல் தவிப்பவராகவே அவர் இருந்தாரே ஒழிய, தன்னிரக்கம் கொண்டவராக ஒருபோதும் இருக்கவில்லை. அப்பழுக்கற்ற தன்மை அவரில் குழந்தைத் தன்மையை ஏற்படுத்தியிருந்தது. அதனால் அவர் யார்மீதும் கசப்புணர்வோ வன்மமோ பாராட்டியதில்லை. சமூகத்தில்

பெரிய மனிதர்களென்ற பெயருடன் உலவும் சிறுமதியாளர்களையும், ஏமாற்றுக்காரர்களையும், வஞ்சனைக்காரர்களையும் அவர் அக்கறையோடு பார்த்து வருந்தினார் - அவர்களது அறியாமை கண்டு சொல்ல எவ்வளவோ இருந்தும் குரல் எழுப்பாமல் அமைதியாக நம்மிடையே வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

'மழை' இதழில் தனது பேட்டி வெளியானபோது, அதைப்படித்துவிட்டு கருத்துச் சொல்லுமாறு கேட்டார் கோபிகிருஷ்ணன். கிட்டத்தட்ட அதில் அவர் தெரிவித்தவை ஏற்கனவே எனக்குத் தெரிந்த தகவல்கள்தான். அறிவும் திறமையும் பெற்றிருந்தும், நடைமுறை வாழ்க்கையை வசதியாக்க அவை பயன்படாமல்போய், தொடர்ச்சியான பணத்தட்டுப்பாட்டிற்கும் மனச்சோர்வுக்கும் அவரை ஆட்படுத்தியதை மற்றொருமுறை அவர் சொல்லக் கேட்டது என்னை வேதனையும் வெட்கமும் கொள்ளச் செய்தது. தன்னை எந்நாளும் முன்னிறுத்திக் கொள்ளாத அவரது எளிமையின் காரணமாக, படைப்புகள் மூலம் நியாயமாகப் பெற்றிருக்க வேண்டிய புகழோ பொருளோ அவருக்குக் கிடைக்கவில்லை. இதை எவ்வித கசப்புணர்வும் கழிவிரக்கமும் இன்றி அந்தப் பேட்டி பதிவு செய்கிறது. ஒரு வேண்டுதல்போல, 'தேவை: உடனடியாக ஒருவேலை' என்று முடித்திருந்தார் பேட்டியை. மறுமுறை சந்தித்தபோது, "அந்தப் பேட்டியின் குறைபாடு ஒன்றுதான் - இருபது வருடங்களுக்கு மேலாக உடன் வாழ்ந்த உங்கள் மனைவியைப்பற்றி சொல்ல உங்களிடம் ஏதுமில்லாமல் போனது ஏன்? உங்கள் வாழ்வின் ஏற்ற இறக்கங்களில், இன்ப துன்பங்களில் பங்கெடுத்து கொண்டவராயிற்றே? ஒரு மகிழ்வான கணம், ஒரு நெகிழ்வான கணம் பற்றிக்கூட உங்களால் ஏன் சொல்ல முடியவில்லை? நீண்டகாலம் பயன்படுத்தும் ஜடப் பொருட்கள் மீதுகூட நமக்கு பிடிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆனால் அதிகம் படிக்காதவரானாலும் உங்களை அண்டியிராமல், வேலைக்குப்போய் ஓரளவு பணத்தை சம்பாதித்துக்கொண்டு, எத்தனையோ மோசமான அனுபவங்களுக்கு இடையிலும் சுறுசுறுப்பாக சிரித்த முகத்துடன் உயிரோட்டமாக வளையவந்து கொண்டிருக்கும் அவரைப்பற்றி சொல்ல உங்களுக்கு ஏதுமில்லாமல் போனது எப்படி? "என்று கோபியைக் கேட்டேன். சட்டென்று அவர் முகம் வாட்டமடைந்தது. சற்றுநேரம் கழித்து, 'நியாயம் தான் நீங்கள் கேட்டது' என்றார்.

கோபியின் மனைவி அவரைவிட வயதில் மிகவும் இளையவர். சற்று வசதியான குடும்பத்தில் பிறந்தவர். பொருளீட்டுவதில் அதிக ஈடுபாடில்லாதவராக, அதற்கான முனைப்புகள் இல்லாதவராக இருப்பது கோபிக்கு உடன்பாடாக இருந்திருக்கலாம். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை சந்திக்க அவர் தயாராக இருந்திருக்கலாம். ஆனால் அவரது மனைவி அவரைப்போலவே கண்ணோட்டம் கொண்டவராக, பற்றற்றவராக, கடுமையான நிலைமைகளை சகித்துக் கொள்ளும், தாக்குப்பிடிக்கும் திடமுள்ளவராக இருக்கவேண்டுமென்று எந்தக்

கட்டாயமும் இல்லை. இருந்தும், அவர் அந்த நிலைமைக்கு அஞ்சாமல் இறுதிவரை தோள்கொடுத்தது பாராட்டப்பட வேண்டியது. அவரது தியாகமும் மன உறுதியும் போற்றுதலுக்குரியவை. மிக எளிமையாக, அவர் மிகவும் அன்பாக இருப்பார். மற்ற ஆண்களைப்போல கொடியவரல்ல' என்று கணவரைப்பற்றி சொல்கிறார் உஷாராணி.

வாழ்வின் இறுதி மாதங்களில் கோபிகிருஷ்ணனுக்கு மூச்சிரைப்பு மிக அதிகமாக இருந்தது. அவரால் நடக்கவோ, படியேறவோ முடியவில்லை. இருந்தும் நண்பர்களைச் சந்திக்க வேண்டி நீண்ட தொலைவானாலும் சென்று வந்தார். சர்க்கரை நோய் கடைசியாக வந்து சேர்ந்தது அவருக்கு. அறுபத்தைந்து வயதுவரை உயிரோடிருப்பேன் அதன் பிறகு இருப்பது வீண் என்று ஒருமுறை என்னிடம் சொல்லியவர், ஏனோ ஐம்பத்தெட்டில் சாவை விரைவுபடுத்தும் முடிவை எடுத்திருக்கிறார். நோயை அதிகரிக்கும் அனைத்து வழிகளையும் மேற்கொண்டு சாவை வரவேற்றிருக்கிறார். கடைசி நாட்களில் தூக்கம் வராமல் அலைக்கழிந்து, நள்ளிரவில் எழுதுவதற்கு உதவிவேண்டித் தவித்திருக்கிறார்- கிடைக்கவில்லை. இறுதியாக அவர் எழுத நினைத்ததை நாம் இழந்துவிட்டோம் அவருடன் சேர்த்து. என்னைப் போன்ற அவருடைய நெருங்கிய நண்பர்கள், தொட்டுவிடலாம் என்பது போன்ற பருண்மையான உரைக்கூடிய அவரது அன்பையும், ஆதரவையும் அறிவையும் மொழியையும் பறிகொடுத்துவிட்டு பராரிகளாக நிற்கிறோம்.

கோபி கிருஷ்ணன் இறப்பதற்கு ஒருவாரம் முன்பு அவரைப் பார்க்கப் போனபோது எனக்கு பகீரென்றிருந்தது. அவரது முகமே வித்தியாசமாகத் தெரிந்தது. அது மனதைப் பிசைவதாக இருந்தது. உடனடியாக வெளி ரங்கராஜனைத் தொலைபேசியில் அழைத்துப்பேசினேன். கோபிக்கு உடல்நிலை மோசமாக இருக்கிறது. தாமதிக்காமல் உடனடியாக நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றேன். ('விளக்கு' அமைப்பின் அடுத்த பரிசினை கோபிகிருஷ்ணனுக்கு வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டிருந்தது.) அவரும் கூடிய விரைவில் அதற்கு ஏற்பாடு செய்வதாக வாக்களித்தார்.) ஆனால் கோபியின் முடிவு வேறு விதமாக இருந்திருக்கிறது...

இணைப்பு: கோபிகிருஷ்ணனின் நூல்கள்:

1. ஒவ்வாத உணர்வுகள்
2. உள்ளேயிருந்து சில குரல்கள்
3. கொஞ்சம் அவர்களைப் பற்றி...
4. சமுகப்பணி - அ- சமூகப்பணி எதிர்-சமூகப்பணி.
6. முடியாத சமன்
7. துயோன்
8. டேபிள் டென்னிஸ்
9. மானிட வாழ்வு தரும் ஆனந்தம்
5. உணர்வுகள் உறங்குவதில்லை (குறுநாவல்கள்)
10. இடாகினிப் பேய்களும்...

அஞ்சலி

பதி

இன்று வேறு நாள்
கொதிக்க வேண்டிய கத்திரி நாள் இது.
பொய்க்குளிர் போர்த்தி வீம்பு பிடித்துக்
கண்ணீர் விடாது இன்று விம்முது வானம்.
மேல் துண்டால் வாய்ப்பொத்தி அசையா
நிற்கும் ஆயிரம் மரங்கள். போலியோ குழந்தை
போல் கால் இழுத்துப் புரளும் கடல் அலைகள்.
உருதுமொழியில், சிதார் இசையில் கரைந்த
மனத்தில் வெடித்தன நடுங்கிய நிலமாய் எண்ணங்கள்
பாழ்குழியில் வீழ்ந்து, குருதி சொட்டும் முட்டி
தேய மேலே ஏறி உள்ளே கனன்ற நெருப்பை
வெளியே எழுத்தாய் வரைந்தாய். போதும் இச்சுக
வேதனைகள் என்றே குளிர்ந்தாயோ? கோபி!

(ஓர் வகுப்பு ஓர் அறைத் தோழராய் நீண்ட காலம்
பழகிய கவிஞர் பதியின் இரங்கற்பா கண்ணீரிலும்
செந்நீரிலும் எழுதியது)

முடியாத சமன்:

அபத்தங்களும் அற்புதங்களுமாக

சில தரிசனங்கள்

ஜி. குப்புசாமி

நடைமுறை உலகமும், நாகரிக வாழ்க்கையும் தனிமனிதனிடம் எதிர்பார்க்கின்ற முரண்பாடுகளற்ற, சம்பிரதாய, ஒழுங்கு முறைமைகளிலிருந்து சுதந்திரமாக விலகி, தன்னிச்சையாக தடைகளின்றி பிரவாகித்துச் செல்கிற மனவோட்டங்கள் ஒரே நேரத்தில் உலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கெதிரான கலகக் குரலாகவும், அற்புதமான கலைப்படைப்புகள் ஜனிப்பதற்கான காரணிகளாகவும் உருவெடுக்கின்றன. எல்லா நேரங்களிலும் இது சாத்தியப்படாமல் போவதற்கு எல்லா உலக நிகழ்வுகளுக்கும் பொதுவாக இயங்குகிற அதே காரணகாரியங்களே இந்த ஒழுங்கற்ற சிந்தனைப் பெருக்கிகளுக்கும் ஏற்படுகின்றன. சம்பிரதாயங்களை மீறி சுதந்திரமாக இயங்கும் மனவோட்டத்திற்கும், இலக்குபற்றிய தெளிவில்லாமல் அடிப்படை நோய்க்கூறுகளோடு அலைபாய்கிற சிந்தனைத்தெறிப்புகளுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசங்கள் இருக்கின்றன. மனப்பிறழ்வு கொண்டவர்களாக பட்டம் சூட்டப்பட்ட காஃப்கா, வான்கோ போன்ற கலைஞர்களின் பல அபாரமான படைப்புகள் அவர்கள் மிகுந்த மன அழுத்தத்தில் தத்தளிக்கும்போது உருவானவையே.

சம்பிரதாய கட்டமைப்பிற்குள் சிறைப்பட்டிருக்கும் மனித மதிப்பீடுகள் என்றுமே சுதந்திரமான கலைஞனின் படைப்புகளை அங்கீகரிப்பதில்லை.

கோபிகிருஷ்ணன் மறைந்துவிட்டபிறகு அவரது படைப்புகள் பற்றி ஒரே நேரத்தில், எல்லாத்தரப்புகளிலிருந்தும் விமரிசங்களும், பாராட்டுரைகளும் வரத்துவங்கியுள்ளன. இவர் வாழ்நாளில் இவரது படைப்புகள் ஆழமாக பரிசீலிக்கப்பட்டதோ, அங்கீகரிக்கப்பட்டதோ இல்லை. குறிப்பாக இவர் விஷயத்தில் நமது கடினமனங்கொண்ட சில இலக்கியவாதிகள் கூட இப்போது தமது இரக்க, நெகிழ்ச்சி, கருணையுணர்வுகளையெல்லாம் கலந்து பச்சாதாபத்துடன் அவரது கதைகளையும், அவரது தனிப்பட்ட

வாழ்க்கையையும் அலசுகிறார்கள்.

கோபியைப் போன்ற ஒரு சிலருக்கே, அவர்களது படைப்புகளைப்பற்றி பேசும்போது, அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையையும் சேர்த்தே கணக்கில் எடுத்துக்கொண்டு விவாதிப்பது நடக்கிறது. இதற்கு பிரதானமான காரணமே கோபியின் அலாதியான தனித்துவம் தான்.

பெரும்பாலும் கதைகள்: அதனால் ஏற்படுகிற ஒருவித ஒற்றைப்பரிமானம்: ஒழுங்குமுறைச் சிந்தனைத்தளைகளை உதறிவிட்டு விளிம்பிலேயே பாலன்ஸ் செய்கிற விநோதங்கள்: அவ்வப்போது இடறி கீழே விழுந்தாலும் (எந்தப் பக்கத்தில் விழுந்தாலும்) சுதாரித்து எழுந்து மீண்டும்ஆரம்பநிலைக்கே புதிய அனுபவச்செறிவுடன் வந்தடைவது: அதீதக் குழப்ப சிந்தனைகளுக்கூடாகவே தொடர்ந்து வரும் அறிவார்ந்த திறனாய்வுகள்......... கோபியின் பெயரிடப்படமுடியா விநோத உலகம்.

பிற உயிர்களிடத்தே நாம் காட்டும் அன்பும், பரிவும் உயர்ந்த குணம்தான். உலகம் உங்களை ஜீவகாருண்யவாதியாகவும், மனிதநேயராகவும் பாராட்டும். ஆனால் இதற்கு கறாரான விதிகளும், எல்லையும் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த எல்லைவரை நீங்கள் அன்பு செலுத்த உனுமதி உண்டு. இந்த எல்லையையும் தாண்டி உங்கள் அன்பும் பரிவும் சென்றால் அது இந்த கெட்டிக்கார உலகத்தினரால் அங்கீகரிக்கப்படுவதில்லை. அந்த சூட்சுமமான எல்லையைத் தாண்டினால் அது மனநோய்க்கூறாகவே அடையாளம் காணப்படுகிறது ('அன்பே சிவம்', 'மகான்கள்') அதேபோல் பெண்ணின் அழகை ரசிப்பது கௌரவமானதொரு அளவிலேயே நின்றால் நீங்கள் காதலிக்கப்படவும் வாய்ப்பிருக்கிறது. உங்கள் அழகுணர்ச்சி அதைத்தாண்டிச் சென்றுவிட்டால் அந்தப்பெண் மிரண்டுபோய் உங்களைத் தவிர்த்து விட்டு தப்பித்துவிடுவாள் ('தணிக்கையிலிருந்து தப்பிய கதை') இத்தகைய எல்லைக் கோடுகள் பற்றிய பிரக்ஞையோடு நம் அன்பை வெளியிட வேண்டியிருக்கிறது. இந்த வாழ்க்கையை ஜெயிப்பது மிகச்சிரமம் தான்.

'வார்த்தை உறவு', 'அபத்த இலக்கியம்' என்ற வகைமையில் இரண்டு சிறுகதைகள் 'உற்ற நண்பர்கள்' கதைகளில் இரு பாத்திரங்களின் வசனங்கள் மட்டும் இடம் பெறுகின்றன. அபத்த எல்லையைச் சீண்டிக்கொண்டே செல்கிற இக்கதைகளிலும் 'இழந்த யோகம்' 'தணிக்கையிலிருந்து தப்பியகதை' 'முடியாத சமன்' போன்ற கதைகளில் சில காரணமாக ஏற்படும் மனப்பிறழ்வு அதீத எல்லைகளுக்குச் செல்கிறபோதும், தளைகளைத் தகர்த்துவிட்டு சீறிப்பாய்கிற சிந்தனைத் தெறிப்புகளில், காணற்கரிய சில அபூர்வ தரிசனங்கள் சாத்தியமாகின்றன. வழக்கமான, கட்டுப்பாடுகளுக்குப்பட்ட சிந்தனைகளுக்கு அடிமையாக்கி வைத்திருக்கும் இந்தச் சமுதாயக் கட்டாயங்களின் அடித்தளத்தையே அசைத்து விடுகிற இத்தகைய தரிசனங்கள் கோபிகிருஷ்ணனின்

பெரும்பாலான கதைகளில் அவ்வப்போது, நாம் சற்றும் எதிர்பாராத தருணங்களில் நிகழ்கின்றன. ஆனால் இத்தகைய சிலிர்ப்புகளுக்காக பல சாதாரண வரிகளைத் தாண்டி வரவேண்டியிருக்கிறது.

பலநேரங்களில் மிகச்சாதாரணமான, வெறும் நகைச்சுவை சீண்டல்களுக்காகவும், கடைசிவரி திருப்பத்திற்காக வெகுஜனப் பத்திரிக்கைகள் உற்பத்தி செய்கின்ற கதைகளைப் போலவும் 'பேய்', 'மிகவும் பச்சையான வாழ்க்கை', 'கதையின் கதை', 'எண்கள் - எண்ணங்கள்' போன்ற கதைகள் வந்து போகின்றன. இக்கதைகளில் கூட சில ஆச்சரியகரமான வரிகள் தட்டுப்பிட்டுச் சென்றாலும் ஆழமாக எந்தப் பார்வையையும் கொண்டிராத ரகங்களாகவே இவரிடமிருந்து அவ்வப்போது வந்தது உண்மையில் ஆழ்ந்த பரிசீலனைக்குரியது.

படைப்பாளியின் மன இடுக்குகளில் சில விசேஷப் பிரகாசிப்புகளாக படைப்பின் ஊற்றுக்கண் திறந்து கொண்டாலும், ஸ்தூலமான படைப்பாக அவை உருமாறும்போது படைப்பாளியின் சொந்த அவஸ்தைகள் இந்த உருமாற்றத்தை இடறிவிட்டுவிடுகின்றன. வெறும் சம்மந்தப்பட்ட பிரச்சனை அல்ல இது. எழுதும் விஷயம் படைப்பாளியை எந்தளவிற்குத் தீவிரமாக கவ்வியிருக்கிறதோ, அந்தளவிற்குக் கவனமாக அதன் பிடியிலிருந்து தன்னை விலக்கி வைத்துக் கொண்டு தன்படைப்பை அவன் உருவாக்க வேண்டியிருக்கிறது. விஷயத்தின் அழுத்தமும், படைப்பாளியின் ஏற்கனவே கொதிநிலைக்கு வந்திவிட்டிருக்கும் மனநிலையும் இதனை பலநேரங்களில் வெற்றிகரமாக செய்துமுடிக்க விடுவதில்லை படைப்பாளியின் ஆகப்பெரிய துக்கம் இதுவாகவே இருக்க முடியும்.

மாறாக 'ஈடான் தோட்டம் தொட்டு இறையுணர்வுக் கூட்டம் ஊடாக ஐந்து நட்சத்திர ஓட்டல் வரை' என்ற கதையில் ஆண்பெண் முரண் நிகழ்வுகள் அற்புதமானதொரு அனுபவத்தைக் காட்டிச் செல்கின்றன. தொடர்பற்ற காட்சிச் சிதறல்களை ஒன்றாகக் கோர்த்து இணைக்கிற லாவகத்தை அலட்சியமாகச் செய்கிறார் ஆசிரியர் இத்தொகுப்பின் விசேஷமான கதை இது.

'பீடி' என்கிற ஒற்றை விஷயம் குறித்த பிரசங்கம் போலச் செல்கிற கதையிலும், 'எப்படியோ எல்லாம் மர்மமாக இருந்தால் சரி' என்கிற கதையிலும், கருத்தரங்கில் கணக்கில் கொள்ளப்பட்டவை' கதையின் இறுதியிலும் காணப்படும் புனைவுத்தன்மை, வாசகனை வெறும் அதிர்ச்சிக்குள்ளாக்குவது மட்டுமன்றி அவனை வேறு தளத்திற்கு இடமாற்றம் செய்கின்றன. அலாதியான வாசக அனுபவம் கை கூடும் கதைகள் இவை.

சூட்சுமமாக காட்டிச் செல்பவை,தொடர்ந்து வருகிற அலட்சியமான,

மேம்போக்கான வரிகாளல் தவறவிடப்படும் அபாயம் இவரது கதைகளில் தொடர்ந்து இருக்கிறது. நுட்பமான வாசிப்புதேவை என்ற அதீத கவனமே பல சாதாரன வரிகளுக்குக்கூட கூடுதலான ஜொலிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. சுவாரஸ்யமான சவால்தான். தொடர்ந்து கோபிகிருஷ்ணனை வாசித்துவிட்டு, இயல்பான மனவோட்டத்தில் செல்லாமல் விளிம்புகளில் மனது தத்தளித்து ஆட்டம் கண்டு நம்மைப்பதற்றமடையச் செய்வதுகூட கோபிகிருஷ்ணனின் படைப்புகளில் இருக்கிற சுவாரஸ்யமான சவால்தான்.

வரம்புகளற்றவன்

இரா. சோமசுந்தரம்

திருச்சியில் நிருபராகப் பணியாற்றிக்கொண்டிருந்த நேரம் . என் சிறப்புச் செய்திகள், கட்டுரைகள் மதுரை செய்தி ஆசிரியரால் நிறுத்தப்பட்டு, துண்டாடப்பட்டு, தாமதப்படுத்தப்பட்டு சென்னையில் இருக்கும் ஆசிரியர் என்னைக் காய்ந்துகொண்டிருந்தார். கணிப்பொறியில் அவருக்கு கொஞ்சம் அனுபவம் இருந்திருந்தாலும் "மதுரை பாலிடிக்ஸ்" புரிந்திருக்கும். "முதலில் நீங்கள் கம்ப்யூட்டர் பழகுங்கள்" என்று ஆசிரியரிடம் சொல்ல முடியுமா? ஏத்து வாங்கி, மனஇறுக்கம் உச்சத்தில் இருந்த காலம் . என் பதில்களைக் கேட்காமல் போனை வைத்த ஆசிரியருக்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன் - தனியாக, பாத்ரூமில், அவர் நேரில் இருப்பதைப்போன்ற உடல் அசைவுகளுடன்! டவல் நீட்டிய மனைவி அதிர்ந்துபோய் பார்த்தாள். நானும்!

ஒருவேளை அவள் பார்க்க நேர்ந்திருக்காவிட்டால் அவனுக்கும், குறிப்பாக

எனக்கும் தெரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. மனப்பிறழ்வு முற்றியிருக்கும்.. சோறு, வேலை, இதையெல்லாம்விட மனசு முக்கியம் என்று மனைவி சொன்னபோது, 'அதிகபட்சம் டிரான்ஸ்பர் சிதான் போ' என்ற மனநிலையில் லேசாக மாறினேன்.

ஆனாலும் அதன் பிறகும் இந்த மனவெளிநாடகங்கள் பல வகைகளில் தொடரத்தான் செய்தன. செய்கின்றன. இந்த நாடகங்களில் என்னை கண்காணித்துக்கொள்கிறேன். எத்தனை நாளைக்கு? என்று ஒரு கேலிச்சிரிப்பு உள்ளே ஒலிக்காமல் இல்லை. இந்தமனவெளிநாடகங்களுக்குத் தன்னுபவை பெரும்பாலும், இழைக்கப்படும் அநீதி, அவமானம். அல்லது காமத்தை மூன்றெழுத்தில் அடக்கமுடியாத ஏக்கம்.

தகுதி குறைந்தவர் அதிகாரத்தினால் அபத்தமான காரியங்களைச் செய்யச் சொல்லும்போது, இது சரியில்லை சார் என்று குறைந்தபட்சம் பவ்யமாகக்கூட சொல்லமுடியாத நிலை பலருக்கும் இருக்கிறது. வயிற்றுப்பாடு என்ற பெயரில் அடங்கிப்போகும் இந்த உணர்வின் வெளிப்பாடுகள் வியாதியாக, சமூக வெறுப்பாக, பிறழ்ந்த காமமாக பல முகங்களைப் பூண்டுகொண்டாலும், இதுதான் வாழ்க்கையா என்று நிரந்தர கேள்விக்கு உள்ளாகிறவர்களுக்கு உணர்வுச் சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. இதெல்லாம் வெறும் அலுவலக அதிகாரத்தில் மட்டுமல்ல. வாழ்க்கையின் சாதாரண நடைமுறைகளில், குடும்ப உறவுகளில் நட்பில், காதலில் எல்லாவற்றிலும் பல்வேறு விகிதங்களில் இருக்கிறது. இந்தப் பல்வேறு விகித வேறுபாடுகள்தான் கோபிகிருஷ்ணனின் படைப்புகள்.

ஆனாலும், கோபிகிருஷ்ணனின் படைப்புகளை முதலில் நான் படிக்கவில்லை. எப்படி விடுபட்டது என்று தெரியவில்லை. மழை காலாண்டிழ் யூமாவாசுகியின் பேட்டிதான் அவரை அறிமுகம் செய்து வைத்தது. அந்தப் பேட்டி ஒரு அப்பட்டமான ஆவணம். அந்த நேர்மை என்னை ஆச்சரியப்பட்ட வைத்தது. அந்த நேர்மை அவரது படைப்புகளிலும் உள்ளன.

நான் தொடர்ந்து படைப்புகள் என்ற சொல்லையே பயன்படுத்தி வருகிறேன் என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். கோபிகிருஷ்ணனின் எல்லா எழுத்துக்களும் அதன் நேர்மைக்காக என்பதற்காகப் பிடிக்கும். ஆனால் அவை பெரும்பாலும் தன்வரலாற்றுச் சம்பவங்கள் . 'வர்க்கம்', 'அவிழ்த்துப்போட்டவர்களும்' போன்றவை தரமான எழுத்தான இருந்தாலும் அவை கதையின் தளத்துக்கு விரிவதில்லை. அதேவேளையில் கோபியின் 'மகான்கள்' போல மிக அற்புதமான சிறுகதை தமிழில் மிகச் சிலவே இருக்கும். அதனால் படைப்புகள் என்றே குறிப்பிடுகிறேன்.

அவமதிப்பு, அநீதி இரண்டையும் பேசுவதற்கும் அதைப் பேசினால்

கேட்பதற்கும் சமூகத்தில் இடம் இருக்கிறது. அந்த அவமதிப்புகளை, அநீதிகளை நேரிடையாக விமர்சனம் செய்யலாம். அவை பாதிப்புகளை ஏற்படுத்தினாலும் சமூகத்தடைகள் ஏதுமில்லை.

ஆனால் காதலை அப்படி வெளிப்படுத்த முடிவதில்லை.

ஒரு பெண் அழகாக இருந்தால் அவளிடம் போய் சொல்ல முடிவதில்லை. நான் மணமானவன் என்றால் நிச்சயம் இதைப் பேசவே முடியாது. அவள் மணமானவள் என்றாலோ, என்மீது காவல்துறை வழக்கு பதியவும் நேரிடலாம். இங்கே தொடுதல் என்பதே புணர்தலாக கருதப்படுகிறது. ஒரு பெண்ணுடன் (யார் ஒட்டினாலும்) வாகனத்தில் போவதுகூட (எதற்காக சென்றாலும்) புணர்தலின் முதல்செயலாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இந்த இடத்தில் தான் கோபிகிருஷ்ணன் படைப்புகள் உண்மையைப் பேசுகின்றன.

"என் காதல் அனுபவத்தை நினைத்துப் பார்க்கிறேன். முத்தம் அரவணைப்பு எல்லாமும் இருந்தன. பண்பாட்டையும் உணர்வையும் போட்டுக்குழப்பிக்கொள்ளாதவன் ஆகையால் என் காதலியை நான் திருமணம் செய்துகொள்ளவில்லை" (அம்மன் விளையாட்டு)

பருத்த தனங்கள் குறியில் குறுகுறுப்பை ஏற்படுத்தும் பெண்ணிடமும் (மொர்சி- இடாகினிபேய்களும்) வரம்பு மீறாமல் பழக முடிகிறவரால், என் தோளைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அழைப்பு (பெண்டாக்டர்-இரு உலகங்கள்) வந்தாலும் , வேண்டாம் கைப்பிடியைப் பிடித்துக்கொள்கிறேன் என்று வரம்புக்குள் நிற்பவரால், சமாதானத்திடம் (இடாகினிபேய்களும்,,, ஒட்டம் கதையில் அயனா-நாகராசு) கொள்ளும் காதல் - அவளுக்குக் காதலன் இருக்கிறான் என்று தெரிந்தபோதும், அவள் வேறு நபரைக் கல்யாணம் செய்தபோதும் - மாறாததாய் இருக்கிறது. வரம்புகள் அற்றதாய் இருக்கிறது.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பல விதமான பெண்களைச் சந்திக்கத்தான் செய்கிறோம். எல்லாரையும் சகோதரிகளாக நினைக்க (என்னால்) முடிவதில்லை. வார்த்தைகளை அளந்து பேசி, அவர்களிடமிருந்து விலகி நின்று, அவர்களின் நல்ல அம்சங்களைக்கூட பேசத் தயங்கி.........,

மொர்சியிடமும் பார்வதியிடமும், சிங்கிடமும், அயனதாவிடமும் படைப்பாளி பழகியதைப்போல வெவ்வேறு தளங்களில் பழகுகிற வாய்ப்புகள் நமக்கு எல்லா நிலைகளிலும இருக்கவே செய்கின்றன. ஆனால், மனைவி, மனைவியல்லாத பெண் என்ற பாகுபாட்டுடன்தான் நேசிக்க முடிகிறது. ஒரு பெண்ணைப் பெண்ணாக மட்டுமே நேசிக்கிற நுட்பம் (எனக்கு) கைகூடுவதில்லை. இது பெரிய இழப்பே.

இந்த இழப்பு தேவையற்ற ஈர்ப்புகளிலும் பகல்கனவுகளிலும் தள்ளும்

சக்திகொண்டதாய் இருக்கிறது. அந்தந்த இடத்திலேயே கையைக் கழுவாமல் அப்படியே வீட்டுக்கு வந்து கை நனைத்து காலரா நோயில் விழ்கிறமாதிரி ஆக்கிவிடுகிறது நம் சமூகக் கட்டுப்பாடுகள்.

"நான் நல்லவனா கெட்டவனா என்பது பிரச்சினை இல்லை. இந்த அடைகள் தேவையில்லாதவை. நான் வரம்புகள் அற்றவன்" (இடாகினிபேய்களும்) என்று சொல்பவருக்குக் காதலை வெளிப்படுத்தும் (அக) உணர்வில் சிக்கலற்ற தன்மையைத் தெளிவாகக் காணலாம்.. அவரது படைப்புகளிலும் பேட்டியிலும்.

ஆனால், புறஉலக உணர்வுகளில் அதிகாரத்தையும் அதன் வகைப்பாடுகளையும் அவமானங்களையும் அவரால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. எத்தனையோ வேலைகளில் சேர்ந்து, விலகி, வறுமையில் உழன்று....

ஒரு சிறிய அவமதிப்புக்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதற்காக நான் பதவி விலகியிருந்த நேரத்தில்தான் கோபியின் பேட்டியை படிக்க நேர்ந்தது. " இதற்காக நீங்கள் பதவி விலகவேண்டியதில்லை" என்று அலுவலகமோ ஆசிரியராலோ என்னை அறிவுறுத்தக்கூடும் என்று நம்பினேன். அப்படி நடக்காதபோது அந்நிறுவனத்தில் எனக்கும் என் எழுத்துக்கும் இருந்த மதிப்புதான் என்ன? இந்தக் கேள்வி பெருஞ்சுமையாக இருந்த நேரம் அது. என் எழுத்துகளை முடக்கும் மரணப்பாறையாக மனதில் நின்றுகொண்டிருந்தது., அந்த நேரத்தில்தான் கோபியின் பேட்டியை, ஈரோட்டிலிருந்து திரும்பிவரும் பஸ்பயணத்தில் படித்தேன்.

க்ரியா-விலிருந்து விலகி, பின்பு மீண்டும் சேர்ந்துகொண்டது பற்றி குறிப்பிடும்போது சொல்வார்:

"ஒரு சூழல் உறவுக்கு ஏதுவாக இல்லாவிட்டால் பிரச்சினைக்குரிய நபர் அச்சூழலை விட்டுவிலக வேண்டும். அது எவ்வளவு பெரிய ஊதியத்தை ஈட்டித்தரும் சூழலாக இருந்தாலும் சரி. இதை நான் தார்மீக செயல் என்றே கருதுகிறேன். அப்போதுதான் சூழலுக்கு வெளியேயாவது நட்பு நிலைக்கும். எனக்கு நட்பு மிகமிக முக்கியம்."

கோபியின் இந்த வரிகள் என் மரணப்பாறையைப் புரட்டிப்போட்டது. மனசு லேசானது.

" அவமானத்தைத் தாங்கிக்கொள்ளும் திராணி அற்றவனாக" (நேரமும் நேசமும்) இருக்கும்போது மனச்சோர்வும் மாத்திரைகளுமாய் வாழ்க்கை அமைந்துவிடுகிறது. அவற்றைத் தாங்கிக்கொள்கிற அளவுக்கு மனசு மரத்துப்போனால் பணம், பதவிஉயர்வு இரண்டும் கிடைக்கின்றன. கோபி எதைத் தேர்வு செய்தார் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதானே!

கோபி கிருஷ்ணன்

ஆனந்த்

1967-68 வாக்கில். நான் முதலாமாண்டு இளங்கலை வகுப்பு படித்துக் கொண்டு இருக்கிறேன். நண்பர் பதியின் அறைக்கு ஏறக்குறைய தினமும் செல்வது வழக்கம். அங்குதான் நான் பல முக்கியமான நண்பர்களைச் சந்தித்தது: திரு.ந.முத்துச்சாமி, திரு.ஞானக்கூத்தன், திரு. ராமகிருஷ்ணன் (க்ரியா) என்று பலர். இங்கேதான் கோபிகிருஷ்ணனையும் முதலில் பார்த்தது.

கோபிகிருஷ்ணன் பதியின் வகுப்புத் தோழராக இருந்தவர். இருவரும் சென்னை மாநிலக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். அடிக்கடி பதியின் அறைக்கு வருவார் கோபி. வெள்ளை பேண்ட், வெள்ளை முழுக்கை சட்டையுடன்தான் எப்போதும் வருவார். அவரிடம் உணர்வின் நுட்பமும் உணர்ச்சியின் மென்மையும் பார்த்த உடனேயே தெளிவாகத் தெரியும். அவருக்கு உள்ளே நடப்பது வெளிப்படையாக அவரது முகத்தில் கண்ணாடிப் பேழைக்குள் வைத்த பொருள்போல் அனைவருக்கும் தெரிந்துவிடும்.

தன் எதிர்வினைகளை உடனுக்குடன் வெளிப்படுத்திவிடுவதுதான் அவரது இயல்பு. அவ்வாறு செய்ய இயலாத நேரங்களில் அவர் படும்பாட்டை நான் பல முறை கூட இருந்து பார்த்திருக்கிறேன். ஆனால் நிறைய நாட்களுக்கு அவரால் தன் இயல்பை அடக்கி வைத்திருக்க முடியாது. கூடிய விரைவில், பின்விளைவுகளைப் பற்றிய கவலை சிறிதும் இல்லாமல், தன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டிவிட்டு வந்துவிடுவார். பின்விளைவுகளைப் பற்றிய கவலை இல்லாமல் இருப்பதுதான் கோபியின் அடிப்படை இயல்பு என்பது அவருடன் பழகிச் சில நாட்களே ஆன நண்பர்களுக்குக் கூடத் தெரிந்து விடும். அவருடைய

இந்தச் சுபாவம் அவருக்குப் பல இன்னல்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பது நண்பர்கள் வட்டத்தில் பரவலாகத் தெரியும். இந்த இயல்பு சரியா தவறா என்று அறுதியிட்டுச் சொல்ல யாரால் முடியும்?

அன்பும் நேசமும் கருணையும் இயல்பாகக் கசிந்து கொண்டிருக்கும் நெஞ்சம் . அந்த அன்பைக் கொட்டிக் காட்டிவிட அவர் படும் பாடு அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும். சற்று நேரத்துக்கு முன் பார்த்த ஒரு பெண்ணுக்கு அவர் தந்தையாகி விடுவார். அந்தப் பெண் அவரை, 'டாடி', என்று அழைக்கத் தொடங்கிவிடும். தான் அன்பு பொழியும் ஒருவரின் தேவையை நிறைவு செய்வதற்கு அவர் மிகுந்த அக்கறையும் சிரமமும் எடுத்துக் கொள்வார்.

இந்த அவருடைய இயல்பு அவருக்குப் பெரிய பிரச்சனைகளைக் கொண்டு வந்தது. அவருடைய மனம் பாதிக்கப்பட்டதுகூட இதனால் தான் என்று கூற முடியும். மிகவும் மனம் வருந்தியிருந்த நாட்களின் போது நாங்கள் இருவரும் பல மாலை நேரங்களை ஒன்றாகக் கழித்ததுண்டு. கடற்கரையிலும் மாநிலக் கல்லூரி வளாகத்திலும் மற்ற பல இடங்களிலும் நாங்கள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்ததுண்டு. மனித மனம் பற்றிய பல விஷயங்களைப் பல்வேறு கோணங்களில் நாங்கள் ஆராய்ந்ததுண்டு.

அதிகாலை நேரங்களில் கொஞ்ச நேரம் நடந்து செல்வது அவர் மனத்துக்கு ஆறுதல் அளிக்கக்கூடும் என்று நான் ஒரு நாள் யோசனை சொன்னேன். சில நாட்கள் கழித்து நாங்கள் சந்தித்த பொழுது தான் தினமும் காலை வேளைகளில் நடந்து செல்வதாகவும் அது மிகவும் உதவிகரமாக இருப்பதாகவும் சொன்னார். தன் எண்ணங்களையும் உணர்ச்சி நெரிசல்களையும் எழுதுவது அவருக்கு உதவியாக இருக்கக் கூடும் என்று ஒரு முறை நான் ஆலோசனை சொன்னேன் அவரும் எழுதத் தொடங்கினார். நோட்டுப் புத்தகங்களை வாங்கிவைத்துக் கொண்டு எழுதினார். நிறைய எழுதினார். சில நாட்களுக்கு ஒருமுறை மாலையில் நாங்கள் சந்திக்கும்போது தான் எழுதியதைக் கொண்டுவந்து காண்பிப்பார். எழுதுவது மனத்துக்கு மிகுந்த ஆறுதலாக இருப்பதாகக் கூறுவார்.

சில மாதங்கள் கழித்து ஒருமுறை, தான் எழுதுவதைப் பிரசுரிப்பது பற்றிப் பேசினார். அந்த நேரத்தில் அவருக்கு நான் கூறிய ஆலோசனை பிரசுரிக்க வேண்டாம் என்பதுதான்.

'ஏன், நான் எழுதுவது நன்றாக இல்லையா?' என்று கேட்டார்.

'நன்றாக இருக்கிறது. இந்த மாதிரியான விஷயங்களை இதுவரை இந்தக் கோணத்தில் யாரும் எழுதியதாகத் தெரியவில்லை. ஆனாலும் பிரசுரிக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்: என்று

சொன்னேன்.

'ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'

'கோபி, 'எழுத்து' என்ற கோணத்தில் பார்க்கும்போது நீங்கள் எழுதுவது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் உங்களை எழுதச் சொன்னது ஒரு இலக்கிய ஆசிரியராக நீங்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. உங்கள் மனச்சிக்கல்களிலிருந்து நீங்கள் முற்றிலுமாக வெளியே வரவேண்டும் என்பதுதான் என் விருப்பம். உங்கள் எழுத்துக்கள் பிரசுரம் ஆகும் பட்சத்தில் உங்களை சிறந்த எழுத்தாளராக மற்றவர்கள் கருதக்கூடிய சாத்தியம் நிறையவே இருக்கிறது. நீங்கள் புகழ் பெறலாம். மனித மனத்தின் சில பிரதேசங்களைப் பற்றி புதிய வெளிச்சங்கள் கூட பிறருக்குக் கிடைக்கலாம். ஆனால், அப்படி ஆகிவிடும் பட்சத்தில், மனச்சிக்கலில் இருந்து நீங்கள் முழுமையாக விடுபடுவது என்பது நடக்காமல் போய்விட முடியும். உங்கள் மன அமைதியை விட இலக்கியம் என்பது முக்கியமானதாக எனக்குப் படவில்லை. மன வருத்தம் இல்லாமல் நீங்கள் .இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்,' என்று சொன்னேன்.

'பிரசுரம் செய்வதால் ஏன் மன அமைதி கிட்டாமல் போய்விடும் என்கிறீர்கள்? எழுதுவது மனத்திற்கு நன்றாகத்தானே இருக்கிறது?'

'தானாக மனத்தில் ஏற்படும் கிலேசங்களையும் எண்ணக் குவியல்களையும் எழுதுவது மனத்தின் அந்தப் போக்குகளிலிருந்து விடுபட உதவலாம் என்பதற்காகத்தான். எழுதி முடித்த பின்பு அந்த விஷயங்களில் இருந்து மனம் விடுபட்டு விடலாம் என்ற எண்ணத்தினால்தான். உங்கள் மன இயக்கங்களைப் பற்றிய புறவயமான புரிதலும் ஒரு சேய்மையும் உங்களுக்குக் கிடைக்கக் கூடும் என்ற எண்ணத்தில்தான். ஆனால் எழுத்தாளராக நீங்கள் அதே விஷயங்களைப் பற்றி எழுத முற்படும்போது, அதை விட்டு விலகிப்போகும் விழைவுக்குப் பதிலாக மேலும் ஆழமாகவும் அகலமாகவும் அந்தப் பிரதேசங்களிலேயே நீங்கள் உலவிக் கொண்டிருப்பீர்கள். இன்னும் அதில் தோய்ந்து விடுவீர்கள். மனச் சிக்கல்களில் இருந்து நீங்கள் விடுபட அது சற்றும் உதவியாக இருக்கும் என்று தோன்றவில்லை. யோசித்துப் பாருங்கள்.

சில நாட்களுக்குப் பின் நாங்கள் மறுபடி சந்தித்தபோது, அவருடைய மனம் பிரசுரம் செய்யும் எண்ணத்தில்தான் இருக்கிறது என்பது தெரிந்தது. இதற்கும் பல பின்னணிக் காரணங்கள் இருந்தன.

'சரி கோபி, உங்கள் எழுத்துக்களைப் பிரசுரம் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புவதால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். முடிவு உங்களுடையதுதான். என்று சொன்னேன்.

பிறகு 'மையம்' ராஜகோபாலன் தான் கோபியின் ஆறு கதைகளைப்

புத்தமாகப் பிரசுரிப்பதாக முன்வந்தார். கவிஞர் ஷாஅ அட்டைப்படம் போட்டுக் கொடுத்தார். 'ஒவ்வாத உணர்வுகள் என்ற பெயரில் கோபியின் முதல் புத்தகம் வெளிவந்தது. அதன் பிறகு நடந்தது எல்லோருக்கும் தெரியும்.

எனக்குப் கோபியை மிகவும் பிடிக்கும். என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு எழுத்தாளனாக உருவாவதைவிட மன இறுக்கங்களிலிருந்து விடுபடுவதே முக்கியம் என்று பட்டது. அவர் எழுத்துக்களின் மீது எனக்கு எப்போதுமே நல்ல அப்பிப்பிராயம் இருந்து வந்திருக்கிறது. அவர் எழுத்து நன்றாக இல்லையென்றால் பிரசுரம் செய்துவிட்டுப் போகட்டும் என்று பேசாமல் விட்டிருப்பேன். அவர் எழுத்து அவருக்கு நிச்சயம் பெருமை சேர்க்கும் என்பதினால்தால் பிரசுரம் பற்றி நான் தயக்கம் கொண்டேன்.

என் ஆலோசனை சரியா, அவரது எழுத்துக்களைப் பிரசுரிக்காமல் இருந்திருந்தால் அவருடைய மனம் இன்னும் அமைதியுடனும் அவரது வாழ்க்கை இன்னும் சீராகவும் இருந்திருக்குமா, ஒரு நல்ல எழுத்தாளன் கிடைக்காமல் போயிருப்பது இலக்கிய உலகத்துக்கு பெரிய இழப்பாக இருந்திருக்குமா, என்ற கேள்விகளுக்கெல்லாம் என்னிடம் எந்த பதிலும் கிடையாது.

பணத்துக்காகவோ அல்லது வேறு எந்த சுயநலக் காரணங்களுக்காகவோ கோபி எப்போதும் எந்த விஷயத்திலும் யாரிடமும் சமரசம் செய்து கொண்டாத எனக்கு நினைவில்லை. சரியோ தவறோ, முதலிலிருந்து கடைசிவரை,எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கோபி தன் தீர்மானங்களின் படிதான் வாழ்ந்தார். அது முக்கியமான ஒரு விஷயமாகப் படுகிறது.

அடுத்த

புது எழுத்து

இதழுடன்

கேப்ரியல் கார்ஸியா மார்க்வஸ்

சிறப்பிதழ் மொழிபெயர்ப்பு இணைப்பிதழாக வெளிவரும்

"டேபிள் டென்னிஸ்"

சில குறிப்புகள்

சா. தேவதாஸ்

"……….. மனச்சிதைவின் ஆரம்ப கட்டம் ஆரோக்கியமானது. ஆக்கபூர்வமானது. உலகிற்காக வேடமணிந்து சகல மதிப்பீடுகளை ஏற்றுவாழ்ந்து வருவதனால் தனக்குள் அந்நியப்பட்டுப்போகும் மனிதன் தன்மேல் திணிக்கப்பட்ட வேடத்தை எதிர்த்துக் கிளம்பும் கட்டம் அது…."

-டேவிட் கூப்பர்.

அவ்வப்போது கிடைக்கும் வேலைகளை ஏற்று, வேலைகளால் அழுத்தங்கள் அதிகமாகும் போது வேலைகளை விட்டு நீங்கி, அதிகாரப் போக்கை நிறுவன இறுக்கத்தை எதிர்த்து வாழ்ந்து வந்தவர் கோபி என்னும் எளிய பாசாங்கற்ற மனிதர். மனநல பிரச்சனைகளுக்கான ஆலோசனை மையம் நடத்திய அவர் மனநல பிரச்னைகளுக்கு ஆளானார்.

மனநோய் சிகிச்சைகள் என்பவை போலியானவை, சிகிச்சையளிப்பதற்கு பதிலாக, புதியதொரு ஒழுங்கு நிலைக்கு, நிறுவனத்துக்குக் கட்டுப்பட்டுப்போகும் பணிவு நிலைக்கு ஆளாக்குபவை என்னும் எதிர் உளவியல் பார்வையைத் தயக்கமின்றி முன்வைத்தவர். 'பைத்தியம்(அ)சித்தப்பிரமை என்பதும் அறிதலுக்கான வழி' என்கிறது இப்பார்வை.

"ஒரு மனிதன் சமூக நியமங்களில் மூச்சுத்திணறி, தன்னை மீட்டு மறுகட்டமைத்துக் கொள்ளவென உள்ளார்ந்திருக்கும் வேட்கையில் மாறுபட்ட, புரிந்து கொள்ள முடியாத நடத்தையைக் கொண்டவனாய் இயங்க ஆரம்பிக்கையில் அந்த நடத்தையைக்கண்டு பயப்படும் பண்பாட்டுக் காவலர்கள், அதிகார வர்க்கத்தினர் அவனுக்கு 'மனச்சிதைவு' என்று முத்திரை குத்துகிறார்கள்."

வான்காவையும் காப்காவையும் இப்படித்தான் சமூகம் கருதிற்று. நகுலனின் எழுத்துக்கள் இங்கிருந்து தொடக்கம் கொள்கின்றன. ஆன் செக்ஸ்டனின் கவிதைகள் இப்பிரக்ஞை நிலையின் தீவிரத்தையே

முன்வைக்கின்றன.

ஆனால், இவர்களின் படைப்புகளுக்கும் கோபியின் படைப்புகளுக்கும் அடிப்படை வித்தியாசம் உண்டு. இவர்களெல்லாம் அந்த மனநிலையின் சலனங்களை அதே அர்த்தத்துடன் வெளிப்படுத்தியிருக்க, கோபியோ, பரிகசிப்பவராக, எள்ளி நகையாடுபவராக, எல்லாவற்றையும் போட்டு உடைப்பவராக இருக்கிறார்.

1993 ஆம் ஆண்டின் நான்கு மாதங்களில் "இளமையான நெஞ்சத்துடன் வானில் உயரப்பறந்து கொண்டிருந்த" மனப்பதிவுகளைக் கொண்டுள்ள "டேபிள் டென்னிஸ்" மந்திர வாசகங்களாய், உரத்த சிந்தனைத் தெறிப்புகளாய், பகடிகளாய், வேடிக்கை விளாசல்களாய்ச் சிதறிக் கிடக்கிறது.

கதை, பாத்திரங்கள், கதைப்பின்னல், அர்த்த உருவாக்கம் என்னும் எல்லாவற்றையும் புறக்கணிக்கும் எளிய பிரதி இது. கொச்சை வார்த்தைகளில் ஓர் ஆணின் பாலியல் ஈடுபாடுகளைப் பாவனை இல்லாது, தயக்கமில்லாது முன்வைப்பது. இதில் டெபோனேர் அழகியும் பேட்டை அம்மனும் ஒன்றாகிவிடுகிறார்கள். காஃப்காவில் ஜோஸப் கே. வந்தால் இங்கே கே.வருகிறார். மில்லர் வருகிறார். பாலுணர்வில் அழகியலைக் காணும் 'மாம்' வருகிறார். பாலியல் எழுத்துக்களைத்தந்தphol Brown, Kathyவருகின்றனர்.

"என் உன்னிடமிருந்து இந்தப்பிணைவாடை? என்ன, நீ ஏக பத்தினி விரதனா? அந்த ஜெயந்தி,மாலா,அப்புறம் அந்த மெலினைஸ். வேறு யார்? இரவில் இவர்களது நிர்வாணங்களுடன் சார்த்தரா பேசிக்கொண்டிருந்தாய்! பதினான்கு முதல் சுயமைதுனம் செய்யவில்லையா? உடன் பணிபுரியும் செவிலிகளின் முலைகளைப் பற்றி உமிழ்நீர் சொட்டப் பிரசங்கம் செய்யவில்லையா? பழையதெல்லாவற்றையும் எப்பொழுது மறந்தாய் கே? எப்பொழுது சந்நியாசி ஆனாய்?

என்று தொடங்கும் கோபியின் குரல், ஒழுக்கவியலைக் கேள்விக்குள்ளாக்குகிறது.இதன் அதீத விமர்சனமாக, "பண்பாடு ஒழிய வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் நேர்மையாக இருக்க முடியும்" என்னும் வரிகள் இடம் பெறுகின்றன.

உளப்பகுப்பாய்வு, மனநோய் சிகிச்சை, மருந்துகள் என்றெல்லாம் உளவியல், எந்த நெருக்கடியிலிருந்து மனிதன் பேதலித்து வெளிவந்தானோ, அதே நெருக்கடிக்கு மீண்டும் அவனை ஆட்படுத்துபவனாக இருப்பதால், எதிர்உளவியல் என்னும் குரல் ஒலித்தது.

சகமனிதனிடம் அன்புகாட்ட இயலாதபோது, மதிப்புகள் காலியாகிவிடும்போது, பாவனைகளே இயல்பான தோற்றங்களாகிவிடும் போது, "பண்பாடு ஒழிய வேண்டும்" என்றுதானே கூச்சலிட முடியும்!

கூடவே கலகக்குரல் கொடுக்கிறது: "அதிகாரிகளை மிரட்டு. எதிர்த்துக் கிளர்ச்சி செய். கத்தார் நல்லவர். போலிகளைப் பொசுக்கு. சாம்பலில் மனைவெளிவாங்கு."

ஒழுக்க நியதிகளைப் புறக்கணிக்கவும், அதிகாரத்தை எதிர்க்கவும், எதிர்கலாசாரத்தில் திளைக்கவும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதே, பாலியல் இன்பத்தைப் பேசுதல்: இதற்கு, தன்பிம்பம் குறித்த அக்கறையின்மையும், தயக்கங்களற்ற மனமும், எதனையும் புறக்கணிக்கும் அலட்சியம் போக்கும் அலசியம். இப்படித் தொடங்கிப் பேசுபவைதான் "ஆயிரத்தோரிரவு அரபு கதைகள்", போன்றோர் எழுத்துக்கள். பொகாஸியோ கதைகள் இந்தத்தளத்திலானவையே. 'ஆயிரத்தோரிரவு கதை' களில் தன்னைப் பறிகொடுத்த ரிச்சர்ட் பர்ட்டனின் ஆளுமை இத்தகையதே. கோபியின் ஆளுமையும் தான்.

ஆதாரங்கள்:

1. டேபிள் டென்னிஸ், கோபிகிருஷ்ணன், தமிழினி 1999,

2. மனச்சிதைவு என்பது என்ன? டேவிட் கூப்பர் - சனதருமபோதினி தொகுப்பு 2001

கநா.சு. என்னும் ஓர் ஆன்மா

கோபி கிருஷ்ணன்

'சாமர்செட்மாம்' எங்கோ குறிப்பிட்டதாக நினைவு:

'என்னிடம் இயற்கையான வரப்ரசாதங்களை விட திறமை அதிகமாக இருக்கிறது: திறமையை விட நற்பண்புகள் அதிகமாக இருக்கின்றன.

இது ஒரு முக்கியமான வாசகமாகத் தோன்றுகிறது. அறிவு என்பது பாரம்பரியம் சார்ந்த விஷயம். திறமை கற்றுக்கொள்ளும் ஒன்று. இரண்டும் தேவைதான். மறுப்பதற்கில்லை. ஆனால் எல்லாவற்றையும் விட ஒரு மனிதனுக்குச் சிறப்பை அளிப்பது நற்பண்பு ஒன்றாகவே இருக்க முடியும். இது ஆன்மா சார்ந்த விஷயம். இது மட்டும்தான் மிக முக்கியமான விஷயமாக எனக்குப்படுகிறது. சிக்கல், குழப்பம், முரண்கள் முதலியவற்றைப் பிரதான அம்சங்களாகக் கொண்ட இன்றையச் சமூகச் சூழலில் இது வலியுறுத்தப்படக்கூடிய ஒன்றும்கூட.

இன்றைய நடப்புகளை உணர்வுபூர்வமாகக் கூர்ந்து நோக்குபவர்களுக்குச் சில அம்சங்கள் துல்லியமாக விளங்கும்: 1. படிப்பு, ஒரு துறையில் இருக்கும் வல்லமை, பதவி, வசதி போன்ற சௌரியங்களில் 'நான்' உணர்வுக்குக் கிறக்கம் தரும் ஒரு பாதுகாப்பைத் தேடிக்கொண்டு பிறர்மேல் தேவையில்லாமல் ஆதிக்கம் செலுத்தும் மனப்பாங்கு கொண்ட உயர்மட்ட மனிதர்கள்: 2. ஒரு சக்தி வாய்ந்த ஆளுமை வாய்க்கப்பெற்றதை அனுகூலமாகக் கொண்டு தன்னுடைய கருத்துகளை, தீவிர விருப்பு-வெறுப்புகளைப் பிறர் மேல் புகுத்தி அவர்களிடையே சுயமாகக் கருத்து உருவாவதை முற்றாக நிர்முலமாக்கி, அவர்களுடைய இயல்பான தன்மைகள், தனித்துவம் என்கிற புனிதம் போன்ற மதிக்கத்தக்க மனித அம்சங்கள்மீது சமாதி எழுப்பி இரண்டாம்பட்ச மனிதர்களை உருவாக்கும் வன்செயலை மிகவும் நாசுக்காகவும் பூடகமாகவும் செய்துகொண்டிருக்கும் அபிப்பிராயங்களை உருவாக்கும் தலைவர்கள்: 3. வாக்குச் சாதுரியத்தின் துணை கொண்டு தங்களைத் தவிரப் பிறர் யாரும் உன்னதத்தைச் செய்யவில்லை என்று தங்களை நிலைநாட்டிக்கொள்ளும் சக்திவாய்ந்த விளம்பரதாரர்கள்: 4. பிறருடைய செயல்களில் குறை கண்டுபிடித்து அதனால் நிறை என்னும் பிரமையைத் தங்களைச் சுற்றி உருவாக்கிக்கொள்ளும் பெரியமனிதர்கள்: 5. கடைசியில், மிக மிகப் பரிதாபகரமாக இவர்களின் கையில் சிக்கிக் குழம்பித்தத்தளிக்கும் சராசரிகள். சுவாதீனம் என்பது சிரமசாத்தியமாக இருப்பதில் எந்தவித ஆச்சரியமுமில்லை.

இந்தச் சூழலில் க.நா.சு. என்கிற ஒரு நல்ல மனிதர் வாழ்ந்திருந்தார் என்பது ஒரு பெரிய விஷயம். அவரைச் சகமனிதன் என்ற ரீதியில் அணுகுகிறேன். அப்படி அணுகுவதற்கு மனிதன் என்ற அடிப்படையில் எனக்குப் போதிய சுதந்திரம் உண்டு. நான் அவருடன் பழகிய சொற்பகாலத்தில் அவரைப்பற்றி நான் உணர்ந்துகொண்டதை மிகைப்படுத்தாமல் எனக்கு நானே பொய் சொல்லிக்கொள்ளாமல் இங்குத் தொகுத்துத் தர விழைகிறேன்.

சாதாரணமாக எழுத்துலகில் நுழையும் புதியவனுக்குப் பல அதிர்ச்சிகள் காத்துக் கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. 'கண்டவனெல்லாம் எழுத ஆரம்பித்துவிட்டான்' போன்ற கொச்சைகளை நான் காதுபடக் கேட்க நேர்ந்ததுண்டு. இதை நான் விஸ்தரிக்க விரும்பவில்லை. க.நா.சு என்கிற முதிர்ந்த எழுத்தாளருக்கு இது போன்ற அலட்சியமான, பொறுப்பற்ற மனோபாவம் இருந்ததில்லை. இன்றைக்கே ஆரம்பித்தவனென்றாலும் படித்துப் பார்ப்போம். நன்றாக இருந்தால் ஊக்குவிப்போம் என்ற ஆரோக்கியமான எண்ணம் அவரிடம் இருந்தது. புதியவர்களை ஊக்குவிக்கும் குணமும் ஆரம்ப கால எழுத்தாளர்களைத் தட்டிக் கொடுக்கும் ஒரு தகப்பனார் மனப்பாங்கும் அவரிடம் இருந்தது. போதுமான அளவு கனம் இருந்த எழுத்துக்களை அவர் மனப்பூர்வமாக அங்கீகரித்தார் என்றே சொல்லவேண்டும். ஒரு படைப்பில் வேண்டுமென்றே ஓட்டைகள் கண்டுபிடித்து நிராகரிக்கும்

அவரிடம் சிறிது கூட இல்லை. இதெல்லாம் ஓர் ஆரோக்கியமான மனநிலையைத் தான் காட்டுகிறது.

இங்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட வேண்டும். தில்லியிலிருந்து சென்னைக்குக் குடிவந்த புதிதில் ஓர் இலக்கியக் கூட்டத்தில் க. நா. சு. பேச நேர்ந்தது. பேச்சின் நடுவே நான்கைந்து காரசாரமான கேள்விக்கணைகள் அவரை நோக்கித் தொடுக்கப்பட்டன. தனக்குச் சென்னையிலுள்ள இலக்கியச்சூழல் இன்னும் சரிவரப் பரிச்சயமாகவில்லை யென்றும் ஆகையால் தன்னிடம் எந்தவித அபிப்பிராயமும் தற்போது இல்லையென்றும் தயங்காமல், மழுப்பாமல், பணிவுடன் சொன்னார். இது அவரிடம் இருந்த இயல்பான ஒரு நற்பண்பு என்று கொள்வது பிசகாகாது. 'ஆகா! நான் எவ்வளவு பெரிய எழுத்தாளன். ஏதாவது ஓர் அபிப்பிராயத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால் எழுத்தாளன் என்ற என் படிமம் என்ன ஆவது? போன்ற பந்தாக்கள் அவரிடம் இல்லாமல் இருந்தது. அடிப்படையில் அவரது ஆளுமையில் ஓர் அடக்கம் பொதிந்திருந்தது. தெரியாததைத் தெரியாது என்று ஒப்புக்கொள்ளும் நேர்மையும் மனப்பூர்வமாக உணர்ந்ததை விமரிசனங்களுக்கு அஞ்சாமல் ஆணித்தரமாகக்கூறும் தைரியமும் அவரிடம் இருந்தன. அவர் மிகவும் மனோபலம் வாய்ந்தவராகத் தான் இருந்திருக்க வேண்டும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் தட்டவில்லை. 'செஸ்டர்டன்' சொன்ன வாழ்வில் விழைவும் அதன் எதிர்மறையை எதிர்கொள்ளும் துணிவும் ஒருங்கே அமைந்த பலம், தைரியம், திடம் அவருடைய ஆளுமைக்கு ஒரு சிறப்பைத் தந்தது என்று சொல்லவேண்டும்.

நான் பள்ளி இறுதி வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த போது ஒரு செல்வந்த மாணாக்கர் என்னுடன் சகமாணவராக இருந்தார். அவரிடம் மோட்டர் வாகனம் இருந்தது. ஆனால் அவர் நடந்தே தான் பள்ளிக்கு வருவார். வேண்டுமென்றே சற்றுநைந்து போன சட்டையைத்தான் அணிவார். தான் பணக்காரன் என்று தெரிந்தால் பிற மாணவர்கள் தன்னுடன் நெருங்கிப்பழக மாட்டார்கள் என்ற காரணத்தால்தான் அவர் அவ்வாறு நடந்துக்கொண்டார். க. நா. சு. தன்னைச் சுற்றிலும் மிடுக்கையும் தோரணையையும் கொண்ட சூழலை உருவாக்கிக் கொள்ளவில்லை. ஆகையால் தான் அவருக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். எழுத்து அந்தஸ்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவரிடம் பேசத்தயங்கிய சில நண்பர்களிடம் 'நீங்கள் என்னிடம் தாராளமாகப் பழக மாட்டேன் என்கிறீர்கள் என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது' என்று குறைபட்டுக்கொண்டார்.

க. நா. சு.விடம் இருந்த முக்கியமான பண்பு அவரது எளிமை. அவருடைய அறைக்குச் (சென்னையில் அவர் தங்கியிருந்த வீடு) செல்ல ஏற்கனவே அவரிடம் ஒரு நேரத்தைக் குறித்து கொண்டு பிறகு சரியாக இத்தனை நேரம்தான் பேச அனுமதி போன்ற சிக்கல்கள் இல்லை. எந்தச்

சமயத்திலும் யார் வேண்டுமானாலும் போய்ப் பேசிவிட்டு வரலாம் என்ற சுதந்திரம் அவரிடம் நிலவியது. இதைக் குறிப்பிடுவதற்கு எனக்குச் சொந்த முறையில் ஒரு காரணம் உள்ளது. 1979-ல் ஓர் எழுத்தாளர் வீட்டுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு (அப்பொழுது வேலை பார்த்த) அலுவலகரீதியில் ஏற்பட்டது. கொளுத்தும் வெயிலில் கிட்டத்தட்ட அவருடைய விலாசத்தைத் தேடி அலைந்து கண்டுபிடித்து ஒருவாறு அவருடைய வீட்டை அடைந்தபோது 'அவர் வீட்டில் யாரையும் பார்ப்பதில்லை' என்று அவரது மனைவியார் நிர்தாட்சண்யமாக என்னை விரட்டியடித்த என்னை இன்னும் உறுத்திக் கொண்டிருக்கும் கசப்பான ஒரு நினைவு. இலக்கிய வம்பிலோ அரசியலிலோ மாட்டிக்கொள்ளாமல் ஒதுங்கி வாழ்வதில் பாதிகாப்பாக உணர்வதால் அந்த எழுத்தாளர் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை.

க. நா. சு. அடிப்படையில் சிக்கல் இல்லாத மனிதர். தன்னுடைய படைப்புகளைப் பிரசுரத்துறையில் தங்களை ஆழமாக நிர்மாணித்துக்கொண்ட பிரபல புத்தக வெளியீட்டாளர்கள் தான் போட வேண்டும் என்கிற கெடுபிடிகளையெல்லாம் அவர் வைத்துக்கொள்ளவில்லை. ஒருநண்பர் (பிரசுராலயம் என்று ஒன்றும் அவருக்கில்லை) க. நா. சுவின் கவிதைத்தொகுப்பு ஒன்றைப் போட அவரிடம் அணுகினார். க. நா. சு தன்னிடம் இருந்த கவிதைகளை உடனே அவரிடம் கொடுத்தார். அந்த நண்பர் என்னிடம் சொன்ன 'He just gave it for the asking' என்ற வாக்கியம் என் காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

கடைசி காலத்தில் தனது எழுத்துக்கள் இந்த இந்தப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது என்ற பிரக்ஞையும் அக்கறையும் கூட அவரிடம் இல்லாமல் போயிருந்தது. விஷயம் பிரஸ்தாபிக் கப்பட்டபோது அவரது துணைவியார் எடுத்துச் சொல்ல, 'ஓ அப்படியா?' என்று கேட்கும் நிலை ஏற்பட்டிருந்தது. இந்தத் தள்ளாமை ஒரு புறமிக்க எதைப்பற்றியும் கவலைப்படாமல் கண்களை உற்றுப் பார்த்துக்கொண்டு குறைபட்ட பார்வையுடன் தன் எழுத்துப்பணியைத் தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டிருந்தார்-கிட்டதட்ட ஒரு கர்மயோகியை ஒத்த நிலையில்.

முழுக்க முழுக்க எழுத்துலக வாழ்க்கையை அவரால் வாழ முடிந்திருக்கிறது இன்றைய சூழலில் இது ஒரு மகத்தான விஷயம். சாதனையும் கூட. அவர் வாழ்ந்த காலத்திலேயே அவருக்கு அங்கீகாரமும் மதிப்பும் இருந்தது இலக்கிய உலகம் அவருக்குச் செய்த சிறப்பாகும்.

ஒரு சிறந்த படைப்பாளி நம்மிடையே இன்று இல்லாதிருப்பதோடு கூட ஒரு சிறந்த மனிதரும் இல்லாமல் போய்விட்டதுதான் இழப்பு உணர்வை இரட்டிப்பாக்குகிறது.

வெளி ரெங்கராஜன்

கோபிகிருஷ்ணனின் எழுத்தும் வாழ்க்கையும்

கோபிகிருஷ்ணன் தான் வாழுமிடத்திலும், வேலை செய்யுமிடத்திலும் தான் சந்திக்க நேர்ந்த மனிதர்களைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார். அவருடைய வாழ்க்கையில் பலதரப்பட்ட மனிதர்கள் வந்து போகிறார்கள். மனிதர்கள் மட்டுமல்ல பூச்சிகள், கரப்பான்கள், சிலந்திகள், நாய்கள் இவைகளும் தான் தன்னுடைய ஜீவிதத்துக்காக போராடும் எந்த உயிரினமும் அவருக்கு சுவாரஸ்யத்தை அளிக்கின்றன. பொருட்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. வாழ்வதற்கான எல்லா உரிமையும் கொண்டவை என அவற்றின் உரிமையை இவர் மதிப்பவராக இருக்கிறார். அதற்கு இடையூறு செய்ய யாருக்கும் உரிமைஇல்லை என நினைக்கிறார். இத்தகைய வாழ்க்கைக்கான எத்தனிப்பில் அவர் சந்திக்கும் மனிதர்களும், உயிரினங்களும் தத்தமதுபோக்கில் அவரிடம் ஒரு உறவையும் பாதிப்பையும் ஏற்படுத்திவிட்டு செல்கின்றன. ஒரு நெகிழ்ச்சியுடன் உடனே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடிகிறது இவரால். ஆனால் உறவுகள் எவ்வளவுக் கெவ்வளவு நெகிழ்ச்சி கொண்டிருந்தாலும் சிக்கல்களும் நிரம்பியிருப்பதை இவர் பார்க்கிறார். அதனால் அவற்றின் நிரந்தரத்தன்மையை இவர் கோருவதில்லை. உறவுகள் நிரந்தரமற்ற தன்மைகளாலேயே நிரம்பியிருக்கின்றன. அதனால் கணநேரமானாலும் அந்த இன்பம் இவருக்கு மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது. இப்படி மதிப்பு வாய்ந்த கணங்களை இவர் கூட்டிக்கொண்டே போகிறார். ஒரு உறவின் இழப்பு சுலபத்தில் இன்னொரு உறவால் ஈடுகட்டப்படுகிறது. இதனால் இழப்புணர்வில் சோகம் இருந்தாலும் உயிர்ப்புக்கான கணங்கள் மீண்டும் மீண்டும் உருவாகிக்கொண்டே போகின்றன.

ஆட்டம் சிறுகதையில் அயானாவின் உறவை இழந்த நாகராசுக்கு அவளுடைய முகவாய்க்கட்டையைப் பிடித்து ஆறுதல் அளித்தது நினைவுக்கு வந்த, அந்த மிருதுத் தன்மையின் நினைப்பு பரவசமளிக்கிறது. மனிதாபி மானமற்ற அதிகாரியிடம் கடுமையாக நடந்து கொண்ட பிறகு (நியாயமாகவே) அதற்காகத் தோழி வயலெட்டின் வருத்தம் பற்றி கவலைப்படுகிறார். அவிழ்த்துப் போட்ட அதிகாரியும்...... கதையில்.

தணிக்கையிலிருந்து தப்பிய கதையில் பிலோமியின் மூக்கை நேசித்த அவருக்குப் பிலோமினை இழந்தாலும், அவளுடைய மூக்கின் அருகாமை கிடைத்த ஒரு இன்பமான தருணம் போதுமானதாக இருக்கிறது. நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லாத பல ஏமாற்றங்களிலிருந்து விடுபட அவருக்கு எண்ணற்ற வழிகள் உருவாகின்றன.

பொதுவாக பெண்கள் ஒரு குறுகுறுப்பான பாலியல் ஈர்ப்பை அவரிடம் உருவாக்குகிறார்கள். பெண்களிடம் ஒரு அபரிதமான தோழமை அவருக்கு எற்படுகிறது. அது உடல் ஈர்ப்பு சார்ந்ததாகவும் இருக்கிறது. அதைக் கடந்ததாகவும் இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் வரையறுக்க இயலாததாய் இருக்கிறது. இனிமையான வக்கிரம் கதையில் அவருடன் வேலைசெய்யும் ஹாரியட் என்கிற பெண் ஒரு தோழியாகவும் , மகளாகவும் இருக்கிறாள். அவளுடைய மற்ற ஆண்களுடனான பாலியல் தொடர்புகள் இவர்களது நட்பை பாதிப்பதில்லை. அடிப்படையில் உடல் சார்ந்ததாக இருந்தாலும் பெண்களுடனான நட்பு பல பரிமாணங்கள் கொண்டதாக இருக்கிறது. ஒரு மனித உறவு தரும் சந்தோஷம் என்பதைத் தவிர வேறு இறுக்கங்கள் அற்றதாக இருக்கிறது. அவருடைய செயலூக்கத்துக்கான ஒருவித அடித்தளமாகவும் இருக்கிறது. இத்தகைய திளைப்பில் அவருக்கு வாழ்க்கைக்கான எண்ணற்ற சாத்தியங்கள் திறந்த வண்ணம் இருக்கின்றன. அவர் மனிதர்களிடம் சுலபத்தில் சலிப்படைவதில்லை. அவலம் சிறுகதையில் ஒரு பாலியல் தொழிலாளியிடம் ஆழந்த பிணைப்பையும், பாதுகாப்பையும் தர முடிகிறது இவருக்கு நேசத்தையும், வலிமையும் உருவாக்கிக் கொண்டு மனிதர்களும், பெண்களும் அவருடைய வாழ்க்கையில் தொடர்ந்து வருவதும், போவதுமாக இருக்கிறார்கள்.

சம்பிரதாயங்கள் குறித்த கட்டுப்பாடுகளோ, ஆளுமை குறித்த சுமைகளோ இன்றி ஒரு பிரத்யேகமான முறையில் வாழ்க்கையின் யந்திரரீதியான ஒழுங்குத்தன்மையை கலைத்துப்போட்டபடி செல்கிறார். அன்றாட வாழ்க்கையில் சுலபமாய்க் கடந்து போய்விடுகிற எண்ணற்ற சிறுசிறு விஷயங்களிலும், அசைவுகளிலும் கவனம் மிகுந்தவராக இருக்கிறார். கனவுகளிலும், மனப்பிறழ்வுத் தொடர்புகளிலும் உலகின் மாறுபட்ட கோலங்களின் பரிச்சயமும் அவருக்கு ஒருவகையில் சாத்தியப்படுகிறது. இதனால் சந்தோஷத்துக்கான ஊற்றுகள் ஒருபுறம் திறந்துகொண்டே இருந்தாலும் வேதனைகளும், வலிகளும் கூடிப்போய் பல விஷயங்கள் கை நழுவிப் போகின்றன. சுலபமான விஷயங்கள் கூட எளிதில் சாத்தியப்படுவதில்லை. மனிதர்கள் சுலபத்தில் காயங்களை உண்டு பண்ணுகிறார்கள். வாழ்க்கை கடினமாகிக்கொண்டே போகிறது.

தான் வேறு தன் எழுத்து வேறு என்ற பேதங்களற்று இலக்கியத்துக்கும், வாழ்க்கைக்கும் இடையிலுள்ள ஒருவிதமான பாவனைகளைக் கடந்த நிலையில் மிகவும் சரளமாகவும், அதிகபட்ச இயல்புத்தன்மையுடனும், சுதந்திரத்துடனும் கோபிகிருஷ்ணன் எழுத்தை கையாள்கிறார்.

இடாகினிப்பேய்களும் நடைப்பிணங்களும் சில உதிரி இடைத்தரகர்களும், ஒரு வயசாளியும் இரண்டு கள்ளக் காதலிகளும், மயிரே துணை, கலக்க மறுத்த கண்கள் , இனிமையான வக்கிரம் என்றெல்லாம் வினோதமான அனாயாசமாக அவர் கதைகளுக்கு இடும் தலைப்புகளும், வினோதமான சொற்சேர்க்கைகளும் ஒருவிதமான குதூகல உணர்வை தோற்றுவிக்கின்றன. அவருடைய மொழி மேலோட்டமாகப் பார்க்கும்போது எளிமையாக தோன்றினாலும் நுண்ணுணர்வு மிக்கதாக இருக்கிறது. எனது மதம் நம்பிக்கையிலிருந்தும் விடுபடுதல் தான் என்கிற உமர்கய்யாமின் வாசகங்களுடன் கோபிகிருஷ்ணனின் எழுத்துக்கள் பொருந்திவருகின்றன.

கோபிகிருஷ்ணனின் படைப்புலகம்

சுயமதிப்பீடும் சூட்சுமமும்

பாவண்ணன்

கோபிகிருஷ்ணனுடைய படைப்புகளில் இடம்பெறும் பாத்திரங்கள் பெருமளவில் தம்மைத்தாமே மதிப்பிட்டுக்கொள்கிறார்கள். அம் முயற்சிகளால் பல தருணங்களில் தம்மையே காயப்படுத்திக்கொள்கிறார்கள். பல சமயங்களில் தம் காயங்களுக்குத் தாமே மருந்திட்டு ஆறுதலையும் தேடிக்கொள்கிறார்கள். மனத்தில் உதிக்கும் ஓர் எண்ணம் அல்லது வாழ்வில் நடந்துவிடும் ஒரு சம்பவம் என எதையோ ஒன்றை முன்வைத்து இந்த அலசல் தொடர்கிறது. தம் நடவடிக்கை எந்த அளவுக்கு சரி அல்லது தவறு என்பது தாட்சண்யமற்ற முறையில் மதிப்பிடப்படுகிறது. தம் நடவடிக்கையில் துளியேனும் சுயநலமோ அல்லது சுயமையோ காணப்படுகிற நிலையில் சபித்துக்கொள்கிறது. எள்ளிநகையாடவும் செய்கிறது. சுயநலக்காரன் என்று தாமாகவே முள்கிரீடத்தை எடுத்துச் சூட்டிக்கொள்கிறது. பாராட்டுக்குரிய விஷயமோ அல்லது மகிழ்ச்சியோ வெளிப்படுகிற நிலையில் ஆனந்தக் கூத்தாடுகிறது. தம்மைத்தாமே மெச்சிக்கொள்கிறது. மெச்சிச் சொல்லப்பட்ட பாராட்டுரைகளையும் சபித்துச் சொல்லப்பட்ட வசைகளையும் ஒருசேரச் சுமந்தபடி மனம் தொடர்ச்சியாக இயங்க

முற்படுகிறது. பாராட்டுரைகளால் அம்மனம் வளைந்துவிடுவதுமில்லை. வசைகளால் சுருங்கிவிடுவதுமில்லை. அவை அனைத்தும் ஒரு மதிப்பீடு. ஒரு கணத்தின் மதிப்பீடு. கணந்தோறும் அம்மதிப்பீடுகள் மாறிக்கொண்டே போகின்றன. கலைத்துப்போட்ட சீட்டுக்கட்டைப்போல அம்மதிப்பீடுகளும் கலைந்த கோலத்தில் மனத்தில் கவிழ்ந்துகிடக்கின்றன.

கோபிகிருஷ்ணனுடைய பாத்திரங்களால் ஒருபோதும் இந்தச் சுயமதிப்பீட்டைத் தடுக்க முடிவதில்லை. பிறருடைய மதிப்பீடுகளைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலையின்றி சிறுபுன்னகையுடன் ஒரு விடையாட்டைப்போலத் தொடர்ந்து செய்தபடியே உள்ளார்கள். இந்த மதிப்பீடு நிகழ்ந்ததும் அப்பாத்திரங்களின் மனப்பாரம் குறைந்துவிடுகிறது. மனப்பாரத்துடன் அப்பாத்திரங்களால் சிறுதொலைவு கூட நடக்க முடிவதில்லை. அவற்றை உடனடியாக உதறவே அவர்கள் பெரிதும் முனைகிறார்கள். ஆனால் அடுத்த கணமே இறங்கியதும் அவர்கள் லேசாகி விடுகிறார்கள். ஆனால் அடுத்த கணமே வேறொரு பாரம் தேன்றி அவர்கள் மனத்தை அழுத்தத் தொடங்குகிறது. தம்மை நோக்கி தொடர்ச்சியாக வீசப்படும் பந்துகளையெல்லாம் எதிர்கொண்டு சளைக்காமல் அடித்தும் தடுத்தும் திசைதிருப்பியும் மாறிமாறி லாவகமாக ஆடிக்கொண்டே இருக்கிற விளையாட்டு வீரர்களைப்போன்றவர்களாக அவர்களைச் சொல்லத் தோன்றுகிறது.

கோபிகிருஷ்ணனுடைய பாத்திரங்கள் முற்றிலுமாக நாம் வாழும் உலகில் வாழ்பவர்கள். நாம் நித்தமும் நடக்கிற கடற்கரையிலேயே அவர்களும் நடக்கிறார்கள். படிக்கட்டுகளில் தொங்கியபடியோ நெரிசலில் அவர்களும் நாம் பயணம் செய்கிற அதே பேருந்துகளிலேயே கடைகள் கூட அநேகமாக நாம் வாங்கும் கடைகளாகவே இருக்கின்றன. ஆனால் அந்தந்தத் தருணங்களில் நாம் நடந்துகொண்ட அல்லது நடந்துகொள்கிற விதங்களுக்கும் அப்பாத்திரங்கள் நடந்துகொண்ட அல்லது சதாகாலமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கக் கூடிய இவைபோன்ற தருணங்கள் நடைமுறையில் நாம் அலுப்புடன் கழித்துவிட முனைவர்களாகவே இருக்கையில் அவர்கள் தம்மைத்தாமே மதிப்பிட்டுக் கொள்ளக் கிடைத்த வாய்ப்புகளாக மாற்றிக்கொள்கிறார்கள்.

"மானிட வாழ்வுதரும் ஆனந்தம்" என்னும் சிறுகதை மிகமுக்கியமான ஒன்று. தந்தையின் பிரதான பாத்திரம் வெகுநாள்களாகத் தேடிக்கொண்டிருந்த தூசுதட்டியை அன்றைக்கு எப்படியாவது வாங்கிவிடுவது என்ற முடிவோடு கடைக்குச் செல்கிறது. தெரிந்த கடைகள், தெரியாத கடைகள் எல்லா இடங்களிலும் ஏறி இறங்கி இறுதியில் ஒருவழியாக வாங்கிவிடுகிறது. வாங்கமுடிவெடுத்ததும் வாங்குதலும் ஒரே நாளில் நிகழ்ந்ததையொட்டி அப்பாத்திரம் ஆனந்தத்தால் மனம் நிறைகிறது. எண்ணிக்கொண்டு வந்த ஒரு செயலை வெற்றிகரமாக முடித்துவிட்ட ஆனந்தத்தில் திளைக்கிறது. நகைச்சுவை ததும்ப.

இக்கதை எழுதப்பட்டாலும் இக்கதையின் தொடர்ச்சியாக நம் மனத்தில்

எழும் அலைகள் நகைச்சுவைக்குரியதல்ல. நவீனயுகத்தின் மானுடனுக்கு பெரிய ஆசைகள் எதுவுமில்லை. மூன்றடி மண்கேட்டு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் அளந்து காட்டி வெற்றியடைந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. ஊர்வேண்டேன் உற்றாரையும் வேண்டேன் என வேண்டாததையெல்லாம் கச்சிதமாகப் பட்டியலிட்டபிறகு கடவுளின் பாதத்தைப்பற்றும் கனவு நிறைவேற வேண்டும். என்று பெருங்கனவை மனத்தில் சுமந்திருந்த காலமும் உருத்தெரியாமல் போனது. பெரியபெரிய வீடுகள், பண்ணைகள், வாகனங்கள், தோட்டங்கள் எனக் கனவுகளை வளர்த்து அடையும் வாய்ப்புகளை மக்களின் ஒருசாராரே பெறமுடியும் என்கிற நிலைமை நிதர்சனமான உண்மையானபிறகு நகரத்தில்விளிம்புநிலையில் வசிக்கிற யாரும் அந்தக் கனவுகளைக் கூடக் காணமுடியாதவர்களாக மாறிவிட்டார்கள். அவர்கள் தம் பணஇருப்பைக் கொண்டு எதைப்பெற முடியுமோ அதற்கான முயற்சிகளில் மட்டுமே இறங்குகிறவர்களாக எப்படியோ காலத்தால் கச்சிதமாக வடிவமைக்கப்பட்டுவிட்டார்கள். ஒரு தூசுதட்டி, ஒரு பென்சில், ஒரு ஆப்லெட் அல்லது ஒரு பாட்டில் மது என்பவை மட்டுமே இவர்களுடைய அதிகபட்ச ஆசையாக மாறிவிட்டது. இவற்றைத் தேடி அடைவது கூட கொண்டாட்டத்துக்குரிய செயலாக மாறிவிட்டது. இவர்களுக்கு மானுடவாழ்வு தரும் ஆனந்தம் இதுமட்டுமே.

இந்த வெற்றியை ஆனந்தமாக மனஇயக்கம் எப்படி மாற்றிக்கொள்கிறது என்னும் கேள்வியை முன்வைத்து யோசிக்கும்போது சில விஷயங்கள் புலப்படும். பொதுவாக மக்கள் அடைய நினைக்கும் ஓர் எல்லை அல்லது ஒரு பொருள் மற்றவர்கள் அடைந்திருக்கிற எல்லை அல்லது பொருள்களோடு ஒப்பிடப்பட்ட ஒன்று. இவர்களுடைய மனம் சதாகாலமும் அடைந்தவர்கள் அல்லது வெற்றி பெற்றவர்களைப்பற்றிய எண்ணங்களையே அசைபோட உள்ளன. புள்ளிகளைப்பற்றிய எண்ணங்களாலும் நிறைந்து வழிந்தபடி உள்ளன. இதனால்தான் இவர்களால் வாழ்வில் ஆனந்தமான ஒரு தருணத்தைக்கூட அடையமுடியாமல் போகிறது. இதற்கு நேர்மாறான மனஇயக்கம் கொண்டவராகக் கோபிகிருஷ்ணன் வடித்திருக்கும் பாத்திரம் அமைந்திருக்கிறது. இப்பாத்திரத்துக்குப் பிடிக்காதவர்கள் இல்லை. பிடிக்காத பொருள்கள் இல்லை. பிடித்தமானவை பற்றிய சித்திரங்களையே இவர் மனம் தாங்கியுள்ளது. பேரம் பேசி ஐந்து பைசா குறைத்து வாங்குகிற கொய்யாப்பழங்களை உண்ணும்போதும் சரி, எந்திரத்தனமாக மாற்றிக்கொள்கிற நோக்கமே நிறைந்திருக்கிறது. அவர் தேடி அலைவதுகூட தனக்குப் பிடித்தமானதும் தேவைப்படுவதுமான தூசிதட்டியையே. இறுதியில் அதையே கண்டடைவதால்தான் அவர் மனம் ஆனந்தத்தில் மிதக்கிறது. "என்னை என் போக்கில் விட்டுவிடு" என்று மற்றொரு கதையில் (பரிமாணம்) கதைப்பாத்திரம் தன் கோரிக்கையை முன்வைக்கும் நோக்கம் கூட தன் மனம் தனக்குப் பிடித்ததை மட்டுமே செய்துகொண்டிருந்தால் போதும் என்கிற

விழைவும் நிறைவும் ஒட்டியிருப்பதை உணரலாம். பிடித்ததைச் செய்யும்போது மட்டுமே ஆனந்தம் கிட்டும் என்கிற கண்டடைதலால்தான் கேட்பதற்குச் சற்றே முரட்டுத்தனமான குரலாகத் தோற்றம் தந்தாலும் ஒளிவு மறைவின்றி தன் விழைவைத் துணிச்சலாக முன்வைக்கிறது.

துசிதட்டியைத் தேடி அலைகிற பாத்திரமும் தன் அலைச்சலினூடேயே தன்னைத்தானே மதிப்பிட்டுக்கொள்ளவும் தவறவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் . அக்கதையில் அப்பாத்திரம் வழக்கமாகத் தாளும் ரீஃபளும் வாங்கும் கடையைப்பற்றிய சித்திரம் முதலில் இடம்பெறுகிறது. அத்துடன் ஒரு கொயர் தாளைப் பத்துபைசா குறைத்துவாங்குவதற்காக அக்கடையில்தான் எதிர்காலத்தில் தேவையான தாள்களை வாங்கப்போவதாக முதல்நாளில் சொன்ன முழுப்பொய்யும் நினைவுக்கு வருகிறது. கூடவே தன் சுயமைகள் தமக்கு எப்போதும் மறப்பதில்லை என்கிற சுய அறிவிப்பும் நிகழ்கிறது.

இக்கதைக்கு நேர் எதிரான நிலையில் துயரம் அறிமுகப்படுத்தும் விசித்திரமான மனிதர்களைப்பற்றிய சித்தரிப்பைக் கொண்ட கதை "நேரமும் நேசமும்". இதில் இடம்பெறும் பாத்திரம் மனத்துக்குப் பிடிக்காத நேர்காணலுக்குச் செல்கிறது. பிடிக்காத கேள்விகள் கேட்கப்படுகின்றன. பேருந்துப் பயணம் பிடிக்காததாக இருக்கிறது. நெருங்கிவரும் விற்பனையாளன் பிடிக்காத பொருள்களையே விற்கிறான். இதனாலேயே அந்த ஒருநாள் வாழ்க்கை துயரம் மிகுந்ததாக மாறிவிடுகிறது. இக்கதையில் கவித்துவத்துடன் கூடிய ஒரு காட்சி சித்தரித்துக் காட்டப்படுகிறது. தொலைக்காட்சி மேசையில் உட்கார்ந்திருந்த குருவியைக் கவனிக்காமல் அறையைப் பூட்டிவிட்டுச் செல்கிறது. கதைப்பாத்திரம் மலையில் வீடு திரும்பி அறையைத் திறக்கும்போதுதான் தவறு புரிகிறது. பூட்டிய அறைக்குள் அகப்பட்ட பறவை பிடிக்காத நினைவுகளில் சிக்கிய மனத்தின் அவஸ்தையை உணரவைக்கும் சரியான படிமம்.

"சிதைந்த நிலையில் ஒரு சிநேகிதி" என்பது மற்றொரு நல்ல சிறுகதை. இதிலும் ஒருவித தன்மதிப்பீடு நிகழ்கிறது. ஓரிசாவுக்கு ஃபிட்டர் வேலைக்குச் சென்றவன் நண்பர்களோடு மது அருந்திக்கொண்டிருக்கும் சமயத்தில் தனக்கு ஒரு தேவதை காட்சியளித்ததைப் பார்க்கிறான். அந்தத் தேவதைக்கு அவர்மீது பிரியமும் பிரிவும் சுரக்கின்றன. அவனும் அத்தேவதைக்காக ஏங்குகிறான். ஆசையின் உச்சத்தில் அவள் தன் உடலுடன் ஐக்கியமாகிவிட்டதாகக் கருதிக்கொள்கிறான். பார்வைக்குத் தான் பூர்ணச்சந்திரன் என்கிற மனிதனாகத் தெரியலாமே தவிர உண்மையில் தானொரு தேவதை என்று எண்ணத்தொடங்குகிறான். தனக்குச் செய்யப்படுகிற மருத்துவம் தன்னை அத்தேவதையிடமிருந்து முழுக்கப்பிரித்துவிடும் என்பது அவன் அச்சமாக இருக்கிறது. இதைப்போலவே பூச்சிகளுடன் இணக்கமாக வாழ்கிற சிறுவனைப்பற்றிய சித்தரிப்பு "பரஸ்பரம்" என்கிற சிறுகதையிலும் இடம்பெறுகிறது. இந்த சுயமதிப்பீட்டை உலகின் பார்வையிலிருந்தும் தன் நோக்கிலிருந்து

மாற்றிமாற்றி கச்சிதமாக நிகழ்த்துகின்றன இப்பாத்திரங்கள். "நீ ஒரு பச்சை அயோக்கியன்" என்று ஒரு பாத்திரம் மற்றொரு பாத்திரத்தை மதிப்பீட்டுச் சொல்லும்போது (தூயோன்) அப்பாத்திரம் தான் செய்த செயலில் படிந்திருந்தது ஒருவகை அயோக்கியத்தனமே என்பதைக் கண்டுணர்ந்து அம்மதிப்பீட்டை ஏற்றுக்கொள்கிறது. "சிகரெட், பீடி, டீ மட்டுமன்றி அந்தப் பெண்ணும் எனக்கு அன்றைக்கு லாகிரியாகிவிட்டிருந்தாள்" (போதை) என்ற கண்டறிதலைக் கூட ஒருவகை சுயமதிப்பீடு என்றே சொல்லவேண்டும்.

கோபிகிருஷ்ணனுடைய சிறந்த கதைகளில் ஒன்று 'புயல்'. புயலும் மழையும் நிலவும் சென்னை நகர வாடகைவீடொன்றில் வசிக்கிற நடுத்தட்டுக் குடும்ப உறுப்பினர்களின் மனப்புயலை முன்வைக்கிறது கதை. வெவ்வேறு அவசர வேலைகளில் அகப்பட்டுத் தாமதமாக வேலையைவிட்டுத் திரும்பி வருகிறான் கணவன். அன்றுதான் புதிதாக ஒரு மருத்துவமனைக்கு வேலைக்குச் சேர்ந்து முதல்நாள். வேலை அனுபவத்தோடு திரும்பி வந்திருக்கிற மனைவி மனம் முழுக்கப் புயல்வீசப் பதற்றமான மனநிலையில் இருக்கிறாள். அன்று முழுக்க அவளுக்குப் பிடிக்காத கசப்பான அனுபவங்களே நடந்திருக்கின்றன. ஒரு வெள்ளைக்காரியின் நிர்வாணப் படத்தைத் தன்னிடம் வேலை செய்யும் தாதிகளிடம் காட்டிக் கள்ளச்சிரிப்பு சிரிக்கிறான் கம்பவுண்டர். வயதான டாக்டர் தனக்குத் துணையாக இருந்த பெண்ணுடன் தகாத உறவு வைத்திருக்கிறான். எப்போதோ பக்கத்துவீட்டில் வாடகைக்குக் குடியிருந்து காலிசெய்து கொண்டு போனவன் திடீரென வீட்டுக்குள் நுழைந்து இளமை சுகம் படத்துக்கு அழைக்கிறான். மாவு எடுத்துக்கொண்டு திரும்பும்போது தெருவோரம் நிற்கிற இளைஞர்கள் அவளைப் பார்த்துக் கிண்டல் செய்கிறார்கள். அனைத்தையும் அமைதியாகக் காதுகொடுத்துக் கேட்கிற கணவன் அவள் கண்களில் கசிகிற கண்ணீரைத் துடைக்கக்கூடத் திராணியில்லாமல் கிடக்கிறான். "தூங்கி எழுந்தால் சரியாகப்போகும்" என்று மனைவியை அமைதிப்படுத்துகிறான் கணவன். அவள் அமைதியடைந்து தூங்கியபிறகும் அவன் அமைதியின்றி மனம் குமுறுகிறான். அவன் மனத்தில் வீசுவது ஒரே வீச்சில் மரங்களையும் கம்பங்களையும் சாய்த்து விஸ்வரூபம் காட்டுகிற மழைப்புயல் அல்ல. மாறாக, அதிகபட்சமாக சாக்கடையில் உழலும் பன்றிகள் என்று முகம்தெரியாத அந்தச் சமூகத்தை நினைத்து வேகமாகக் கத்துகிறான் கணவன். நடுத்தட்டு மக்களின் கையாலாகாத கோபத்தின் சித்தரிப்பாக இந்தக் கதை நல்ல வாசிப்பு அனுபவத்தைக் கொடுக்கிறது.

மனத்தைப்பற்றிய சித்திரங்கள் ஏராளமான அளவில் கோபிகிருஷ்ணனுடைய படைப்புகளில் காணப்படுகின்றன. ஆனால்,அவற்றில் ஒன்று கூட துயரப்படும் விதத்தில் தீட்டப்பட்டவை அல்ல. ஐயோ இப்படி நேர்ந்துவிட்டதே என்று பதற்றத்தையோ இரக்கத்தையோ தூண்டும் விதத்திலும் திட்டப்பட்டவை அல்ல. மாறாக மனச்சிதைவை இவர் எழுத்துகள் கொண்டாடுகின்றன. நொடிக்கொரு

வடிவம் காட்டும் கடிகார முள்ளின் கிடைநிலை, நேர்நிலை, சாய்வு நிலை, வளைவுநிலை போல பல நிலைகளில் இயக்க வேண்டிய ஓர் எந்திரமாக மனத்தை எண்ணிக்கொண்டால் சிதைவுநிலை என்பது மனத்தின் இயக்கங்களில் ஒன்றாகிவிடும். செங்குத்தான நேர்நிலைகளில் இயங்கக் கூடிய ஒன்றாக மனத்தை நமக்கு நாமே எண்ணிக்கொண்டு வகுத்துக்கொண்டும் நடந்துகொள்வது அறியாமையைத் தவிர ஒன்றுமில்லை. மனச்சிதைவுநிலைக்கான ஓர் அங்கீகாரத்தை நிறுவித்தரக்கூடிய அளவுக்கு, அந்த நிலையின் சார்பாக கோபிகிருஷ்ணனுடைய கதைகள் வாதங்களை முன்வைக்கின்றன. சிதைந்த நிலையில் மனம் எதைநோக்கியும் கைநீட்டியாசிப்பதில்லை. மாறாக, கைகாட்டிப் பரிகசிக்கிறது. பத்திரநிலைகளைக் கோட்டைகளாகக் கட்டிக்கொண்டே போகிற அதன் அறியாமை அல்லது அவிவேகத்தைச் சுட்டிக்காட்டிப் பகடியாடுகின்றது. யாருக்கும் தன்னை நிரூபித்துக் காட்டவேண்டிய தேவை இல்லாததால் பூரணசுதந்தரத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட எண்ணங்களின் திசைகளிலிருந்து விலகி கட்டுப்பாடற்ற வார்த்தைகளையும் மாற்றிமாற்றிக் கோர்த்தும் கலைத்தும் களிநடம் புரிகிறது. சிற்சில சமயங்களில் மந்திரங்களைப்போல வெளிப்படும் வார்த்தைகளின் கூட்டலில் கவித்துவத்தையே பொழிகிறது. இக்கவித்துவத்தைக் கைப்பற்றும் சூட்சும முயற்சிகள் கோபிகிருஷ்ணனுடைய படைப்புகளில் தென்படுகின்றன.

விடியல் பதிப்பகத்தின்

மூன்று புதிய புத்தகங்கள்

பாமாவின் ‘வன்மம்’ ரூ.60

தற்கால தெலுங்கு கவிதைகள் ரூ.40

வஹாபி பராஷி கலகங்கள் ரூ.50

விடியல் பதிப்பகம்

பெரியார் நகர், மசக்காளிப்பாளையம் (வடக்கு),
கோவை - 15



கோபி என்ற தோழன்

பதி

"மற்றும் விரிசல் தேனீர் கோப்பையில் விரிகின்றது
ஒரு சந்தாக இறந்தவர்கள் நாட்டிற்குள்"

-ஆடன்

மதுரை தமிழ் மண்ணின் முதல் நகரம், இன்றும் வாழும் முதல் நகரம். மதுரை தூங்காதநகரம். மதுரையில் தெற்குமாசி வீதிக்கும், தெற்குஆவணி மூல வீதிக்கும் குறுக்காகப் போவது ஜடாமுனிக் கோயில் தெரு. அவன் பிறந்து, பள்ளியிறுதி ஆண்டுவரை அங்குதான் வாழ்ந்த தாக, முதல் சந்திப்பில் கோபி கிருஷ்ணா என்னிடம் சொன்னான். அப்போது அவன் கோபால கிருஷ்ணன். மதுரையைப் பற்றியும் சௌராஷ்டிர சமூகப் பெருமக்களைப்பற்றியும், அதே சமூகத்தைச் சேர்ந்த எங்கள் குடும்ப நண்பர் வீட்டில் சில மாத காலம் தங்கியிருந்ததால் எனக்கு நன்றாகத்தெரியும், பகிர்ந்து கொண்ட தகவல்களினாலும், ஒரே பருவ இளமையினாலும் முதல் சந்திப்பிலேயே எங்கள் தோழமை நெருக்கமாகவும், ஆழமாகவும் அமைந்துவிட்டது.

சென்னை மாநிலக்கல்லூரியில் உளவியல் துறையில் படித்த மூன்றாண்டுகளில், கடைசி ஆண்டில் ஒரே அறையில் வாழ்ந்த நாட்களிலும் அத்தோழமை இன்னும் இறுகியது. கல்லூரி, நண்பர்கள், ஏராளமான இரவுகளில் கடைசிப் பேருந்துகளில் தொற்றிக்கொண்டு போய் பார்த்துக்களித்த மூன்றாம் காட்சி ஆங்கில, இந்தி, தமிழ், மலையாளத் திரைப்படங்கள், டாக்டர் ஜிவாகோ. காகஜ் கிஃபூல் செம்மீன் என்ற கலைநயத்துடன் புகாரி, என்று உணவகங்களை தேடி உண்டும், காசு குறைந்த நாட்களில் முரளிகஃபே தெருவோர தேனீர்கடைகள், காசே இல்லாத ஒரிரவுகளின் நீர் மருத்துவம்' என்று போனது அக்காலம்.

ஆனால் எப்போதும் சிரித்துக் கொண்டிருந்தான். கோபிக்கு அப்போது உர்தூதிரைப் பட பாடல்களில் மிகுந்த விருப்பம் அதுவும், நாவில் பிழன்றுவரும் ஜீல்ஃப், நஃஜர், 'அகர்ன்ல்' போன்ற சொற்களை, கற்கண்டைப் போல் நாவில்புரட்டி,புரட்டி அவற்றின் இனிமை மென்மைநாஸுக் கை சொல்லிச் சொல்லி மகிழ்வான். இலக்கியத்தின் பொறி அவனுள் அப்போதுதான் பற்றிக் கொண்டிருக்கவேண்டும்.

வேடிக்கை என்னவென்றால், கோபி அப்போது கூட ஒரு முழு நகரத்தான். மதுரைக்கு எந்தப் பக்கத்தில் சில கிலோமீட்டர் தூரம் போனால் அப்போதெல்லாம், மலைகளும், மரங்களும், தோப்புகளும், குளங்களும், ஊர்நடுவே ஆண்டில் பெரும்போது சிறிதளவு நீரும் பெருமளவு மணலும் புரண்டு ஓடிக்கொண்டிருந்த வைகை ஆறும் அவன் சிந்தனையில், பேச்சில் தென்பட்டதேயில்லை, அதுபோலவே மதுரையின் தொன்மை, சங்கம் வளர்த்த தமிழன் பெருமை, அன்றியும் ஆலைத் தொழிலாளர், நெசவாளர், விவசாயிகள், கூலிகள், சைக்கிள்ரிக்ஷாக்காரர்கள், தெரு வியாபாரிகள் இவர்களைப்பற்றியும் அவன் நசுக்கியதுமில்லை கையில் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தயங்காத, வாழ்க்கையை நுகரத்துடித்து முன்வாயிலில் நின்று கொண்டிருந்த இளைஞன்.

அவலங்கள் அவனை சீண்டித் தொட்டபோது சிற்து நேர அவகங்களுக்காக என் அறைக்கு வந்த போது கூட, இலக்கியநண்பர்களுடன் தோழமையுடன் சிரித்து,சிலவார்த்தைகள் பேசிவிட்டு,படைப்புகளைப்படித்துஎளிதாகப் பாராட்டிவிட்டு, இவையெல்லாம் தனக்கு சிறிது அப்பாற்ப்பட்டவைகள் என்பது போல் ஒதுங்கிக் கொள்வான். தனித்த நட்பு ஒன்றுமட்டுமே எங்கள் யாவரையும் கோபியிடம் பிணைத்திருந்தகயிறு.

காதல், கோபிக்கு கல்லூரியில் வரவில்லை, இவ்வளவுற்கும், மாநிலக்கல்லூரில் அப்போது பேரழகிகளும் சிலர் இருந்தனர். நவ்ரோஜ் பிரங்கியைப் பார்ப்பதற்காவே வேற்றுக்கல்லூரி மாணவர்கள் மாநிலக்கல்லூரிக்கு வருகை தந்து, சிங் கடையில் சிகரெட் புகைத்து, பேருந்து நிறுத்தங்களில் காத்துக் கிடந்தனர்.

கல்லூரி முடிந்ததும், கோபி ஒரு இண்ஷூரன்ஸ் அலுவலகத்தில் தற்காலிக எழுத்தர் வேலையில் சேர்ந்தான்.ஒரு சைக்கிள் வாங்கினான். பெரம்பூர் அவதானபாப்பையர் வீதியின் ஒருகுறுக்கு தெருவின் மாடிப்பகுதியில் குடியிருந்த பெற்றோர்கள் வீட்டில் வசிக்க துவங்கினான். மாலை வேளைகளில் அலுவலக மனமகிழ் மன்றத்தில் டேபிள் டென்னிஸ் விளையாடுவோம், சிலநாட்களில் திருவல்லிக்கேணி கடற்கரையில் லாந்திவிட்டு, கடைசிப்பேருந்தில் வீடு திரும்பினான். சில மாதங்களில் அந்த வேலை முடிந்துவிட்டது. ஓரிருமாதங்களில் மீண்டும் அவனுக்கு வேலை கிடைத்தது பொதுமருத்துவமனையில், உளநலத்துறையில் உதவி ஆய்வாளாராக அவன் பணிபுரியத் துவங்கினான்.

துயரமானபக்கங்களை அங்குதான் வாழ்க்கை அவனுக்குக் காட்டத்துவங்கியது. தான் பணிபுரிந்த இடத்தில் ஏதோ தவறு நடந்து விட்டது போலவும், மற்றவர்களால் அவன் ஒழுக்கம் இழந்தவனாக, இகழப்பட்டவனாக, முதுகிற்குப்பின் வசைக்கு தான் ஆளாகிவிட்டதாக அவனுக்கே அவன் தோற்றமளித்ததாக கற்பனை செய்து கொண்டு கோபி பெருமளவுக்கு கலங்கிபோனான், தூக்கமிழந்தான் ஒடிந்து, நொந்துவிட்டான். கோபி பொய் சொல்லவில்லை, திருடவில்லை, பிறர் பொருளை எடுக்கவில்லை, கையாடல் செய்யவில்லை. கையூட்டு வாங்கவில்லை, பெண்டிர் எவரையும் இழிவு செய்யவில்லை அவனை நோயுறச் செய்தது, மிகவும் சாதாரணமான, எடுத்துக்காட்டான "துன்புறுத்தும் மனச்சிக்கல் உளவியலில் மிகவும் சாதரணமான பெர்ஸியுக்குஷன் காம்ஃப்ளக்கஸ்."

நல்ல வேளையாக அதே மருத்துவமனை உளவியல்துறையில் பணிபுரிந்த, மாநிலக்கல்லூரியில் எங்களுக்கு முன் படித்த மூத்த நண்பர்கள், பாலகிருஷ்ணன், நாராயணன். மார்க்கண்டேயன் அவன் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து ஆறுதல் கூறி, அமைதிப்படுத்தி அந்த மனச்சிக்கலிலிருந்து கோபியை மீட்டனர்.

கோபியின் வீட்டில், அவனுக்கு இரண்டு தம்பிகள், மூன்று தங்கைகள், தந்தை அரசின் சோம்பிய வாரியம் ஒன்றில் மேல்நிலைப்பணியாளர், அம்மா வீட்டு வேலைகள், தளர்ந்த உடல்நிலை இவற்றையும் மீறி தையல்தொழிலும் செய்து வருமானம் தேடினார். கோபியின் தம்பிகள் இருவர், தங்கைகள் மூவரும் படித்துக் கொண்டு இருந்தனர். கோபியின் தற்போதைய ஊதியம் முன்னைவிடக் குறைவு. மனச்சிக்கலிருந்து மீண்டுருந்தாலும், தலைமகன் என்ற குடும்பப் பொறுப்பினால் சற்று உற்சாகம் குறைந்திருந்தான் கோபி.

தென்றலாகத்தான் துவங்குகின்றன. புயல்கள். கோபிக்கு காதல் வந்தது. அதே மருத்துவமனையில் தாதியராகப் பணியாற்றிய ஒரு பெண். கோபியுடன் நட்பாகத் துவங்கி திருமணத்தில் முடித்துக் கொண்டான் அவளுக்காக கோபி, தன் பெயரை 'கார்ல்' என்று மாற்றிக் கொண்டான் திருமணத்திற்கு முன்னர், என் எண்ணத்தையும், தோழமையின் உரிமையான ஒப்புதலையும் தெரிந்துகொள்ள அப் பெண்ணை நான் பார்ப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்தான்.

பார்வைக்கு ஏற்குமளவில், அப்பெண் கோபியை விட சற்றுஉயரமாய், மதர்த்த உடலுடன் சிறிதே சிவந்த நிறமாய்க் காணப்பட்டாள், எனக்கு சற்றுக் கவலை. கோபிக்குச் சற்று பூஞ்சையான உடல்வாகு. காதலின் மறுபக்கம் உடலாயிற்றே. காதல்வயப்பட்டு சற்று உற்சாகம் கூடி, அப்பெண்ணைமனம் காண விரும்பிய கோபியிடம் எப்படி அழுத்திச் சொல்லமுடியும் என்சந்தேகங்களை? இருந்தும், என்ன ஆனாலும் சரியென்று, மறைக்காமல், என் ஐயங்களை, அவன் பொறுப்புகளை, திருமணத்தைத் தள்ளிவைக்கமுடியுமா என்ற யோசனையை அவன்

மனது புண்படாமல் தனியே எடுத்துச் சொன்னேன். ஆண்! ஒருவனுக்கு, அவன் தான் விரும்பும் ஓர் ஆண்மகன் என்ற உணர்வை ஒரு பெண் அளிக்கும் போது, அப்பெரும்பரிசை, மற்றவைகள் குறைந்த நிலையில் கோபியினால் புறக்கணிக்கவும் முடியவில்லை, தள்ளிப்போடவும் முடியவில்லை. ஊர் உற்றார் இல்லாமல் நடந்தது திருமணம். தேனிலவுக்கு போய் வந்தான் நடந்ததை ஒரு சாகசம் போல் சொன்னான். வாழ்த்துவதை தவிர நான் என்ன சொல்ல.

கோபியும், அவன் மனைவியும் எங்கு வீடமைத்தார்கள், எங்கு வசித்தார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. பெற்றோர்களிடம் கேட்டு பயன்இல்லை. தொலைபேசியில் தொடர்பு கொள்ள மறுத்தான் பிறகு பேசுவதாக ஓரிரண்டு முறை தொடர்பை துண்டித்தான். எதிர்ப்புகளுக்கு இடையே தான் வாழ்ந்த காட்டும் போது தொடர்புகளை புதுப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணி அவர் தொடர்புகளை அறுத்துக் கொண்டிருக்கலாம். நகர வாழ்க்கை, நெருங்கிய நண்பர்களுக்குகூட அவரவர் அவரை, அவரவர் அவசரம் கோபி மனத்தின் ஆழத்தின் மறைந்து கொண்டான்.

1972-ம் ஆண்டு, ஒரு நாள் முற்பகல், அலுவலத்து தொலைபேசியில் எனக்கு ஒரு அழைப்பு வந்தது. மறுமுனையில் கோபி, கீழ்ப்பாக்கம் உள மருத்துவமனையில் தான் சேர்க்கப்பட்டிருப்பதாயும், உடனே இரண்டு கட்டுபீடி, சிறிதுபணம் இவற்றோடு தன்னைவந்து பார்க்கும்படி சொன்னான். என் அலுவலகத்தின் அனுமதி பெற்று கொண்டு, கோபி கேட்டிருந்தவைகளை வாரிக்கொண்டு ஒரு டாக்ஸியில் விரைந்தேன்.

சென்னையின் உச்சிவெய்யில் புழுக்கம், மருத்துமனையில் முற்றம், டாக்ஸியை அனுப்பிவிட்டு கோபியைத் தேடி சுற்று முற்றும் பார்த்தேன். அவன் சிரித்துக்கொண்டே எதிர்பட்டான் சிரிப்பா அது? என் வயிறுபுரண்டது. அங்கு சேர்க்கப்பட்டிருந்தவர்களை போல மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட, பழுப்படைந்த வெள்ளை அரைக்கைச் சட்டை, அதே துணியில் முழுங்கால்களுக்குக் கீழே தொள தொளத்த காற்சட்டை களை வறண்டமுகம் நிலம் பாவியிருந்த உடல், கலங்கிய கண்கள்.

வெய்யிலில் கண்ணாம்பு கொட்டிக் கொண்டிருந்தகாரைச் சுவர்கள், வியர்வை, மருந்து மூத்திர வாடையை வெளியிட்டுக் கொண்டிருந்தது. கைகளிலிருந்த பீடிக்கட்டுகளையும் பணத்தையும் அவனிடம் நீட்டிக்கொண்டே.

"நீ எப்படி இருக்கே? எப்போது இங்குவந்து சேர்ந்தாய்? உனக்கு என்ன ஆயிற்றே?" என்று பதைபதைத்தேன்.

கிழவோரமாய் நாங்கள் நகர ஒரு பீடியை வாயில் பொருத்திப் பற்றவைத்துக் கொண்டே மீண்டும் அவனிடம்.

அவன் பீடிக்கு நெருப்பு தந்துவிட்டு, நான் ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டே மீண்டும் அவனிடம்.

"நீ இப்போது எப்படி இருக்கிறாய்? என்ன ஆயிற்று உனக்கு? என்று கேட்டேன்.

"ஒரே மனக்குழப்பம் பதி! தூங்கமுடியவில்லை. கண்ணைமூடினால் யார் யாரோ என்னை உதைக்க வருவதுபோல், கொல்ல வருவது போல் தோன்றுகிறது. டாக்டர், இங்கு உடனே சேர்ந்துவிடச்சொன்னார், உடனே சேர்ந்துவிட்டேன். மூன்று முறை மின்சார அதிர்வு சிகிச்சை அளித்தார்கள். இப்போது சிறிது பரவாயில்லை. அவ்வப்போது சிறிது தூங்கிறே. சில வேளைகளில், பிடித்தமானவர்கள் கிடைத்தால் இங்கு எனக்கு விருப்பமான டேபிள் டென்னிஸ் கூட விளையாடுகிறேன்" என்று எதுவுமே நடக்காத சாதாரணமான நிலையை படம்போடுவதுபோல் சொன்னான்.

மீண்டும், நான், உனக்கு என்ன ஆயிற்று? டாக்டர் என்ன சொன்னார்? உன் மனைவி எங்கேயிருக்கிறாள்? உன் பெற்றோர்கள் வந்து உன்னைப் பார்த்தார்களா? என்று கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

" பதி! நான் ஏமாந்து விட்டேன். மற்றதெல்லாம் பிறகு சொல்கிறேன். என்று சொல்லிவிட்டு, இன்னொரு பீடியைப் புகைக்கத் தொடங்கினான். பீடிப் புகை வாசனையினால் கவரப்பட்டு சில நோயாளிகள் எங்களை சுற்றி வந்து சூழத் துவங்கினார்கள். மருந்து மூத்திரநெடி இன்னும் கூடுதலாக என்னை அழுத்தியது. மீண்டும் எனக்கு வயிற்றில் புரட்டத் துவங்கியது. கோபி என்னிடம் வேறெதுவும் சொல்லப் போவதில்லை என்று எனக்குத் தோன்றியது.

அவனிடம், உனக்கு வேறு ஏதாவது வேண்டுமா? உணவு ஆடைகள் இன்னும் சில பீடிக்கட்டுகள் காசு? என்று கேட்டேன்.

பீடிக்கட்டுகளையும் பணத்தையும் சட்டையில் மறைத்துக் கொண்டு அவன் வேறு ஏதுவும் வேண்டியிருந்தால் மறுபடி உனக்கு போன் செய்கிறேன்" என்று சொன்னான்

" பணம், பீடிக்கட்டுகள் பாதுகாப்பாக இருக்குமா?"

"உள்ளே போனவுடன் எனக்குத் தெரிந்தவர்களிடம் கொடுத்து பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுவேன்."

"சரி! நான் கிளம்புகிறேன் ஏதாவது தேவையானால் மறுபடி போன் செய்" என்று கூறிவிட்டு நான்புறப்பட்டேன். தலையசைத்தான் கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளாகியும் அவனிடமிருந்து போன் வரவில்லை.

சில ஆண்டுகள் கழிந்து, கோபி, கிரியாவில் பணிபுரிவதாக நண்பர் ஒருவரிடமிருந்து செய்தி வந்தது. அவன் என்னைத் தொடர்பு கொள்ளாதது குறித்து முதலில் சிறிது வருத்தம் இருந்தது, நாளாக நாளாக தெரியும்.

க்ரியாவில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது எழுதத் துவங்கிட இருந்தான் போலும். க்ரியா இராமகிருஷ்ணன், மற்றவர்களிடம் புதைத்திருக்கும் திறமைகளை வெளிக் கொணர்வதில் ஒரு அற்புதமான கிரியா ஊக்கி. மற்றும் பல எழுத்தாளர்கள். ஓவியர்கள், கலைஞர்கள் இராமகிருஷ்ணனின் நெருங்கிய நண்பர்கள், கிரியாவிற்கு வந்து இராமகிருஷ்ணனோடு உரையாடிவிட்டுச் செல்பவர்கள். இவர்களின் சிலர் கோபிக்கு முன்னரே பழக்கமானவர்கள். அந்த சூழல் படைப்புகளுக்கு ஓர் உந்து களம்.

கவிஞர் ஆத்மாநாமையும், இராஜகோபாலனையும், ஞானக்கூத்தனையும் க.நா.சுவையும் கோபி சந்தித்ததை எழுத்தாளத் தோழர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஞானக்கூத்தன், கோபியை கதைகள் நிரம்ப எழுதச் சொல்லி ஊக்கமூட்டியவர். கோபியின் கதைகளை வாசித்துவிட்டு கோபியிடம் கேட்டு வாங்கி ஒருகதைகளை 'நவீன விருட்ச'த்தில் வெளியிட்டதையும் கோபிக்கு நடந்த பாராட்டு விழாவிற்கு கோபியோடு தான் போனதையும் அழகிய சிங்கர் என்னிடம் சொன்னார். கோபியின் இன்னல்களுக்கு இடையேயும். ஒரு நல்லூழ் கோபிக்கு பல ஆதரவாளர்களைத் தேடித் தந்திருந்தது. சாராதா மேனன், அசோகமித்திரன், வாசந்தி இராஜகோபாலன், லதாராமகிருஷ்ணன் என பலப்பலர், பாராட்டையும் கோபி ஈட்டியிருந்தான். எதிர்பார்ப்பு ஏதுமின்றி பலர், அவன் வீழந்து வீழ்ந்து எழுந்த போது கைகொடுத்துத் தூக்கியிருக்கிறார்கள்

பல நண்பர்கள் கோபியின் எழுத்தில் அசோகமித்திரனின் சாயலைக் கண்டதாகக் குறிப்பிட்டுருக்கிறார்கள். அரோசகமித்திரன் கோபியின் பழையநண்பர், அவரது அன்பு குறைகாணாது அரவனைக்கும் அன்பு. அவரது எழுத்தைப்பற்றி குறிப்பாகச் சொல்வதானால், இரையாமல், அழுத்தமாக, நளினமான தன் அங்கதப்பாணி - இது ஒரு முதிர்ந்த நகரத்துப் பாணி. அது கோபியை ஈர்த்தில் வியப்பில்லை.

மதுரை நகரமென்றால், சென்னை மாநகரம் இங்கு இடிபடாது, வேகமின்றிச்செல்லல், பிறர்தன் காலை மிதித்துக்கொண்டு தன்கை பிறர் மேல் படாமல் செல்லல் இயலாது.இங்கு ஏமாற்றுதல் விளம்பரப்படுத்தப்படாத, ஆனால் ஒப்புக்கொள்ளப்பட்ட தொழில். வாங்கிய அடிகளைப் பொருட்படுத்த இயலாது. பெரிதுபடுத்தினால் விழுவது சட்டைகிழிய தர்மஅடி அல்லது ஆடுபோல் அலற அலற தானாவிற்கு இழுத்துச்செல்லப்படுதல். சிறிது முன்னெச்சரிக்கையும், இதழ் அழித்து தன்னைப் பார்த்து தானே நகைத்துக் கொள்ளும் தன்னங்கதமே நகரவாழ்க்கைக்கு கவசங்கள். கோபி இதை எளிதாய் அணிந்தான். ஆதலால் கோபியின் கூர்மையான முன்னறிவு, நகரத்து அனுபவங்களை முற்றிலும், மனிதர், வீடு, அலுவலகம் என்ற கண்களில்பட்ட பட்டறிவை மிகவும் இயல்பாக தன் எழுத்துச் களனாக மாற்றிக்கொண்டு, எந்த ஒரு குழுவையும் சாராமலும், இலக்கிய, அரசியல்,

பொருள்வயகோட்பாடுகளைப் போர்த்திக்கொள்ளாமலும், தன் எழுத்து மட்டும் என்று தனித்து நின்ற சாகசத்தைச் செய்து காட்ட முடிகின்றது.

கோபி ஒரு முன்னோடி. மனத்தின் புதையுண்ட ஆழங்களை பின்புலத்தில் மறையும் இரகசியங்களை, அவ்வப்போது மூடிச்செல்லும் கருத்த மேகங்களை தன் வேதனைகளை ஆற்றிக்கொள்ள எழுதிப்பார்ப்பது உளவியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிகிச்சை முறை. யாவருக்கும் தெரிந்த எடுத்துக்காட்டு, 'அன்னியின் நாட்குறிப்பு' அதோடு கோபியின் படைப்புக்களை ஒத்துப்பார்ப்பது ஒரு இலக்கிய ஆய்வுக்கான பொருள் தவிரவும் அன்னியின் நாட்குறிப்பின் களன் முற்றிலும் வேறுபட்டது ஆயினும் அத்தகையபடைப்பு கோபியினால், மற்றோர் கோணத்தில் மற்றோர் தட்டில், தமிழில் முதன்முறையாகப் பதிக்கப் பெற்றிருப்பதையும் மறுக்க இயலாது. தமிழ் வாசகர்கள், கண்ணுக்கு தெரிவதை போல் அல்லாமல், நுண்ணிய உணர்வுடன் கோபியின் படைப்புகளை அவன் வாழ்நாளிலேயே பாராட்டியிருக்கிறார்கள்.

கவிஞர் விக்ரமாதித்யனுக்கு நன்றி கூறி, அவர்கவிதை ஒன்றை சற்று மாற்றி (விக்ரமாதித்யன் மன்னிக்கவேண்டும்)

"அவன் தோட்டத்தில்
சில சில பூக்கள்
அவன் வானத்தில்
கொஞ்சம் நட்சத்திரங்கள்.
அவன் நதியில்
சிறிது நீரோட்டம்"

என கோபியின் வாழ்வைப்பற்றிக் கூறலாம். கோபி பின்னர் மறுமணம் செய்து கொண்டு, திரு மகளைப்பெற்று, அந்த மகளின் காதல் திருமணத்தையும் உவப்போடு நடத்தி வைத்திருக்கிறான் என்பதையும் இறுதிநாட்கள் வரை மனைவி, மகள், மருமகனோடு, இனிய இல்லறம் கண்டான் என்பதும் தெரிய வந்தபோது, கோபி வாழ்கையில் இன்பத்தை முற்றிலும் காணாது போகவில்லை என்பது கோபியோடு தோழமை கொண்டவர்களுக்கு ஆறுதல் தரும். கோபி வீழ்ந்திருக்கிறான் வீழ்ந்து எழுந்து இருக்கிறான். எழுதியிருக்கிறான். நிமிர்ந்து நிற்கின்றான்.

தொனி

நவீன
கலை இலக்கிய
சிற்றிதழ்

தொடர்புக்கு:

தங்கம் மெடிக்கல்ஸ்
ஆண்டிப்பட்டி 625 512
தேனி மாவட்டம்.

நானும் கோபிகிருஷ்ணனும்

அழகியசிங்கர்

கோபி இறந்து போவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்குமுன் போன் செய்தார். வழக்கம்போல் அவர் குரலைக் கேட்ட எனக்கு, அதனுடைய விபரீதம் புரியவில்லை. இதற்கு அடிப்படையான காரணம், கோபி எப்படியெல்லாம் பேசுவார் என்பதெல்லாம் எனக்கு முன்பே தெரிந்ததுதான். மிகச் சாதாரண விஷயத்தையும், மிகக் கடுமையான விஷயத்தையும் ஒரே மாதிரியாத்தான் அவர் வெளிப்படுத்துவார். பழகும்போது ஒருவித பரபரப்பு அவரிடம் தெரியும். மிகத் தயக்கத்துடன்தான் அவர் பிறரிடம் உதவி கேட்பார். அன்று அவர் பேசும்போதுகூட சீரியஸ்ஸாக மருத்துவமனையில் இருந்துவிட்டு வந்ததாகத் தெரிவித்தார். அதனால் பணம் தேவைப்படுகிறது. உதவி செய்யும்படி கோரினார்.

அப்படி அவர் கேட்டபோது, உடனே, "எந்த அளவிற்கு உங்களுக்கு உதவவேண்டு" மென்று கேட்டேன். உண்மையில் அவர் கேட்ட தோரணையைப் பார்த்தபோது, நிச்சயம் அதிகமாகவே என்னிடம் கேட்பாரென்று எதிர்பார்த்தேன். நானும் அவர் கேட்கும் தொகையைக் கொடுக்கும் நிலையில் இருந்தேன். அவர் அவசரம் அவசரமாக விவரித்த விதத்தைப் பார்த்தபோது, ஏதோ பெரிய தொகையைக் கேட்கப் போகிறாரென்று எதிர்பார்த்தேன். உண்மை வேறு விதமாக இருந்தது. இதுதான் கோபி. உடனே நான் அவருக்கு உதவியைத் தரத் தயாராக இருந்தேன்.

"நீங்கள் வந்து வாங்கிக் கொள்ள முடியுமா?" என்று கேட்டேன் .

" என்னால் முடியாது. நீங்கள் வந்து தரமுடியுமா?" என்று கேட்டார்.

"நிச்சயமாக வருகிறேன். வரும் சனிக்கிழமை உங்களைப் பார்க்க வருகிறேன். அப்போது பணம் தருகிறேன்," என்றேன்.

"நன்றி," என்றார் அவர்.

ஆனால், அந்தச் சனிக்கிழமை அவர் இறந்து விட்டார் என்ற செய்தி வருமென்று நான் கற்பனைகூட செய்யவில்லை. அந்தச் செய்தியை லதா ராமகிருஷ்ணன் சொன்னபோது, எனக்கு ஒரு நிமிடம் அதிர்ச்சியாக இருந்தது. என் உதவியைப் பெறாமலே கோபி வேறு பயணத்துக்குப் போய்விட்டார்.

கோபியை நான் முதன் முதலாக எப்போது சந்தித்தேன். ஒரு முறை கவிஞரும் நண்பருமான வைத்தியநாதன் வீட்டில், கோபி கையெழுத்துக் பிரதியில் எழுதிய கதையைப் படிக்க நேர்ந்தது. அவர் கதைகள் எல்லாம்

தொகுத்து 'ஒவ்வாத உணர்வுகள்' என்ற புத்தகம் வர இருந்த சமயம் அது. எனக்கு அவர் கதைகளைப் படித்தபோது ஆச்சரியமாக இருந்தது. தமிழில் உளவியலை அப்போது யாரும் படைப்பிலக்கியத்தில் சரியாக கையாளவில்லை. கோபி அதில் தனி திறமை படைத்தவராக இருந்தார். அப்போது அவர் கதைகளைப் படித்தபோது எனக்கு ஒன்று தோன்றியது. கோபிக்கு கதையை முடிக்க வரவில்லை என்று. ஆனால் அவர் எடுத்துக்கொண்ட கதைக் களம் தமிழுக்குப் புதிது என்றும் தோன்றியது.

கோபிகிருஷ்ணனின் கதைகளைத் தொகுத்து அன்று புத்தகமாக வர பெரும் உதவி செய்தவர், ரா ஸ்ரீனிவாஸன். கோபி மீது அலாதியான அன்பைச் செலுத்துபவர் ஸ்ரீனிவாஸன். கோபியின் இறுதி நாட்களில், அவர் சந்திக்க விரும்பிய நண்பர்களில் ஒருவர் ஸ்ரீனிவாஸன். ஒருநாள் முழுவதும் கோபியுடன் இருந்து, ஸ்ரீனிவாஸன் அவர் விருப்பத்தை நிறைவு செய்தார். ஸ்ரீனிவாஸன் அவர் மறைவை என் மூலம் அறிந்தார். சனிக்கிழமை 2 மணிக்கு அலுவலகம் முடிந்தவுடன் நான் ஸ்ரீனிவாஸனை சந்திக்கச் சென்றேன். ஸ்ரீனிவாஸனிடம் இந்த விஷயத்தைச் சொன்னபோது, ஸ்ரீனிவாஸன் கலங்கி விட்டார். என்னிடமிருந்து விடைபெறுவதற்காகத்தான் கோபி என்னை கூப்பிட்டாரா என்று ஸ்ரீனிவாஸன் அன்று மாலை முழுவதும் கலங்கிவிட்டார். உண்மையில் ஸ்ரீனிவாஸனை சந்திக்க வேண்டுமென்று விரும்பிய கோபி நான்கு கடிதங்களாவது அவருக்கு எழுதியிருப்பார். அப்படி ஒரு பரபரப்பு மிக்க மனிதர் கோபிகிருஷ்ணன்.

நான் கல்லூரியில் படிக்கும்போதே சிறு பத்திரிகையில் அதிகம் நாட்டம் உடையவன். என் பெரியப்பா பையன் நடத்திய மலர்த்தும்பி என்ற பத்திரிகையில் என் பங்கும் உண்டு. அதனால் சிறுபத்திரிகை ஒன்று நடத்த வேண்டுமென்ற எண்ணம் எப்போதும் என்னிடம் உற்பத்தி ஆகிக்கொண்டே இருக்கும்.

ஒரு முறை கணையாழி கூட்டமொன்றில், கோபிகிருஷ்ணன், ஸ்ரீனிவாஸனை சந்தித்தபோது, சிறு பத்திரிகை ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னேன். கோபிகிருஷ்ணன், ஸ்ரீனிவாஸன், எம். கண்ணன், இளம்பரிதி, நான் ஐந்துபேர்கள் கொண்ட குழுவாக விருட்சம் என்ற பத்திரிகையை ஆரம்பித்தேன். இப்பத்திரிகையின் எல்லா செலவும் என்னுடையதுதான். கோபிகிருஷ்ணனை இணை ஆசிரியராக ஆக்கினேன். முதல் இதழ் மட்டும் வந்தது. இரண்டாவது இதழ் தயாராகும்போது, கோபிகிருஷ்ணனுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனக்கும் உங்கள் பத்திரிக்கைக்கும் எந்தத் தொடர்பும் வேண்டாம் என்று எழுதிவிட்டார். நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். ஸ்ரீனிவாஸனிடம் அந்தக் கடிதத்ததைக் காட்டினேன். 'கோபி அப்படித்தான். நீங்கள் பொருட்படுத்தாதீர்கள்,' என்றார். அவர் எழுதிய கடிதத்தை பத்திரமாக வைத்திருக்கும்படியும் கூறினார். இன்னும் அந்தக் கடிதத்தை வைத்திருக்கிறேன். என் சிறுபத்திரிகை அனுபவத்தில் ஒன்றே

ஒன்றை புரிந்துகொண்டேன். சிறு பத்திரிகையை ஒரு குழுவாக இணைத்து நடத்தக் கூடாது என்பதுதான் அது. விருட்சம் இரண்டாவது இதழிலிருந்து அது தனிப்பட்ட என் முயற்சியால் வர ஆரம்பித்து இன்று வரை அது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கடித்தத்தால் எனக்கும் கோபிக்கும் எந்த மனக் கசப்பும் ஏற்படவில்லை.

கோபிகிருஷ்ணன் நெகிழ்ச்சியான மனிதர். ஒரு சமயம் விருட்சம் இலக்கியக் கூட்டம் சார்பாக அவரைப் பேசச் சொன்னேன். அவர் அலுவலகம் போகாமல் ஒருநாள் முழுவதும் விடுமுறை எடுத்துக்கொண்டு பேசுவதற்குத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டு வந்தார். அவர் பேச ஆரம்பிக்கும்போது, வேர்த்து விறுவிறுக்க, கைகள் நடுங்க கட்டுரை ஒன்றை எழுதி வாசித்தார்.

அதேபோல், சின்ன விஷயங்களைக் கூட அவர் தீவிரமாக நினைக்கக் கூடியவர். ஆத்மாநாமிற்காக ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தேன். கோபிகிருஷ்ணனையும் கூப்பிட்டிருந்தேன்.

கோபிகிருஷ்ணன் எந்தப் பணியிலும் நிரந்தரமாக இருக்கமாட்டார். மற்றவர்களுக்காகத் தன் பதவியைத் துறந்து விடுவார். ரோஜா முத்தையா நூல் நிலையத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது, வேறு ஒரு நண்பருக்காகத் தன் வேலையை துறந்துவிட்டார். ஆனால் கோபி அந்த இடத்தை விட்டுப்போனபிறகும், யாருக்காக அவர் தன் வேலையைத் துறந்தாரோ அவர் தொடர்ந்து பணி புரிந்து கொண்டிருந்தார்.

ஒருமுறை க்ரியா அகராதி பணியில் நீடிக்காமல் பணியைத் துறந்துவிட்டு வந்துவிட்டார். அப்போது அவரைப் பார்க்க அவர் வீட்டிற்குச் சென்றேன், சண்பர் ஸ்ரீனிவாஸனுடன். பணியைத் துறக்கும் தறுவாயில் வீரமாகப் பேசும் கோபி, பணி எதுவுமில்லாத சமயத்தில் மனம் கலங்கி காணப்படுவார். 'என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னால் எழுத முடியாதுபோல் தோன்றுகிறது. தலை வலிக்கிறது." என்று அப்போது அவர் சொன்னது இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

அவர் மோசமாக இருந்த நிலை, 'ஆத்மன்' மன சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்தபோது. அது ஆரம்பித்தபோது அவருக்கே பிரச்சினை ஆகிவிட்டது. அந்தச் சமயத்தில்,அவருக்குத் தெரிந்த புத்தகக் கடைகளில் கடனுக்கு ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் வாங்கி, பணம் கொடுக்க முடியாமல் தவித்தார். ஒரு முறை பல்லவன் பஸ் முன்னால் தற்கொலைக்கு முயற்சி செய்தார். அந்தச் சமயத்தில், ஃஷபி என்ற அவர் நண்பர் அவரை காப்பாற்றி விட்டார். ஆனால் கோபியை நேரிடையாகப் பார்க்கும்போது நம்மால் நம்ப முடியாது.

தருமபுரியில் பெண் எழுத்தாளர்களுக்கென்ற ஒரு கூட்டத்தை பிரம்மராஜன், சிவக்குமார் ஏற்பாடு செய்திருந்தனர். கோபிக்கு அந்தக் கூட்டத்திற்குப் போகவேண்டுமென்ற ஆசை. அப்போது தான் அவர் கில்ட் ஆப் சர்வீஸ் பணியை விட்டு வந்திருந்தார். கையில் பணம்

இல்லை. ஆனால் கூட்டத்திற்கு வரவேண்டுமென்ற அவருக்குத் தோன்றியது. எனக்கு போன் பண்ணினார். அழைத்துப் போக முடியுமா என்று கேட்டார். எனக்கும் யாராவது என்கூட வந்தால் நன்றாக இருக்குமென்று தோன்றியது. கோபியை அழைத்துப்போக சம்மதித்தேன். பல ஆண்டுகளாக நான் கோபியைப் பார்த்து வருபவன், அந்த நிகழ்ச்சியின் போது நான் பார்த்த கோபி வேறு விதமாகத் தென்பட்டார்.

காலையில் ஒரு அமர்வு இருந்தது. எங்களை ஒரு வண்டியில் நிகழ்ச்சி நடக்குமிடத்திற்கு அழைத்து வந்தனர்.கோபியும் என்னுடன் வந்தவர், சில நிமிஷங்கள் கூட கூட்டத்தில் அவரால் ஒன்ற முடியவில்லை. உடனே எழுந்து வெளியே போய்விட்டார். பிறகு திரும்பவும் வந்து, "நான் அறைக்குச் செல்கிறேன். கொஞ்சம் பணம் கொடுங்கள்," என்று கேட்டு வாங்கிக்கொண்டு சென்றார். இந்த நிகழ்ச்சியை ஏன் சொல்கிறேனென்றால், கூட்டத்தில் கலந்துகொள்ளவென்று வந்தவர், அதில் கலந்து கொள்ளாமல் அறையிலே தங்கியதுதான். அதன் பின் அடுத்தநாள் நிகழ்வுக்கு மாலையில் வந்தவர், வெளியே நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தார். அந்த நிகழ்ச்சி முடியும் தறுவாயில், சில பெண்கள் உருக்கமாக பாட்டுகள் பாடிக்கொண்டிருந்தனர். அதைக் கேட்டு உருகி அழ ஆரம்பித்துவிட்டார். இதுதான் கோபி. எதற்கு அவர் கூட்டத்திற்கு வந்தார். ஏன் இப்படியெல்லாம் நடந்துகொண்டார் என்பது எனக்குப் புரியாத புதிர்.

கோபியிடம் மறக்கமுடியாத ஒன்று, அவர் ஒவ்வொரு புத்தாண்டின்போதும் வாழ்த்துத் தெரிவித்து கார்டில் கடிதம் போடுவார். ஒருமுறை கூட இது தவறியதில்லை. இந்த முறை அவரிடமிருந்து அதுமாதிரியான கார்டு வராது என்பதை நினைக்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

சுப்ரபாரதிமணியனின்

'சாயத்திரை' நாவல்

தற்போது ஆங்கிலத்தில் கிடைக்கிறது.

The

Coloured Curtain

விலை: ரூ. 200

கிடைக்குமிடங்கள்:

சுப்ரபாரதிமணியன்,

8/176 பாண்டியன் நகர், திருப்பூர் - 641 602

B.R. Publishing Corporation

4222/1 Ansari Road, Dariya Ganj, NewDelhi-2

எனில்...

லதா ராமகிருஷ்ணன்

ஒரு மனிதர் இறந்த பிறகு அவரைப் பற்றி நினைவுகூர்தல் என்பது வேதனையளிக்கும் விஷயம். அவருடைய இறப்பு என்பது நம்முடைய இறப்பையும் ஞாபகப்படுத்துவதாலும உலக வாழ்வின் நிரந்தரமின்மையை உணரச் செய்து வாழ்வு குறித்த பல அடிப்படையான புதிர் முடிச்சுக்களிடையே நம்மைத் தவிர்க்க முடியாமல் சிக்கிக் கொண்டு விடச் செய்வதாலும் ஒரு வித கையறு நிலைக்கு நாம் ஆளாகி விடுகிறோம். தவிர ஒருவர் இறந்த பிறகு அவரைப் பற்றி நாம் எத்தனை சொன்னாலும் அதை சம்பந்தப்பட்ட அவர் அறியப்போவதில்லை என்ற பிரச்னை வேறு ஆயாசப்படுத்துகிறது. இந்தப் பிரச்னையே நிறைய பேரிடத்தில் இறந்தவரைப் பற்றி இஷ்டத்திற்குக் கண்டதையும் எழுதச் செய்து, அவரைப் பற்றி எழுதுவதில் தன்னைத் துருத்திக் காட்டிக் கொள்ளச் செய்கிறது என்பதும் உண்மை. பார்த்தறியாத, பழகியறியாத ஒருவரைப் பற்றிப் பக்கம்பக்கமாக, புனைகதை கணக்காய் எழுத முற்படுபவர்களைப் பார்த்தால் சமயங்களில் பரிதாபமாக இருக்கிறது. சமயங்களில் கொன்று போட்டு விடுமளவிற்குக் கோபம் எழுகிறது.

எனில்.....

எனில்... ஒரு மனிதனைப் பற்றி நமக்கு என்ன தெரியும் என்று அவனைப் பற்றி எழுத முற்படுகிறோம்.....? பார்வையிழந்தவர்கள் தங்களுக்குக் கிடைத்த யானையின் அங்கத்தைக் கொண்டு யானையை வர்ணித்த கதையை நாம் அறிவோம். அந்தக் கதையை ஒரு பார்வையற்றவர் என்னவாகப் பார்க்கிறார் என்று ஒரு பார்வையிழந்த பேராசிரியர் கதைவடிவில் எழுதியுள்ளார். எனில்... வாழ்க்கையில் தனக்கு விதிக்கப்பட்ட, வந்து வாய்ந்த வேடங்களையெல்லாம் தாண்டி ஒரு மனிதன் உண்மையில் யாராக இருக்கிறான்...? என்னவாக இருக்கிறான்.....? எனில்... யாருக்கு... எதற்கு இந்தக் கேள்விகளெல்லாம்... எனில்... விடைகள் இல்லாமலிருக்கக் கூடும் என்றாலும் கேள்விகள் இல்லாமல் இருக்கக் கூடுமோ வாழ்க்கை ... எனில்... எனக்குத் தெரிந்தவனும், அவனுக்குத் தெரிந்தவனும் ஒருவரேயில்லை: அவனை ஒருபோலப் பார்ப்பதில்லை என்பதும் அவனும் அப்படியே என்பதும் உண்மை நிலவரமாக இருக்கையில் ஒருவனைப் பற்றி, அவனைப் பீடமேற்றுவதாகவும், அல்லது, என்னைப் பீடமேற்றுவதாகவும் என்ன பேசி என்ன... என்ன என்ன என்ன...

சமீபத்தில் மறைந்த எழுத்தாளர் கோபிகிருஷ்ணனைப் பற்றி எழுத வேண்டும் என்ற போது மேற்படி எண்ணந்தான் ஏற்பட்டன. எழுத்தாளர் கோபிகிருஷ்ணனை எனக்குப் பத்து வருடங்களுக்கும் மேலாகத் தெரியும். எனில்... 'தெரியும்' என்ற வார்த்தையைப் பிரயோகிக்கும் போதே ஏதோ ஒரு விதத்தில் மனம் அபத்தமாக உணர்வதைத் தவிர்க்க முடிவதில்லை.

அவருடைய கதை ஏதோ ஒன்றை, எனக்குப் பிடித்திருப்பதாகச் சொல்லி நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்ப, என் மொழிபெயர்ப்பிலுள்ள இலக்கணப் பிழைகள் விடுபட்ட நிறுத்தற்குறிகள், வாக்கியங்கள் சிலவற்றில் இடம்பெற்றிருந்த தவறுகள் முதலியவற்றை மிகவும் மென்தொனியில் சுட்டிக் காட்டி அவர் எழுதிய கடிதம் தான் அவரிடமிருந்து நான் பெற்ற முதல் கடிதம் என்று நினைக்கிறேன்.அந்த சமயத்தில் அவர் சென்னை எழும்புரிலுள்ள சமூக நல அமைப்பொன்றில் பணியாற்றி வந்தார். பதினேழு முறை வேலை மாறியவர் என்று சொல்வதால் அவர் தன் குடும்பத்திற்கான கடமையை செய்யத்தவறினர் என்ற முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது. கடைசி ஒன்றிரண்டு வருடங்களைத் தவிர அவர் ஏதாவதொரு வேலையில் இருந்த வண்ணம் தான் எழுத்துத்துறையிலும் இயங்கினர். கடைசியாக நக்கீரனில் 'அச்சுப்பிழை திருத்தும்' வேலை பார்த்தார். ஏறத்தாழ 2000 ரூபாய் சம்பளம். அதிகபட்சமாகத் தனக்கு சம்பளம் கிடைக்கவில்லையே என்றெல்லாம் எனக்குத் தெரிந்து அவர் ஆதங்கப்பட்டதில்லை. இன்னும் சொல்லப் போனால் தன்னைச் சுற்றியுள்ள வறுமை, இல்லாமை இவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து வருந்தியவராய், அவர்களுடைய நிலையை மாற்ற முடியாத இயலாமையில் தானும் அவர்களை மாதிரியான வாழ்வு வாழ்வதன் மூலம் ஒருவிதக் குற்றவுணர்விலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறாரோ என்று கூட சமயங்களில் எனக்குத் தோன்றுவதுண்டு.

ஒரு முறை 'அனாதையில்லம்' ஒன்றின் குழந்தைகளை மிருகக்காட்சி சாலை, கடற்கரை போன்ற இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லும் முயற்சியில் நன்கொடை திரட்டிய போது தன்னுடைய அலுவலகத்தில் பல பேரிடம் ஐந்து ரூபாய் பத்து ரூபாய், ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் என நன்கொடை திரட்டி ஒவ்வொரு நன்கொடையையும் தனித்தனியாக மணியார்டரில், தந்தவருடைய பெயர், விலாசம் குறிப்பிட்டு அனுப்பி வைத்தார். மொத்தமாக சேர்த்து. தந்தவர்களுடைய பெயர்ப்பட்டியில் ஒன்றையும் அனுப்பித் தந்தால் போதாதா என்று கேட்டதற்கு 'இல்லை ஒவ்வொரு நன்கொடையாளரையும் தனித்தனியாக இப்படி கௌரவப்படுத்துதல் முக்கியம் என்று குறிப்பிட்டார்.

சிறந்த ஆங்கிலச் தேர்ச்சி மிக்கவர். 'ஆங்கிலத்தைத் தப்பு தப்பாக எழுதுபவர், உச்சரிப்பவன்' என்று நிறைய பேர் குறித்து நேரிலும் கூறியிருக்கிறார். கதைகளிலும் குறிப்பிட்டிருக்கிறார். சமூகப் பணிக்கான சிறந்த கையேடாகக் கொள்ளத்தக்க அவருடைய சிறு நூல், சமூகப்பணி , அ-சமூகப்பணி, எதிர்-சமூகப் பணியிலும் இந்தக் கருத்தோட்டம் இடம்

பெற்றிருக்கிறது. இதை நான் ஆட்சேபித்து, சமூகப்பணிக்கு ஆங்கில அறிவு அத்தியாவசியம் கிடையாது, என்று கூறிய போது, அது தான் என்னுடைய எண்ணமும். ஆனால் , சமூக நலப்பணியாளருக்குத் தேவையான மனப்போக்கு என்பது அறவேயில்லாத மனிதர்களைப் பற்றிப் பேசும் தான் குறைந்தபட்சம் அவர்களுடைய கல்வித்தகுதிக்குரிய ஆங்கில அறிவாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை என்று பழிக்கிறேன் என்று அவர் நிதானமாகத் தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்தது நினைவுக்கு வருகிறது.

ஆண், பெண் உறவு பற்றி, உணர்வுபூர்வமானதும், தேக சம்பந்தமானதும், இரண்டும் கலந்ததுமாய் நிறைய எழுதியிருக்கிறார். எனில், எழுத்தாளன் என்ற பேர்வையில், எதிரே பேசிக்கொண்டிருப்பது பெண் என்பதால், தன் உரையாடலில் அவற்றைப் பற்றி 'விலாவரியாக' ப் பேசி தர்மசங்கடப்படுத்தாத கண்ணியம் அவரிடம் இயல்பாகக் கூடியிருந்தது. அப்படியே பேச நேர்ந்தாலும் மிகவும் 'க்ளினிக்கல்' ஆகக் கூறுவார். 'ஐந்து வருடங்களுக்கொரு முறை தனது திருமணத்தை மறுபரிசீலனை செய்து, வேண்டாமென்றால் இலகுவாக அந்தப் பந்தத்தை விட்டு விலகி விடும் வழிவகைகள் இருக்க வேண்டும்.' என்று பாதி வேடிக்கையாகவும் பாதி சீரியஸாகவும் அவர் அவ்வப்பொழுது கூறுவார். ஒரு பெரிய நாவல் இதைக் கொண்டு நான் எழுதப் போகிறேன், அந்தப் புத்தகத்தை உங்களுக்கு சமர்ப்பணம் செய்து விடுகிறேன் என்று தமாஷாகக் கூறுவேன் நான். எனில், உண்மையிலேயே மிகவும் தீவிரமாய் எழுதத்தக்க கருப்பொருள் இது- என்று தோன்றும். வேறொரு மனநிலையில் எழுதினேன் என்று உங்களுடைய 'டெபின் - டென்னிஸ்' கதையின் முன்னுரையில் நீங்கள் குறிப்பிட்டிருப்பது ஒரு வித தப்பித்தல் மனோபாவத்தினால்: என்று நான் கூறிய போது, அப்படியில்லை, உண்மையாகவே அப்பொழுது நான் high depressive state of mind ல் இருந்தேன்: என்றார். அந்தப் படைப்பில் ஒரு வித கொச்சையான வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்திருந்தால் அது இன்னும் அதிக அளவு பேசப்படுவதாக உருவாகியிருக்கும் என்று கருத்துரைத்த போது அவருக்கேயுரிய மெல்லிய சிரிப்போடு தலையை வழக்கமான பாணியில் ஒரு பக்கமாய் சாய்த்து கவனமாய்க் கேட்டுக் கொண்டார். எனில், ஏற்றுக் கொண்டாரா என்று தெரியாது.

தனக்கு ஏற்படும் low depressive state of mind, high depressive state of mind இரண்டைப் பற்றியும் அவருக்குத் துல்லியப் பிரக்ஞையிருந்தது. ஒவ்வொரு முறை அவருடைய படைப்பு வெளியாகும் போதும் அவர் disturb அல்லது excite ஆவதாக உளவியல் மருத்துவர் தெரிவித்ததாக அவருடைய மகள் ஒரு முறை குறிப்பிட்டதுண்டு. உளவியல் துறையில் பட்டதாரியான அவர் உளவியல் ஆலோசகராகவும் சில காலம் பணியாற்றியவர். உளவியல், எதிர் - உளவியல் புத்தகங்களை ஏராளமாகப் படித்தவர். தனது மனச்சோர்வு நோய் குறித்த முழுப் பிரக்ஞையோடு மாய, மந்திரம், பில்லி, சூன்யம், தியான மார்க்கங்களில் நிவாரணம் தேட முயலாமல் மருத்துவத்துறையை அறிவுபூர்வமாகத்

தேர்ந்தெடுத்தது தான் கோபிகிருஷ்ணனின் ஆளுமை. இறைக் கடவுள் நம்பிக்கை இல்லாதவராகவே இருந்தார். அதைக் குறித்து அவர் பெருமையோ, சிறுமையோ உணர்ந்ததில்லை. மனிதனை மனிதன் வதைப்பதும், எகத்தாளம் செய்வதும், இழிவுபடுத்துவதும் தான் அவருக்குத் தாங்க முடியாத கோபத்தை உண்டாக்கின. மற்றபடிக்கு, அவரிடம் நான் எத்தனையோ நாட்கள் எதிர்க்கருத்துக்கள் உரைத்ததுண்டு. என்னுடைய கோபதாபங்கள் காரணமாய் அவரிடம் சண்டையிட்டதுண்டு. ஒரு போதும் அவர் பதிலுக்குக் கோபப்பட்டதில்லை. எதிரே பேசுபவர் சற்று குரல் உயர்த்தினாலே அவர் உடலில் நடுக்கமாகக் காணும் அளவுக்கு அதிர்வு உண்டாகும். எனக்குத் தெரிந்து அவரிடம் தாழ்வு மனப்பான்மை கிடையாது. உயர்வு மனப்பான்மையும். தன்னுடைய அறிவை பற்றி, தகுதியை பற்றி அவருக்குப் பூரண நம்பிக்கையிருந்தது. அதே போல் தன்னுடைய நோய் குறித்தும் 'Like a lame man with a crutch' என்று மனச்சோர்வு நோய்க்குத் தான் விடாமல் மருந்து உட்கொள்வது பற்றி ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார். அந்த மனச்சோர்வுக்குள் முழுப்பிரக்ஞையோடு ஏறக்குறைய மூன்று மணி நேரங்கள் அமிழ்ந்து கிடந்ததாகவும், அதன் மூலம் கிடைத்த தெறிப்புகளின் வழி கதையொன்று எழுதியதாகவும் ஒரு முறை என்னிடம் கூறினார். அந்தக் கதை 'புது எழுத்தில்' வெளியானது. பரிச்சயமாகிப் பல நாட்கள் தான் மனச்சோர்வுக்கு மருந்து உட்கொள்வது பற்றி என்னிடம் அவர் கூறியதில்லை. இந்த வகையான அவமானவுணர்வுக்கு சமூகம் தான் நோயாளிகளை ஆளாக்குகிறது என்று அடிக்கடி வருத்தப்படுவார்.

இலக்கியவுலகில் தங்களுக்குள் எலியும், பூனையுமாக இருப்பவர்களும் கோபி என்று அவரிடம் சொந்தம் கொண்டாடுவார்கள். தோழர்கள் மத்தியில் அவர் பூரணமாகப் பாதுகாப்பாக உணர்ந்தார். எல்லாம் வாழ்விலும், தாழ்விலும் உடன் வரும் நண்பர்களுக்கு என்று தவறாமல் தனது புத்தகங்களில் சமர்ப்பணம் செய்வார். 'எலீட் என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்?' என்று ஒரு முறை என்னைக் கேட்டபோது, கடுங்கோபமாக, நீங்கள் சிறு பத்திரிகையாளர் தானே என்று தொலைபேசியில் இரைந்தேன். சப்தமிடாதீர்கள், it hurts me என்று அவர் சொன்ன போது, அப்படித்தான் உங்கள் கேள்வியும் என்னை hurt செய்கிறது என்றேன். அதே போல் 'I've become anti-establishment' என்று அவர் சொன்ன போது 'ஒவ்வொரு மனிதனும் ஒரு நிறுவனமே' என்றேன். மாற்றுக் கருத்துக்களைக் கூறினாலும் அவர் பொறுமையாகக் கேட்டுக் கொள்வார். வீட்டிற்கு எதிரேயிருந்த பெட்டிக் கடையிலிருந்து நண்பர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வார். கடிதம் எழுதுவதும், அவருக்குப் பிடித்த விஷயம். எழுத்தாளர்கள் அனேகரைப் போலவே அவரும் ஒரு புறம் குடும்பம், உறவுகள் என்பதைத் தளைகளாகப் பேசி மறுபுறம் அத்தகைய பாதுகாப்புகளையே எதிர்பார்ப்பவராகவும் இருந்தார் என்று எண்ணம் தோன்றுகிறது. 'முழுமையில்லாமல் நல்லவர்கள் எனப்படுவோர் சில 'one-sided and ro-

mantic' கண்ணோட்டங்கள் அவரிடம் இருந்தன என்று தோன்றுகிறது. எழுத்துவின்மையில் படைப்பாளிகள் தங்கள் கஷ்டத்தில் விசுவரூபமாக்கிக் காட்ட முடிகிறது. ஆனால், எத்தனையோ பேரைப் பார்க்கையில் உங்களுக்கு கடமைகள் குறைவு தான் என்பேன். ஏற்றுக் கொள்வார். அவருடைய சகோதரன், கனடாவில் இருப்பவர், மாம்பலத்தில் வீடு வாங்கி தங்களது பெற்றோர்களுடன் அங்கேயிருக்கும் படிக் கூறிய போது திரு. கோபிகிருஷ்ணன் அதை மறுத்துவிட்டார். அண்ணாநகரைத் தாண்டிய 'பாடி' என்ற பகுதியில் ஒரு சிறிய வாடகை வீட்டில் தான் இறுதி வரை இருந்தார். ஒரு சமயம், அவருடைய ஏதோ ஒரு கதையைப் படித்து பிரமித்துப் போய், தெரிந்தவர் என்பதால் இந்த மனிதரிடம் எப்படியெல்லாம் சரிக்குசமமாய் வாதாடுகிறேம் என்று வருந்தி அவர் வீட்டுக்கு பழம், பிஸ்கேட் எல்லாம் வாங்கிக் கொண்டு போய், அவற்றைக் கொடுத்து என் எண்ணவோட்டங்களைக் கூறிய போது குழந்தை போல் சந்தோஷப்பட்டுக் கொண்டார். மனநோய்க்காளானவர்களின் எல்லா நடவடிக்கைகளுமே நோயின் அறிகுறிகளாகப் பகுக்கப்பட்டுவிடுகின்றன. நான் பார்த்த விரைவில், அவரிடம் வெகு அபூர்வமாகவே என்னால் 'அப்நார்மாலிட்டி'யை காண முடிந்தது. நார்மல் பிஹேவியர் என்பது யாரால் எப்படி வரையறுக்கப்படுகிறது. அதில் அடங்கியுள்ள அரசியல் என்ன என்பது பற்றியெல்லாம் 'ஆத்மன் மன நல மையம்' சமயத்தில் நிறைய பேசிக் கொண்டிருந்திருக்கிறோம். ஆனாலும் மனநோய்க்கான மருந்தை உண்ட வண்ணமே அது தேவையில்லை என்று அவர் கூறுவது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தது. ஆனால், அது மட்டும் போதாது என்பது நிஜம். மருத்துவமனை, மருத்துவர் என்பதெல்லாம் ஒரு மனிதனின் ஆளுமையை எப்படியெல்லாம் சிதைத்து விடுகின்றன என்று அவர் கூறும் விஷயங்களும் அப்படியே. தோழமை என்பதை ஒரு புனிதநிலையாக அவர் பாவிப்பதையும், பேசுவதையும் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். அதுவும் ஒரு வித உறவு நிலையே குறைபாடுகள் கூடிய மனிதப் பரிவர்த்தனையே என்பேன். எல்லோருக்கும் ஏதாவது பிரமையும், பிடிப்பும் தேவைப்படுகிறது. சிலருக்கு குடும்பம் சிலருக்குக் கடவுள் உங்களுக்கு தோழமை என்பேன். வெறுமே சிரித்து, சம்மதப்படாமல் மௌனமாகி விடுவார்.

கடைசியாக அவரை 'கவிதைக்கணம்' (எப்ரல் 14) விழாவில் பார்த்தேன். அதற்குப் பிறகு கடிதங்களிலும் தொலைபேசியிலும் தான் சந்திப்பு.உடல் நலம் சரியில்லை லதா ராமகிருஷ்ணன் என்று அவருடைய கடிதங்களில் குறிப்பிட்டிருந்தாலும், 'எப்பொழுதுமே அவர் உடல் நலம் சீராக இருந்ததில்லை, என்பதால் வழக்கமான உடல்நலக்குறைவு என்பதாகவே நினைக்கத் தோன்றியது. திடுமென, பொதுவிடங்களில் புகை பிடிப்பது குற்றமாகிப்போனது, பல 'chain smoker களை கயறுநிலைக்காளாக்கியது போலவே அவரையும் பாதித்தது. கொளுத்தும் வெயிலிலும் உடல்நலக் குறைவிலுமாய் நட்பினரை தேடிப் போய்ப் பார்க்க முடியாத வருத்தமும் சேர்ந்து கொண்டது. மே மாத ஆரம்பத்தில் கனடாவிலிருப்பவரும்,

அவ்வப்பொழுது தன்னைப் புரிந்து கொண்டு உதவி செய்பவருமான சகோதரரின் மகளுடைய திருமணம் நடந்தேறியதாகவும் தனது உறவினர்களையெல்லாம் பார்த்தது சந்தோஷமாக இருந்ததாகவும் எழுதியிருந்தார். மே 7 அவரைப் பார்க்க வருவதாகச் சொல்லி, வெயிலும் , உடல் உபாதையுமாய் நான் போகாதிருந்து விட்டேன் போன் செய்து 'வருவீர்கள் தானே, எனக்கு இங்கே பேச ஆளேயில்லை. கிடைக்கவில்லை. என்றார். அவரவர் பிரச்சினை அவரவருக்கு. நீங்கள் எத்தனை பேருக்கு கொடுக்கிறீர்கள் என்று எண்ணிப் பாருங்கள், என்று பாதி வேடிக்கையாகவும்,பாதி கோபமாகவும் கூறினேன். வழக்கம் போல் மௌனமானார். அதற்கு முன் அவர் தன் அன்புத் தம்பியாக பாவித்திருந்த முகமது ஸஃபிக்கு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதி விலாசம் எழுதி அனுப்பச் சொல்லி எனக்கு அனுப்பி வைத்திருந்தார். ஸஃபியும் தனக்கு தினமும் கடிதங்கள் வருவதாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவருக்கு உடல்நிலை சரியில்லையோ' என்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னிடம் கேட்டார். மறுமுறை திரு. கோபிகிருஷ்ணன் ஃபோன் செய்த போது 'ஸஃபிக்கு தினசரி கடிதம் எழுதுகிறீர்களாமே-கவலைப்பட்டு எனக்கு ஃபோன் செய்தார்' என்றேன். உள்ளடக்கிய வருத்தத்தோடு, 'சர், இனி எழுதவில்லை' என்றார். ஒரே நாளில் ஒருவருக்கு ஏழு கடிதங்கள் எழுதியதை நோய்க்குறியாகவும் கொள்ளலாம்,அல்லது , பிரிவிற்கு முன் நேசத்திற்குறியவர்களைப் பார்த்து விடும் விருப்பமாகவும் கொள்ளலாம். மே 8 ந் தேதி அவரிடம் பேசிய போது, 'உங்களுக்கு ஒரு மாதம் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற (சர்க்கரை வியாதி, Wheezing முதலியவற்றிருக்கும், பிற சில உடல் உபாதைக்கும்) என்ன செலவு ஆகும் என்று மருத்துவரிடம் கேட்டுச் சொல்லுங்கள். நண்பர்களெல்லாம் உங்களுக்குக் கட்டாயம் உதவுவோம்- கவலைப்படாதீர்கள் என்றேன். நெகிழ்ந்து நன்றி கூறினார். ஆனால், எல்லோருமாகச் சேர்ந்து தன்னை ஒரேயடியாக மருத்துவமனைக்கும் முடக்கி விடுவார்களோ என்று மனதிற்குள் கிலேசப்பட்டிருக்கக் கூடும்- இறுதியாக வந்த கடிதங்களில் என் மூலம் ஸஃபிக்கு re - direct செய்யப்பட்டவற்றில் 'நம் தோழர்கள் அஜயன்பாலா மற்றவர்களெல்லாம் (சில பெயர்களைக் குறிப்பிட்டிருந்தார் நினைவில்லை) நலந்தானே என்று அன்போடு கேட்டிருந்தார். சமீபத்தில் எனக்கு எழுதிய கடிதமொன்றில் "சாருநிவேதிதா தன் மீது நேர்ந்த தாக்குதலைப் பற்றிக் கூறினார். அதிர்ச்சியாக, இருந்தது. என்ன நடக்கிறது இலக்கியவுலகில்" என்று வருத்தப்பட்டு எழுதியிருந்தார். ஆணவமும், எகத்தாளமும் எவ்விதமான வன்முறையும் அவரை எப்பொழுதுமே விதிர்க்கச் செய்வன. எப்பொழுதும் என்னை மிஸ். லதா ராமகிருஷ்ணன் என்று தான் அழைப்பர். மிஸ்டர் கோபிகிருஷ்ணன் என்று தான் நான் அழைப்பேன் சமயங்களில் மூன்றாம் மனுஷியாக இந்த அழைப்புகளை உள்வாங்கும் போது தமாஷாய் இருக்கும். ஆங்கிலத்தில் அவர் எழுதிய கடிதங்களில் கடின வார்த்தைப் பிரயோகங்கள் அநயாசமாகத் தெறித்திருக்கும்! இன்டியா டுடே மூலம் (தமிழ் பதிப்பு) எனக்கு ஒரு decent literary life ஐ சாத்தியமாக்கியதற்கு நான் என்ன கைம்மாறு

செய்யப்போகிறேன்.' என்று தன் தோழருக்கு அவர் எழுதியிருந்த வரிகளைப் படித்த போது கண் கலங்காமல் இருக்க முடியவில்லை. Decent literary life என்ற பிரயோகம் ஒரு முழு எழுத்தாளனின் மெய் எழுத்தாளனின் அடி மன ஆதங்கம். சில மாதங்களுக்கு முன்பு சென்னையில் 25 வருடங்கள் சமூகப்பணியில் தன்னை ஈடுபடுத்தும் கொண்ட திருமதி சாவித்ரி வைத்திக்கு விழாவெடுத்து அவருடைய பிற்கால வாழ்க்கைக்கால நிதி திரட்டித் தரப்பட்டது. அது தான் உண்மையான பதில் மரியாதை. விளையாட்டு வீரர்களுக்கும் அவர்கள் இருக்கும் நாளிலேயே benefit match நடத்தப்படுகிறது. ஆனால் எழுத்தாளன் விஷயத்தில் மட்டும், தனக்கு P.R O வேலை செய்யத் தெரியாதவனுக்குக் கடைசி வரை சிரம தசைதான். இலக்கியப் புரவலர்கள் நடத்தும் பத்திரிகைகளும் ஏன் இலக்கியப் படைப்பாளிகளின் நிறுவினர்கள் கூட இத்தகைய விஷயர்களில் வெகு சௌகரியமாக வேறு புறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு விடும் வருந்தத்தக்க சூழலே இன்றளவும் தொடர்கிறது இங்கு. ஒரு சாதாரண முதலாளிக்கு திரு. கோபிகிருஷ்ணன் வெறும்தொழிலாளியாக மட்டுமே அடையாளங் காண இயலும். ஆனால் இலக்கியவாதிகளும் புரவலர்களும் கூட அப்படியே புழங்கினால் அது எந்த விதத்தில் நியாயம்? கோபிகிருஷ்ணன் என்ற மனிதனை romanticize செய்யத் தேவையில்லை. குறைகள் கூடிய மனிதன் தான் அவர். ஆனால் பூதாகாரமான குறைகள் கூடியவரல்ல. அவருடைய நிறைகளோடு ஒப்புநோக்க அவை மிகவும் சொற்பமே. ஆனாலும் , ஒரு சாதாரண, ஏழை தேனீர்க்கடைக்காரருக்கு இருந்த நுண்ணுணர்வு கூட இல்லாமல் அவர் இலக்கியம் சார்ந்த சிலரால் நடத்தப்பட்டவர், அல்லது ஒதுக்கப்பட்டார் என்பது கசப்பான உண்மை. படைப்பாளிகளை இலக்கியம் சார்ந்தவர்களே புரிந்து கொள்ள பரிந்து காக்கப்பிரியப்படவில்லையென்றால் பின் வேறு யார் முன்வருவார்? வேலையில்லாமல் அவர் இருந்த இறுதி இரு வருடர்களில் சிறுபத்திரிகை சார் இலக்கியப் புரவலர்களை எதிர்பாராமல் வெகுஜனப் பத்திரிகைகளையும் நாடி தனது எழுத்துக்கள் தொடர்ந்தநீதியில் அவை சிலவற்றில் பிரசுரமாகி அதன் வழி ஒரு நிலையான வருமானம் கிடைக்குமாறு செய்துகொள்ளும்படி நான் அவரிடம் கூறியிருக்கிறேன். அவர் அதைச் செய்யவில்லை. தன் மனதுக்கு ஒப்பாத எதையும் அவர் முடிந்தவரை செய்ததில்லை. அப்படியே, இறுதிவரை கடவுள் நம்பிக்கையையும் அவர் கைக்கொள்ளவில்லை. அதற்காய் கடவுளை வெறுத்தார் என்று சொல்வதற்கில்லை. அவ்வண்ணமே, சடங்குகளிலும் அவருக்கு நம்பிக்கை யிருந்ததில்லை. அதனால் தான் அவருடைய இறுதிச்சடங்கின் போது சடங்கு சம்பிரதாயம் என்ற பெயரால் அவர் மனைவிக்கு பூச்சூட்டப்பட்டு. பின் பிய்த்தெறியப்பட்டது என்பதையெல்லாம் தோழர் அய்யனாரின் கட்டுரையில் படித்து வருத்தமாயிருந்தது. தன்னை விட பதினெட்டு வயது குறைந்தவளை மனைவியாக்கிக் கொண்டோமே (குடும்பம் பார்த்து பண்ணி வைத்தது தான்) என்ற குற்றவுணர்வு அவருக்கிருந்தது. மருமகன் மேல் மிகுந்த அன்பு இருந்தது.

மே 8 அன்று அவர் ஃபோன் செய்த போது சனி அல்லது ஞாயிறு அன்று கண்டிப்பாக வீட்டுக்கு வருகிறேன் என்றேன். என்றுமே நிறைவேற்ற முடியாமல் போன வாக்குகளில் அதுவும் ஒன்று. மே 10 அதாவது சனிக்கிழமை மதியம் அவருடைய மகள் ஃபோன் செய்து தந்தையின் மரணச் செய்தியைத் தெரிவித்தார். எதற்காகவோ, வீட்டை விட்டுக் கிளம்பிய போது தலைசுற்றி விழப் பார்த்தவரை வீட்டாரும், அக்கம் பக்கத்தாரும் மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல, அங்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு எல்லாம் சில மணி நேரங்களுக்குள் முடிந்து போய்விட்டதாகச் சொன்னார்கள். தோழர்யாருக்கேனும் ஃபோன் செய்யத் தான் போயிருப்பார் என்று தோன்றியது. அவசர அவசரமாய் கிளம்பிப் போய் அங்கே கிடத்தப்பட்டிருந்தவரைப் பார்த்த போது, உயிரோடிருந்த போது போய்ப் பார்க்கத் தவறிய குற்றவுணர்வு பிடித்தது. தோழர்கள் அங்கே ஏற்கனவே குழுமியிருந்தார்கள். அன்றும் மறுநாளும், இறுதிக்காரியம் நடத்த கோபிகிருஷ்ணன் குடும்பத்தாருக்குப் பணமிருக்கிறதோ, இல்லையோ, பங்களிக்க வேண்டியது நம் கடமை என்று தங்களாலான தொகையை உடனே திரட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

அன்றும், மறுநாள் இறுதி ஊர்வலத்திலும் தோழர்கள் உடன் வர கோபிகிருஷ்ணன் விடைபெற்றுச் சென்றாகிவிட்டது. அவர் மனைவிக்கு உதவ நிதி திரட்டப்படுகிறது. இதற்கு கிடைக்கும் நல்லாதரவு நிறைவளிக்கிறது. இது நியாயமானதும் கூட. ஏனெனில் கோபிகிருஷ்ணன் எவருக்கும் ஒவ்வாத மனிதர் அல்ல. அப்படி இருப்பாரேயானால் சம்பந்தப்பட்ட மற்ற நபர் மிக அநியாயமான அளவு ஒவ்வாதவராகத் தான் இருக்க முடியும்.

இறுதியாக ஒன்று. மாதமொன்றுக்கு ஏறத்தாழ 500 ரூபாய் மருந்து, மாத்திரைகளுக்காக திரு. கோபிகிருஷ்ணன் செலவழித்து வந்தார். உளவியல் மருந்துகளைத் தொடர்ந்து உட்கொண்டு வந்த போதிலும் மனச்சோர்வு நோய் அவ்வப்போது அவரை ஆட்டிப்படைத்ததற்கும், பலவீனப்படுத்தியதற்கும் பணப்பற்றாக்குறை முக்கியக் காரணமாக இருந்தது. முழுநேர வேலை பார்த்துக் கொண்டே முழுவீச்சுடன் படைப்பாளியாக இயங்குவதிலுள்ள சிரமம் புரிந்து கொள்ளக் கூடியது தான். முழுநேரப் படைப்பாளியாக இயங்கி வருபவர்களுக்கு இருக்கக் கூடிய முக்கிய பிரச்னை உணவு, உறைவிடத்திற்கான பணம். Short-stay home போல் சில இல்லங்களில் அவை கிடைக்கப்பெற்று சிறிது காலம் தங்கி எழுத முடியும் சூழல் உருவாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இலக்கியப் புரவலர்கள் இதற்கு உதவ வேண்டும். நெருக்கடி காலத்தில் எழுத்தாளர்களுக்கு உதவும் இலவச மருத்துவ திட்டம், நிதியுதவி, கடனுதவித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். தற்சமயம் தமிழக அரசின் பொறுப்பிலுள்ள தமிழ் வளர்ச்சித் திட்டத்துறை, 58 வயது நிரம்பிய எழுத்தாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றை வைத்திருக்கிறது. வருடாந்திர வருமானம் ரூ.4000 என்று அவர்கள் வைத்திருக்கும் வரையறை மாற்றப்பட்டு, இந்த நலத்திட்டம் பரவலாக நலிந்த எழுத்தாளர்களைச் சென்றடைய ஆவன செய்யப்பட வேண்டும்.

ஒவ்வாத உணர்வுகள்

நாகார்ஜுனன்

சமீபத்திய தமிழ்ச் சிறுகதை உலகம் நீர்த்துப் போயிருக்கிறது என்பதற்கு பல உதாரணங்களைக் காட்டலாம். தமிழ் எழுத்துலகு - பெரும் பத்திரிகைகளானாலும் சரி மறைந்து கொண்டுவரும் சிறுபத்திரிகைகளானாலும் சரி - தன்னை மிகவும் குறுக்கிக்கொண்டுவிட்டது. என்பது எண்பதுகளின் உண்மை. இதன் காரணமாகவே சிறுகதை என்ற வடிவமும் தமிழைப் பொறுத்தவரை மிகவும் உபயோகித்துக் கிழிக்கப்பட்ட ஒரு வடிவமாயுள்ளது.

கோபிகிருஷ்ணனின் 'ஒவ்வாத உணர்வுகள்' சிறுகதைத் தொகுப்பு (இப்படியே அழைக்கலாம் என்று தோன்றுகிறது) இந்தச் சூழ்நிலையை உடைத்துத் தோன்றியுள்ளது. இன்றைய தமிழ்ச் சூழலின் நடுவே வளையவரும், பெருந்திரள் கலாச்சாரத்தால் தாக்கப்பட்ட கும்பல் மனிதனின், குடும்ப மனிதனின் அடி மனதை ஊடுருவிக்கலைக்கும் எழுத்தாக இத்தொகுப்பு உள்ளது.

குறிப்பாக 'மக்கள் தினசரி' என்ற கதையில் குறிப்பிடப்படும் அதே பெயரிலுள்ள சென்னைப் பத்திரிகையின் ஏப்ரல் 4, 1985 ஆம் தேதிய காலைப்பதிப்பு. இன்றைய தினசரி வாழ்வின் அடிப்படையையே உடைத்துப் பார்ப்பதாய் அமைந்துள்ளது. பத்திரிகை எழுத்து என்பதன் ஊடாக நமக்குக் கிடைக்கும் எழுத்து- அமைப்பை உபயோகப்படுத்தி, நுண்ணிய சமூகக் கிண்டலையும் விமரிசத்தையும் ஓடவிடும் கதை அது. இதன் வழியாக வழக்கமான சிறுகதை அமைப்புகளை கோபிகிருஷ்ணன் தவிர்த்திருக்கிறார். பல துறைகள், நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், தொடர்பு சாதனங்கள், விசேஷச் செய்திகள் என்று செய்திகளாகவும், ரிப்போர்ட்டுக்களாகவும் எழுதப்படுபவை புதியதொரு கதை அமைப்பை உருவாக்கியுள்ளன.

உதாரணமாக, 'மொழிவளர்ச்சி' என்ற தலைப்பில் இருப்பதைப் பாருங்கள்:

"அண்ணாமலை நகர் - 4-4-85- நேற்று மாலை நடைபெற்ற மொழியியல் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் பேராசிரியர் ராச. செல்லமுத்து கணேசனார் அவர்கள். தமிழில் அர்த்தமற்ற பல சொற்கள் கலந்து மொழியைக் களங்கப்படுத்துவதாக வருந்தினார். 'அவன் பார்க்கும் பார்வையே சரியில்லை. எனக்கு அப்பவே தெரியும். நான் ஒருவனைப்பார்த்ததுமே எப்படிப்பட்டவன் என்று புரிந்து

கொண்டுவிடுவேன், திருட்டு முழி, தேவடியாள் சிரிப்பு முதலியன இதில் அடங்கும்" 'யாரும் என்னுடன் ஒத்துழைப்பதில்லை. இந்த உலகத்தில் அனைவரும் அறிவிலிகள், எல்லோருமே படு அயோக்கியர்கள். நாடு கெட்டுக்கிடக்கிறது. வரவர இங்கும் ஒன்றுமே சரியில்லை, முதலிய வாக்கியங்கள் யார் வேண்டுமானாலும் பிரயோகிக்கலாம் என்றும் அவ்வாறு செய்யுங்கால் அவை மடத்தனமாக இருந்த போதிலும் சரியாகவே இருக்கும்' என்றும் தொடர்ந்து பொழிந்தார்"

மொழிச்சொற்றொடர்கள் நம்மேல் செலுத்தும் ஆதிக்கமாக இக்குறிப்பை அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். ஒலி, ஒளியால் ஆன வழக்கமான தொடர்புசாதனங்களின் மொழி நம்மேல் செலுத்தும் ஆதிக்கம் 'மக்கள் தினசரி' சிறுகதை மூலம் உணர்த்தப்படுகிறது. இந்த கதையுமே பத்திரிகைச்செய்தி, வானொலி, டிவி செய்திவாசித்தல் என்ற வடிவங்களில் அமைந்திருந்த போதிலும் இவற்றில் இடம்பெறாத, இடம் பெறக்கூடாத வாழ்க்கையை, உலகத்தை இதில் நாம் காண்கிறோம். நிச்சயமாக இது ஒரு புதிய அனுபவம் தான்!

சென்னையின், தமிழ்நாட்டின் முகமற்ற, நெருக்கடி மிக்க, அவசரம்நிறைந்த, கார்ட்டூன்களில் வருவது போன்ற மனிதர்களை நாம் இவரது கதைகளில் காண்கிறோம். "எரிச்சல்பட்டு பாதியில் எழுந்து கைகழுவி, ஒரு பிடி பற்று வைத்துக்கொண்டு, படுக்கையில் படுத்து ஒரு நாள் சடங்கு ஒழிந்தது. இனி காலை 5.00 மணி வரை புற உலக உபாதைகளிலிருந்து ஒரு தற்காலிக விடுதலை என்று மனைவிக்குக் கேட்குமாறு சற்று உரக்கவே கூறினார்" (பக்கம் 59): "இவ் விழாவில் பேசிய ஒவ்வொரு அன்பரும் இவர் வாழ்வதற்கு எந்த விதக் காரணமோ, தூண்டுதலோ இல்லாமல் இருக்கும் போதிலும் இவர் வாழ்ந்து கொண்டு வருவதையும்... (பக்கம் 39): "காதலும், வீரமும் தமிழர் ரத்தத்தில் ஊறிய முக்கிய சமாச்சாரங்கள் என்பதை அவருக்கு எடுத்துரைப்பதுடன், வீரத்தில் தாவி ஏறுவது, அது நிற்கு முன்னமேயே கீழே குதிப்பது போன்ற சாகசச் செயல்களைத் தவிர வேறு சந்தர்ப்பங்கள் இல்லையாதலால்..." (பக்கம் 44): "ஆடல் பாடல், நீரில் மூழ்குதல் போன்றவை தெரியாதவர்கள் திருமணம் செய்து கொள்ள முடியாததை நினைத்து மனவருத்தம் அடைந்தார்": இப்படி எத்தனையோ.

சிக்கலான தமிழ்நகர வாழ்க்கையைப் புதுமையான, நுண்ணிய முறையில் சொல்வதற்கு அந்தச் சமூகத்தில் தொடர்புசாதன வடிவமான பத்திரிகை என்பதே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட எண்பது வருடங்களுக்குமுன் நவீனத்துவம் இன்னமும் நுழையாத தமிழ்ச் சமூகத்தை, கட்டுரை வடிவில் பாரதி எழுதிச் சித்திரிக்க ஆரம்பித்தது நினைவுக்கு வருகிறது. பாரதிக்குமே முதன்மையான களம் சென்னை தான்: அதன் சந்துகள், மனிதர்கள், அண்டை அயலார்கள், கூட்டுக்குடும்பங்கள்...

எண்பது வருடங்களில் இந்தத் தமிழர் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள

மாற்றங்களைப் பட்டியல் போடுவது இயலாத காரியம். ஆனால் நம்காலத்திய வாழ்க்கையை வரலாற்றுரீதியான பிரக்ஞை இந்த காலச்சாரப் பதிவு கோபிகிருஷ்ணன் கதைகளில் சீராக ஓடிக்கொண்டிருக்கிறது. உதாரணமாக 'காணிநிலம் வேண்டும்' கதையின் பின்குறிப்பாக இவர் எழுதியுள்ளது (பக்கம் 24) கதைக்கது முழு அமைப்புக் கொடுத்து இந்த பதிவுச் செயலைச் செய்கிறது.

கோபிகிருஷ்ணன் கதைகளினூடே ஓடும் இன்னொரு சரடு நமது சமுதாயத்தின் தலையாய அங்கமாகப் பலர் மதித்துக்கொண்டுவரும் தனிக்குடும்பம் பற்றிய மன அலசல். தனிமனிதனுக்கு சமூகம் இழைக்கும் அநீதிகளையோ, சமூகத்தில் பொது அளவில் நடைபெறும் கொடுமைகளையோ, நடுத்தர வர்க்கத்தினர் கண்டும் காணாமலிருப்பது இந்த அமைப்பு தரும் பாலியல் - உளவியல் தொடர்பான பாதுகாப்பினால் தான். ஆனால் இது ஒரு பொய்ப் பாதுகாப்பே. இதை கோபிகிருஷ்ணன் பலவிதமான உளவியல் சொற்றொடர்களுடன் நமக்கதை உரித்துக் காட்டுகிறார்: பிரமிளா இரவில் அம்மணமாகத் தூங்குவது ஏற்படுத்தும் மன உளைச்சல்கள்: வயோதிக நண்பர் குளித்து அம்மணமாக அறைக்கு வருவது ஏற்படுத்தும் அதிர்ச்சி: வீட்டுக்கார அம்மாளின் பிளவின்ட் ஆளுமை: 'மடி' யாகத் தன்னை வைத்துக்கொள்ளும் அம்மாள்: மனைவியைத்திட்டி வீட்டுக்கார அம்மாளைத் திருப்திப்படுத்தும் ஆணாதிக்க மனப்பான்மை: தன்னையே வருத்திக்கொள்ளும் புனிதப்பெண்கள்-என்று பெரிதாகப் பட்டியல் நீள்கிறது.

கலாச்சாரத்தின் அடிப்படைகளையும் கோபிகிருஷ்ணன் இவ்வாறாகவே அர்த்தப்படுத்துகிறார்: "பிறவி உறுப்புகள், பாலுறவு, சம்பந்தப்பட்ட அறிகுறிகள்பால் பிறர் கவனத்தை ஈர்ப்பதற்காகவே உடைகள் தோன்றியதாகவே ஆடைகளைப் பற்றி ஒரு சித்தாந்தம் உண்டு..." (பக்கம் 65) இவ்வடிப்படைகளைத் தாண்டிச் செல்லும் மனிதமனத்தை ஆர்வத்துடன் பார்க்கிறார் இவர்: "மூலை முடுக்குகள் உள்ளிட்டு நாடு முழுவதும் வியாபித்திருப்பதாகப் பக்தியுடன் நம்பப்படும் தேசிய ஒருமைப்பாட்டின் விளைவான, ஒரு குழுவின் பழக்கவழக்கங்கள் மற்றொரு குழுவுக்குப் பரவும் நிலையையும் தாண்டிச் சென்று சர்வதேச ஒருங்கிணைப்பில் லயிப்பதில் ஒரு வினோதமான கிளுகிளுப்பு......" இப்படி வியந்துச் செயல்பட விழையும் நுண்ணிய அதனுடன் இணைந்து நம்மையே மீண்டும் உரித்துப் பார்த்துக் கொள்ள நீங்கள் கோபிகிருஷ்ணன் கதைகளை, ஒரு முறையல்ல, பலமுறை படிக்க வேண்டும்.

('இனி' இதழில் வந்த விமர்சனம்)

உமா மகேஸ்வரியின் 'மரப்பாச்சி' சிறுகதைத்தொகுப்புக்கு 'இந்தியா டுடே' யில் கோபிகிருஷ்ணன் எழுதிய விமர்சனம்.

அப்பழுக்கற்ற எழுத்து

பெண்மையின் உணர்வுகளை கவித்துவமுள்ள நடையில் சொல்லும் நிறைவான தொகுப்பு

பாதசாரியின் மிகப் பொருத்தமான முன்னுரையுடன் ஆரம்பிக்கிறது. மரப்பாச்சி தொகுப்பில் 14 கதைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கதை குறித்தும் [illegible] தந்திருக்கிறேன். முற்றிலும் [illegible] Female Poetry [illegible] உமா மகேஸ்வரியை நான் முதலில் படிப்பது மரப்பாச்சி தொகுப்பு மூலம்தான். தொகுப்பில் 14 சிறுகதைகள் உள்ளன. அவற்றைப் பார்ப்போம்.

1. மரப்பாச்சி: வீட்டு வேலைக்குச் சிறுமியான அனுவுக்கு அப்பா மூலம் அழகான மரப்பாச்சி கிடைக்கிறது. அது மரப்பாச்சியில் அப்படியே ஒன்றி விடுகிறாள்.

சித்தப்பாவின் வீட்டில் அந்தத் அனுவைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போகிறாள். [illegible] அனுவைத் தொட்டுக் [illegible] அம்மா வீட்டுக்குத் தன்னை அழைத்துச் செல் என்று அத்தையைக் கேட்டுக் கொள்கிறாள். இதைக் கிழட்டுக் காமத்தின் புகைச்சல் என்று வர்ணிக்கிறார் கதாசிரியை.

Child abuse-இன் கொடூரமான உதாரணம்: 1980-ல் எனக்குத் திருமணம் நடந்தது. நானும் என் துணைவியாரும் மயிலையில் ஒரு வீட்டில் குடியிருந்தோம். எங்கள் எதிர் போர்ஷனில் ஒரு [illegible] தம்பதிகள் தங்கியிருந்தார்கள். அவர்களுக்கு நான்கு வயதுச் சிறுமி இருந்தாள். ஒரு நாள் ஆதரவு இல்லாத தருணத்தை சாதகப்படுத்தி அந்த வீட்டுக்காரரின் மகன் மாடிக்கு அழைத்துச் சென்று சிறுமியை [illegible] கெடுத்துவிடுகிறான். சிறுமியின் [illegible] ஆனால் அந்த [illegible] யாரும் எதுவும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், அயோக்கியனை யாரும் [illegible]

அவன் வீட்டுக்காரரின் மகன்.

1991-ல் மனநோயாளிகளைப் பேட்டி கண்டு கொண்டிருந்தேன். Criminal ward -ல் ஒரு நோயாளியிடன் பேசிக் கொண்டிருந்தோம். அந்த நோயாளி என்னுடன் ஒத்துப் போகவில்லை. அவனின் பக்கத்திலிருந்த நோயாளியிடம் அவனைப் பற்றிக் கேட்டேன்." அவனா சார், ஒரு எட்டு வயதுப் பெண் குழந்தையை, கத்திமுனையில் ஸ்கூல் பக்கத்தில் கிடத்தி கெடுத்திட்டான் சார்" என்றான். Paedophilia என்ற மன நோய் Child Abuse க்கு முக்கிய காரணமாக இருந்தாலும் சமூகக் குற்றவாளிக்கு உச்ச பட்ச தண்டனை அளிக்க வேண்டும்.

இந்த கதையைப் பின்வருமாறு முடிக்கிறார் கதாசிரியை: என் மரப்பாச்சி எங்கே... இடை வளைந்து உடல் மறுபடியும் பெண் தன்மையுடனிருந்தது: மீண்டும் முளைக்க தொடங்கியிருந்த அதன் முலைகளை அனு வெறுப்போடு பார்த்தாள்.

கதையின் முடிவு நன்றாக அமைந்திருக்கிறது. தொகுப்பின் மிகச் சிறந்த கதையாக மரப்பாச்சியைச் சொல்லலாம்.

2. நிறைவின் உறைதளத்தின்: இந்தக் கதையின் பக்கம் 23-ல் வரும் வாழ்வதைப் போலவே சாவதும் இவ்வளவு இம்சையா? என்ற அழுத்தமான வரி, கதை முழுமைக்கும் பொருந்தி நிற்கிறது.

3. உமா மகேஸ்வரி எழுதியுள்ள ஆண் கதை வருமாறு: ஐநூறு ரூபாயைத் திருடியவர் மச்சான்தான். அதை மறைக்கத்தான் அவன் அக்காவை அடித்திருக்கிறார். இந்தக் குறுங்கதையும் நன்றாகவே அமைந்துள்ளது.

4. வருகை: அப்பாவின் வருகையை விவரிக்கும் சுருக்கமான நல்ல கதை.

5. கரு: அற்புதமான கதை. ஒரு பெண்ணால் மட்டுமே எழுதமுடியக்கூடிய கதை.

6. நெடி: வெளியில் இரவில் சில ஆட்கள் மலம் அள்ள பணிக்கப்படுகிறார்கள். நெடி தன்மீது படர்வதான உணர்வு நந்தினிக்கு ஏற்படுவது tactile hallucination என்கிற மன நோய்க்குறி.

7. கதவு திறக்கும் கணம்: தணிவான தொனியில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கும் ஒரு நல்ல குடும்பச் சித்திரம்.

8. தொலைந்தவன்: ஓர் அக்காள் தன் தம்பியின் கதையைக் கூறுகிறாள். தம்பு (தம்பியின் பெயர்) ஒரு Sadist அடிக்கடி தம்பி தொலைந்து கொண்டிருக்கிறான். பக்கம் 70-ல் யாரும் எதிர்பாரா நொடிப்பிளவில் இடது மணிக்கட்டை பிளேடால் ஆழமாய் வெட்டிக்கொண்டான் என்று வருகிறது. இதை உளவியலில் Manipulative behaviour என்று சொல்வார்கள். தம்பி மறுபடியும் தொலைந்து போனான் என்ற வரியின் முடிவுடன் கதை முடிகிறது.

9. புதர்கள்: இந்தக் கதையின் மீனா என்கிற பெண் முன் ஒரு நிர்வாணப் பெண் திடீரென்று தோன்றுகிறாள்.. அவள் பற்றற்றவள். அவள் உதறியது

ஆடைகளை மட்டுமா? கேட்கிறார் கதாசிரியை. கடைசியில் அவள் மர்மமான முறையில் இறந்து போகிறாள். அவலங்கள் நிறைந்த அற்புதமான கதை இது.

10. மலையேற்றம்: சிறுவர் சிறுமியர் மலையேறி இறங்கிறார்கள். மிகவும் குதூகலம் அளிக்கும் கதை இது.

11. மரணத் தடம்: இந்தக் கதையை ஒரு பெண்ணால் மட்டுமே எழுதப்படக் கூடியது. Fantasy நன்றாக அமைந்து கதைக்குக் கை கொடுத்துக் காப்பாற்றுகிறது.

12. இறந்தவர்களின் கடிதம்: இந்தக் கதை நூதானமான முறையில் வனையப்பட்ட ஒரு சோதனா முயற்சி.

13. தற்கொலை: ஒரு விதத்தில் இந்தக் கதைக் Obsession with death ஆக இருப்பினும் விரிவாக எழுதப்பட்டுக் சிறக்கிறது.

14. ரணகள்ளி: நிவேதா என்கிற சிறுமியின் தாயார் இறந்து போகிறாள். அப்பா வேறு ஒரு பெண்ணை மணக்கிறார். என்ன செய்தும் நிவேதாவால் சித்தியை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

இத்துடன் சிறுகதைகள் மீதான சிறு அலசல் நிறைவுகிறது. கதாசிரியையின் உரைநடை சில இடங்களில் கவித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இந்தச் சிறுகதை தொகுப்பு. எனக்கு மனநிறைவைத் தருகிறது. உமாமகேஸ்வரியிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கலாம். அப்பழுக்கற்ற எழுத்துக்கள்.



கோபிகிருஷ்ணனின் நூல்கள்
கிடைக்குமிடம்...

தமிழினி
342 டிடிகே சாலை,
ராயப்பேட்டை,
சென்னை - 14

கோபியை நினைக்கிறேன்

ஞானக்கூத்தன்

சேலத்திலிருந்து சி.மணி நடத்திய 'நடை' வந்து கொண்டிருந்தது. அதில் வெளியான என் கவிதைகளைக் கொண்டு நான் அறியப்பட்டேன். 'நடை' வந்து கொண்டிருந்த போதே சென்னையில் 'இலக்கியச் சங்கம்' என்ற அமைப்பை நடத்திக் கொண்டிருந்த சா. கந்தசாமி, ந. கிருஷ்ணமூர்த்தி, (க்ரியா)ராமகிருஷ்ணன், ஐராவதம் ஆகியோர் ஒரு மாதாந்திரப் பத்திரிகை வெளியிட எண்ணம் கொண்டிருந்தனர். சா. கந்தசாமி என்னை சந்தித்து இக்கருத்தைக் கூறினார். 'நடை' வந்து கொண்டிருக்கும் போது வேறு பத்திரிகை தேவையில்லை என்று சொல்லிவிட்டேன். சில மாதங்கள் கழித்து 'நடை' நின்றுவிடப்போவதாகக் கந்தசாமி என்னிடம் சொன்னது எனக்குப் புதிராக இருந்தது. 'நடை' இரண்டாம் இதழிலிருந்து சி.மணி, ந.முத்துசாமி, வி.து.சீனுவாசன் இவர்களோடு எனக்குப் பழக்கம் கூடுதலாக இருந்தது. ஆனால் அது நிறுத்தப்படுவதான செய்தியை நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் செய்தி உண்மைதான் என்பது பின்னர் தெரிந்தது.

'ஓய்வூதியம் பெறுபவர்களின் பிரச்சினைகள்' குறித்து ஹிந்து உயர்நிலைப்பள்ளியில் ஒரு கூட்டம் நடந்தது. அதற்கு 'தீபம்' ஆசிரியர் நா.பார்த்தசாரதி வந்திருந்தார். நான் அந்தக்கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கே என்னைத் தேடி வந்த கந்தசாமி பத்திரிகை குறித்துப் பேச வேண்டும் என்றார். நான் என் அறைக்கு அழைத்துப் போனேன். விஷயத்தை அங்கு கூடிய ந. கிருஷ்ணமூர்த்தி, ராமகிருஷ்ணன், ஐராவதம் முதலியவர்களோடு விவாதித்தேன். அங்கே இன்னொருவர் இருந்தார். அவர்தான் 'கசடதபற'வின் வெளியீட்டாளராக இருந்த என்.எம்.பதி.

என்.எம்.பதி திருவல்லிக்கேணி நல்லதம்பி தெருவில் தனியாக வசித்திருந்தார். மாலை வேளைகளில் அங்கே போவேன். அவர் ராமகிருஷ்ணனின் நண்பர். ஒருமுறை பதியின் அறைக்குப் போன போது, உப்பிய கன்னமும், சற்றுத்துருத்தலான கண்களும், ஒல்லியான உடம்புமாக எனக்குத் தெரிந்தவர்தான் கோபிகிருஷ்ணன். பதியும் நானும் விவாதிப்போம். ஆனால் அவர் அதில் கலந்து கொள்ளமாட்டார். எத்தனை மணியானாலும் கேட்டுக்கொண்டிருப்பாரே தவிர பேசமாட்டார். எத்தனை நாட்கள் போயினவோ தெரியாது.

ஒருநாள் கோபி பதிவறை அறையில் இருந்தார். என்ன தோன்றியதோ அன்று நான் பேசிக்கொண்டிருந்த விஷயம் அவரது மௌனத்தைத் துளைபோட்டிருக்க வேண்டும். மிகவும் அடக்கமாக நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? என்று கேட்டார். பிறகு சொன்னார். விஷயம் வீடு மாற்றுவது பற்றியது. அவர் தந்தை அடிக்கடி வீடுமாற்றுவார் போலிருக்கிறது. ஒவ்வொரு முறையும் நள்ளிரவில் தான் வீடுமாற்ற நேரிடும். வீடு மாற்றத்தின் போது வீடுமாற்றப்படுவது தெரியாமல் தூங்கிக் கொண்டிருக்கும் சிறுவன் கோபியை அவர் தந்தை எழுப்பி 'வீடு மாற்றியாகிறது, எழுந்திரு' என்று எழுப்புவாராம். இதைக் கோபி சொன்ன போது அப்போது நான் பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்குத் தொடர்பான செய்தி என்று தான் சொன்னார். அவர் சொன்னதில் மறைந்து கிடந்த சோகம் என்னைப்பற்றிக் கொண்டது. நள்ளிரவில் சென்னைத் தெருவொன்றில் வீடு மாற்றும் தள்ளுவண்டியின் பின்னே போகும் சிறுவன் கோபியை நான் பார்த்தேன். கோபியை இதைக் கதையாக எழுதுங்கள் என்றேன். தனக்கு எழுதத்தெரியாது என்றும் எழுத வராதென்றும் அவர் சொன்னார். தமிழ் தெரியுமே எழுதுங்கள் என்றேன் ஆனால் அவர் அதுவும் தெரியாது என்றார் உங்களுக்குத் தெரிந்த தமிழில் எழுதுங்கள் என்றேன்.

ஒருவாரம் கழித்து கோபி வேறு ஏதோ எழுதி வந்தார். அது எனக்குப்பிடிபடவில்லை. மறுபடியும் எழுதினார். என்ன எழுதினார் என்று எனக்கு நினைவில் இல்லை. ஆனால் அந்த முறை ஒரு வித்தியாசம் தெரிந்தது. பிரதியைக் கார்பன் வைத்து எழுதிவந்திருந்தார். பின்பு அவரைக் கவிதை எழுதச் சொன்னேன். முன்போலவே சொன்னேன். கவிதைகள் சில எழுதிக் கொண்டுவந்து காட்டினார். அவை எனக்குப் பிடித்திருந்தன. வெளியிட ஓரளவு காத்திரம் இருந்ததால் கசடதபறவில் வெளியிடலாம் என்று எண்ணினேன். ஆனால் அவர் சிறுகதை எழுதவே வல்லமை உள்ளவர் என்பது என் கருத்து. பூட்டுப் போட்டுக் கொண்டது போன்ற அவரது மௌனம் தகர இது வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணினேன். அவரிடமே சொன்னேன். எப்போதும் சொன்னால் கேட்டுக் கொள்வதான பாவனையை அவர் காட்டுவார்.

ஒரு நாள் எழிலகக் கட்டிடத்துச் சிற்றுண்டியகத்தில் என் எதிரில் வந்து அமர்ந்தார். அப்போதெல்லாம் அவர் நல்ல உடை உடுத்திக் கழுத்தில் டை கட்டிக் கொண்டிருப்பார். அவர் எதிரில் அமர்ந்ததும் அவர் அருகில் அவரையொட்டி சற்று உயரம் என்று தோன்றிய பெண் கையில் வாங்கிவந்த சிற்றுண்டிகளோடு அமர்ந்தார். என்னை அந்தப் பெண்ணுக்கு அறிமுகம் செய்தார். அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகம் செய்யவில்லை. அந்தப் பெண் ஆங்கிலத்தில் மகிழ்ச்சி தெரிவித்தார். கோபி அதிகம் ஆங்கிலத்தில் பேசுவார். என்னிடமும் ஆங்கிலம் பேசுவார். தன்னுடைய தமிழைப் பொறுத்துக் கொள்வதானால் தமிழில் பேசுவேன் என்று பேசுவார்.

என்னிடம் அவர் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். ஒவ்வோராண்டும்

எனக்குப் புத்தாண்டு வாழ்த்துகள் அனுப்பாமல் இருக்கமாட்டார்.

அவர் எழுத்தாளராகிவிட்டார். கவிதைகளும் வெளிவந்தன. பல கவிதைகளை வெளியிடுவதற்கு முன்பு என்னிடம் அவர் படித்துக் காட்டுவார். அவரது எந்தக் கவிதையையும் நான் திருத்தியதில்லை. எனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்லிவிட்டால் கவிதை அச்சாகிவிட்டது போன்ற சந்தோஷமடைவார்.

இலக்கியத்தைக் குறித்துப் பெரிய விவாத விஷயங்களை அவர் என்னிடம் எழுப்பியதில்லை. ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் அனேகமாக 86-87 ஆம் ஆண்டில், கோபி சில கருத்துகளில் தீவிர நம்பிக்கை வைக்கத் தொடங்கினார். இந்த சந்தர்ப்பத்தில் ஒருமுறை என்னை என் வீட்டில் சந்தித்து நீண்ட நேரம் பேசினார். உலகத்தின் நல்லவர் என்று யாரும் கிடையாது என்பது அவர் வாதம். அடி மனதில் ஆத்மஞானியும், அயோக்கியனும் ஒன்றுதான் என்று பேசினார். இதைக் கூறும் போது அவரிடம் வழக்கத்துக்கு மாறான உற்சாகமிருந்தது. ரிலிஜியஸ் எக்ஸ்பிரீயன்ஸ் என்பது ஒரு சைகாலஜிகல் டிசீஸ், என்று பிராய்டு சொன்னது என் நினைவுக்கு வந்தது. ஆனால் ஃபிராய்ட் தன் மேஜைமேல் திருவனந்தபுரத்து அனந்தசயனப் பெருமாளின் பதுமையை வைத்திருந்ததை நேரில் பார்த்த ஒருவர் சொல்லியிருக்கிறார். அது ஏன் என்று கேட்டேன். ஒருவனது செய்கையே அவனை வெளிப்படுத்தும். அடிமனதில் ஆத்மஞானி. அப்படியிருப்பவர் தன்னிடம் உள்ள குணங்களை அறிந்தவர் தான் என்று நான் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் கோபி தனது கண்டுபிடிப்பை இழக்கவிரும்பவில்லை. கோபி சில கதைகளின் கார்பன் பிரதிகளை எனக்கு அனுப்பிவைப்பார். நீண்டநாள் கழித்துத் திரும்பப் பெறுவார். அவர் பார்க்க விழைந்த ப்ரத்யேக உலகத்தைக் கண்டு எனக்குப் பயமாக இருந்தது. அனால் அவருக்குப் பயமில்லை. அவரது படைப்புகளைக் குறித்து ஒரு சிறு இதழில் நான் விமர்சித்து எழுதியிருந்தேன். அதை மிகவும் திருத்தி வெளியிட்டது அந்தப் பத்திரிகை. அந்தப் பத்திரிகை ஒரு பகுதியை முழுவதும் நீக்கிவிட்டது. 'தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் தமக்குள் வேற்றுமைப் பட்டாலும் அவை ஒரு குடையின் கீழ் வருபவைதாம் ஆனால் கோபிகிருஷ்ணனின் படைப்புகள் அப்படி இல்லை. புதுமைப்பித்தன் மௌனி இவர்களுக்குப் பிறகு தமிழ் கதைக்களத்தைவிட்டு நகர்ந்தவர் கோபிகிருஷ்ணன் மட்டும்தான் என்பதுதான் அந்தப் பத்திரிகை நிக்கிய பகுதி. என் கட்டுரையைப் படித்திருந்ததால் கோபி இவ்விஷயத்தைத் தெரிந்து கொண்ருந்தார். அந்த மட்டில் எனக்கு மகிழ்ச்சி.

கோபிகிருஷ்ணன் இறந்த பிறகு அவரைப் பொருட்படுத்தும் நண்பர் குழாம் பெரிய அளவில் இருப்பதும் மகிழ்ச்சிதான். எனக்கு மகிழ்ச்சி எழுதுங்கள் என்று 30 ஆண்டுகளுக்குக் முன்பு சொன்னேனே அதில்தான்.

கோபிகிருஷ்ணனின் சொற்கள்: சில கருத்துக்கள்

ந. முருகேசபாண்டியன்

"உலகில் மேன்மையான ஜீவராசி எது?"
"மனிதன்"
"உலகில் அற்பமான ஜீவராசி எது?"
"மனிதன்"

மனிதனை தவிர்த்து விட்டுப் புவியில் பேச வேறு விஷயமுண்டா? நாளது தேதிவரை உலகில் பிறந்த மனிதர்களின் இழிவுகளும் மேன்மைகளும் பல்வேறு கலை வடிவங்களில் பதிவாகிக் கொண்டேயிருக்கின்றன. ஆயிரமாயிரம் சொற்களின் வலுவில் வடிவமைக்கப்படும் கோட்டைகள் காலத்தினுள் மிதந்து கொண்டிருக்கின்றன. சொற்களை இணைத்தும் பிரித்தும் அவற்றினூடேயும் வெளிப்படும் வாழ்வின் அர்த்தங்கள் நுட்பமானவை. இன்னொருபுறம் வானவெளியில் கணக்கற்ற Solar Systems இருக்கலாம் என்ற கருதுகோளின்படி, மனிதனின் இருப்பை எப்படி அடையாளப்படுத்துவது வெளியின் பிரமாண்டத்தில் காலத்தை அளந்திட முயலும் முயற்சிகளின் போதாமை ஸ்தூலமாகத் தெரிகின்ற நிலையில், இலக்கியம் ரொம்பப் பாமரத்தனமாகத் தெரிகின்றது. எழுத்து, வாழ்வின் கொடை அவலம் என்ற ரீதியில் சரடை இழுத்துக்கொண்டு அலையும்போது எல்லாப் புள்ளிகளும் கனவுகள் போல கலைந்து போகின்றன. 'இதுதான் எல்லாம்' என்று உரத்துப்பிரக்ஞையுடன் சொல்லுவது, புதைகுழிக்குள் புதைந்திடும்போது, நம்மால் என்ன செய்யவியலும்? மீண்டும் மீண்டும் நம்பிக்கைப் பத்திரத்தைப் புதுப்பிப்பதைத் தவிர வேறு என்ன வழி உள்ளது? எங்கு உற்பத்தியாகிறது எழுத்தின் மூலம்? அன்றாட வாழ்க்கையை ஒப்பனைகளுடனோ, ஒப்பனைகள் இல்லாமலோ பதிவாக்கினால் இலக்கியம் என்ற கம்பீரம் வந்து விடுமா? இப்படியான கேள்விகளுக்கு மத்தியில் கோபிகிருஷ்ணன், திருவிழாவில் காணாமப்போன குழந்தையாகப் 'பராக்குப்' பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு எல்லாமே வேடிக்கையானவை: எந்தவொரு விஷயமும் சுவராசியமானவை; காண்பதற்கு ஒவ்வொரு கணமும் விஷயங்கள் உள்ளன. இப்படி அவரது வழித்தடத்தை அனுகலாம். சராசரி மனநிலை எல்லாம் சரியாக இருப்பது போன்ற பிரேமை. All it is OK . ஒரு குழப்பமுமில்லாமல் கோடைகால வானம் நிதர்சனமாகத் தெரிவதுபோல வாழ்க்கைப் பரப்பு கோபிக்குத் தோன்றுகின்றது. சிக்கல்களும் சிடுக்குகளும் நிரம்பியிருந்தாலும் வாழ்தலின் ஈர்ப்பு, அவரது எழுத்தின் க்ரியாஊக்கியாகச் செயற்படுகின்றது. இறப்பினுக்கும் இருத்தலுக்குமான இடைவெளி பற்றி- மயிரிழை அளவு- அறிந்திருப்பினும், ஒவ்வொரு கணத்திலும் ஆர்வத்துடன் முயலுவதை அறியமுடிகின்றது.

எதையும் எப்படிச் சொல்ல வேண்டுமென்ற விதிகளில் நம்பிக்கையற்ற கோபி,

கைதேர்ந்த ஓவியரைப்போல, கோடுகளின் இழுப்பில் உருவாக்கும் கோட்டோவியங்களாகக் கதைகளைச் சொல்லுகின்றார். ஒருவிதமான அப்பாவித்தனமும் கள்ளங்கபடற்ற எளிமையும் கலந்து, அடடா் என வாசிப்பில் யோசிக்கத் தூண்டுவதாகக் கோபியின் எழுத்துக்கள் உள்ளன.

கோபியின் கதைகளின் வழியே சித்திரிக்கப்படும் காட்சிகள் நமக்கு மிகவும் நெருக்கமானவை: ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்கொள்ளும் அனுபவங்கள். குறிப்பாக மனவெளி மனிதர்களின் அவஸ்தைகளும் சந்தோஷங்களும் கதைகளில் அப்பட்டமாக வெளிப்படுகின்றன. மௌனியின் மனிதர்கள், சொற்களின் இறுக்கத்திற்குள் காணாமல் போய், வெளியுலகைவிடத் தமக்குள்ளேயே மூழ்கி, விசித்திரமான மனநிலையை - பித்துக்குளி - வரவழைத்துக் கொண்டு மரணமடைகின்றனர். கோபியின் மனிதர்களோ, வாழ்வின் ஒவ்வொரு படிக்கட்டிலும் வயிப்புடன் காலூன்றி நிற்கின்றனர். 'மனம்' இருந்தால் 'பிறழ்வு' என்பது தவிர்க்க இயலாததது. இந்நிலையில் மனப்பிறழ்வு என்பதனைத் தனித்த வஸ்துவாக்கிக் கூறு போட்டுவிடாமல், மனம்=> பிறழ்வு=> மனம்=> பிறழ்வு...... என்ற இடைவிடாத சமன்பாட்டில் விரித்துக் கொண்டிருப்பது கோபியின் தனிச்சிறப்பு.

எதிலும் காரியமாகப் பொருளியல் ரீதியில் வெல்லுவதற்கான தளம் அமைத்து, சமூக அடுக்கில் உயர்ந்த அந்தஸ்து வகிப்பது மட்டும் தான் சரியானது என்ற பார்வை, ஒருவகையான கற்பிதம். சகல விஷயங்களையும் கடந்து, ரொம்ப ஆண்டுகளாகக் காட்டிற்குள் வாழ்ந்து, அத்தகைய சூழலுக்குப் பழகிப்போன யோகி, திடீரென நகரத்துக் கடைவீதிக்கு வந்தால் அவருக்கு என்ன தேவைப்படும்? நுகர்வுப் பண்பாட்டிற்குப் புதியவரான யோகிக்கு, எல்லாப்பொருள்களுமே அந்நியமானவையாகத் தோன்றும். கோபியின் மனிதர்களும், சூழலின் நெருக்கடி காரணமாக, ஒருவகையில் யோகி போல, இறுக்கமான மனநிலையில் விட்டு ஒதுங்கியே வாழ முற்படுகின்றனர். மேல் கீழான சமூகச் சூழலின் வெக்கைக்குள் பொருந்திப் போகவியலாமல், உறைந்துபோன மனநிலைக்குள்ளாவது பல்வேறு கதைகளில் பதிவாகியுள்ளன.

தொண்டு நிறுவனத்தில் சமூகப் பணியாளராகச் செயற்படும் சாமிக்கண்ணு, கருத்தரங்களுக்குச் செல்லுவதில் விருப்பமுடையவன். குறிப்பாக மனநலம் தொடர்பான கருத்தரங்குகளுக்குச் சென்று வெற்றிக் கொடியைப் பறக்கவிடுவான். சாமிக்கண்ணுவைப் பற்றிய குறிப்புகள் எல்விதமான பூச்சுகளும் அற்ற ஆவணங்கள் கருத்தரங்கில் வழங்கப்படும் பிரியாணி, மேரி பிஸ்கட், தேநீர், வழவழ விரிவுரைகள், குழு விவாதங்கள்... இவற்றுக்கு அப்பால் ஏதோ இருப்பதான பாவனையில் கண்ணுச்சாமி தேட முயலுகிறான். பரஸ்பர உரையாடல் கூட கெட்டி தட்டிப்போன நிலையில் கருத்தரங்கு முழுக்கக் கண்ணுச்சாமி அந்நியப்படுகிறான். இதுவெல்லாம் வாழ்வின் வெவ்வேறு பரிமாணங்கள். சமூக நலப்பணி /சமூநலப்பணியாளர் குறித்து அடிக்கடி முன்வைக்கப்படும் கருத்துகள் ஆழமான விவாதத்திற்குரியன. கருத்தரங்கு பிரியமான கண்ணுச்சாமி, இறுதியில் கன்னிகா ஸ்திரீகளால் புதைக்கப்பட்டது பற்றிய புனைவு, கதையின் தளத்தை மாற்றியமைக்கின்றது. அதுவும் எள்ளல் தன்மையுடன். சிறுவையின் குறுக்கே எழுதப்பட்ட வாசகங்கள், மனநலம் பற்றிய தேடுதலுக்கான இறுதிநிலையாகத் தோற்றமளிக்கின்றன. நிஜமும் புனைவும் கலந்த கதையாடல், கோபியின் விவரிப்பினுக்குச் சிறந்த வெளிப்பாடாகவுள்ளது.

[illegible]

தானாக அடையும் நிலையல்ல. வாழ்தலின் அழுத்தம் தாங்காமல், மனதின் பிசிறுகளில் கொப்பளிக்கும் நினைவோட்டங்களில் ஏற்படும் மாறுதல்கள் முக்கியமானவை. இதில் பரந்துபட்ட சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுத் தனக்குள்ளேயே உள்நோக்கி முடங்கிடவோ அல்லது புறநிலையில் வெடித்துச் சிதறிடவோ ஆன நபரைப் பிறர் நடத்திடும் முறை மிகவும் கொடுமையானது. ஏர்வாடியில் கர்க்கட்டைகளாக விரைத்துக்கிடந்த சடலங்களில் எந்த மியூசியத்தில் வைப்பது? இதற்கு எந்த நிலையிலும் குறையாதது 'முன் அதிர்ச்சி முடியாத சமன் கதையில் வரும் ராமபத்ரனுக்குத் தரப்படும் மனநிலை சிகிட்சை சரியானது தானா? புட்டத்தில் மயக்க ஊசி, நெற்றிப் பொட்டுகள் கருகுமளவு மின் அதிர்ச்சி..... ஆனால் ராமபத்ரன் ஆழ்மனதினுள் பெண்ணுடல் மீதான ஆசை கனன்று கொண்டேயிருக்கிறது. நவீன அல்லோபதி வைத்தியம், மனித மனத்தினை முழுக்கப் புறக்கணித்துவிட்டு, இயந்திர ரீதியில் உடலினை அணுகுவதன் விளைவு கொடிய மின் அதிர்ச்சி. இதனால் பாதிக்கப்பட்ட கதை சொல்லியின் வார்த்தைகளில் எவ்விதமான கோபமும் இல்லை. அடுத்தடுத்துத் தாவும் மனநிலையுடன் அமைதியற்றுப்போன ராமபத்ரனை எப்படிச் பொருந்திக் காண்பது? இது தான் நம் முன்னர் உள்ள பிரச்னை.

'இழந்த யோகம்' கதையில் மாரிச்சாமி, ஒரு நாளைக்கு ஐம்பத்தேழு மினி சிகரெட்டுகளைப் புகைக்கிறான். இது கூடாது என்ற உணர்வுடன், சிகரெட் புகைப்பதை நிறுத்திட வழி தேடி அலைகிறான். மனதின் சுயக்கட்டுப்பாடு தேவையென்று மருத்துவர் அறிவுறுத்துகின்றார். மூலிகைத் தண்ணீர், யோகப்பயிற்சி மூலம் - பணம் செலுத்தி - புகைப்பதைக் கைவிட முயலுகிறான் எல்லாமே தோல்விதான். குருஜியின் அலுவலகத்திலுள்ள சாரதாவின் சிநேகம் தேவையானதாகத் தோன்றுகின்றது. மன விருப்பத்திற்கும், அன்றாட நடைமுறைக்குமான முரணில் அவஸ்தைப்படும் மாரிச்சாமி, ஒரு நிலையில் குற்ற மனப்பான்மையில் தவிக்கின்றான். அளவுக்கதிகமான சிகரெட் புகைப்பதை விட, அதற்கான மனநிலையில் குழம்பித் தவிக்கும் மாரிச்சாமி, அதிலிருந்து விடுபட வழிதேடி அலைவது எளிதில் புறக்கணிக்கக் கூடியதல்ல எல்லாம் எப்படியோ ஒன்றுடன் ஒன்றிணைந்து நிலைமை மேலும் சிக்கலுக்குள்ளாகிறது. இதிலிருந்து விடுபடுதல் சாத்தியமற்றபோது, மனித உயிரின் வாதைகள் நீள்கின்றன.

கோபி கதைகளின் பலமே கேலி, கிண்டல், நக்கல், பகடிதான். எந்தவொரு விஷயமும் விவரிக்கப்படும் முறையினால் முக்கியத்துவமானதாகிறது. கிராமச் சாவடிக்கு முன்னர் உள்ள ஆலமரத்தடியில் அமர்ந்து ஊர்க்கதை பேசிடும் மனிதர்களின் விட்டேத்தியான மனநிலை கோபியிடம் தோய்ந்துள்ளது. கதைகளின் வாயிலாக அறியப்படும் கோபி எதிலும் பரபரப்பு அற்றவர் திடுக்கிடும் சம்பவங்களை வெறுத்து ஒதுக்குபவர் போலியாக மனநிறைவு தரும் சுப முடிவுகள் குறித்து அக்கறையற்றவர். மயிர் பிளக்கும் விவாதங்கள், செறிந்த மொழிநடையைப் புறக்கணிப்பவர். எல்லாவற்றையும் விடப்பொதுவாகக் கதைகளை முடிப்பதில் அவருக்கு விருப்பமில்லை.இது கதைக்கான தளமாக முடியுமா என்று முதல் வாசிப்பில் தோன்றும் பல சம்பவங்கள் விவரிக்கப்படும் முறை காரணமாகவே நேர்த்தியான கதைகளாக வடிவெடுத்துள்ளன. மாபெரும் சாதனையாளர்கள், வீரர்கள், வெற்றியாளர்கள் குறித்துக் கோபிக்குச் சிறிதும் ஆர்வமில்லை. சாதாரண ஜந்துகளாய் இயங்கிக்

கொண்டிருக்கும் மனிதப்பூச்சிகளின் உலகிற்குள் நுழைந்துப் பார்த்துப் புதிய அம்சங்களை வெளிப்படுத்துவதில் கோபியின் கதைசொல்லல், நுட்பமான தளங்களில் பயணப்படுகின்றது.

எந்தநிலையிலும் இவை கதைகள் அல்ல: கதையாவதற்கான அடித்தளமற்ற சத்துக் குறையானவை: ஊட்டமற்ற பின்புலத்தியிலிருந்து வார்த்தைகளை கோர்த்து கதையாடலை எப்படி நிகழ்த்த முடியும்? என்று கோபியைப் பற்றி குற்றசாட்டுகள் உண்டு. நிதானமான வாசிப்பும், ஆழ்ந்த யோசனையும், கோபியின் கதைகளை அணுகுவதற்கான அடிப்படையான விஷயங்கள், வெளிப்படையாகத் தெரியும் பொருளுக்கு அப்பால், அகத்தினுள் கனன்று கொண்டிருக்கும் கங்குகளின் வெம்மையைப் போல, கோபியின் எழுத்துகள் இடைவிடாத தேடலை வெளிப்படுத்துகின்றன. 'ஒரு துண்டு' கதை சொல்லியின் ஒருநாள் அனுபவக் காட்சிகள் யாருக்கும் நிகழலாம். சரடில் சம்பவங்களை தொடுத்துக் கொண்டிருப்பதன் மூலம் கோபி உணர்த்த விரும்புவது என்ன? வெற்றுச் சம்பவங்களின் விவரிப்பிற்கு அப்பால் கதை சொல்லியின் இருப்பு பல்வேறு சேதிகளைச் சொல்லுகின்றது. மிகச் சாதாரண சம்பவங்கள்/ அனுபவங்கள் எளிய விவரிப்பின் மூலம் கதை வடிவம் பெறுவது, ஒருவகையில் சித்து வேலை. இது கோபிக்கு நிரம்பக் கைவரப் பெற்றுள்ளது.

சிதைந்த நிலையில் ஒரு சிநேகிதி, குறுக்கீடு, அன்பான வன தேவதைக்கு ஆகிய மூன்று கதைகளும் ஆண் - பெண் உறவு அல்லது காதல் வயப்பட்ட மனிதர்களின் மனவோட்டங்களை மூலமாகக் கொண்டவையாகும், இதெல்லாம் இப்படி ஆகுமா என்று படித்த கணவான்கள் கேட்கலாம். நிலைமை இதை விட மோசமாகிக் கொண்டிருக்கிறதே என்பதுதான் கோபியின் ஆதங்கம். எல்லாம் சரியாக இருப்பதான ஒரு நிலையில், திடீரென ஒரு புள்ளியில் நினைவுகள் குழம்பித் தேக்கமடைகின்றன. மனம் ஒற்றைப் புள்ளியில் உறைந்து விடுகின்றது. அதிலிருந்து விடுபட முயலும் உயிரின் இயற்கையான முயற்சிகளும் மனத்தின் அழுத்தத்திற்கிடையில் தோன்றும் முரண்களும், மனிதனைப் பாவப்பட்ட உயிராக்குகின்றன. ஓர்மைகள் பேய், தேவதை என எப்படி வேண்டுமானாலும் நினைவு அடுக்குகளில் பதிந்து போகலாம். சுய இரக்கம், பச்சாதாபம், சுய பிம்பச் சிதைவு என்று தன் ஆளுமை சிதைக்கப்படுகையில், அவனது உலகம் எல்லையற்று விரிந்து கொண்டேயிருக்கிறது. அவ்வுலகில் சிருஷ்டிக்கப்படும் யதார்த்தம் அவனைப் பொறுத்தவரையில் நிஜமானது. கோபியின் மேதைமை இங்குதான் துல்லியமாக வெளிப்பட்டுள்ளது. அவருக்கு எதன் மீதும் விருப்பு, வெறுப்பில்லை. மனப்பிறழ்வு x மனத்தெளிவு இரண்டுமே மனித மனத்தின் இருவேறு நிலைகள் என்ற புரிதலுடன், கடவுள் நம்பிக்கை அற்றவராக வெவ்வேறு கதைகளில் வெளிப்படும் கோபியின் ஆளுமை சிறப்பானது. அவருக்கு இடைவிடாமல் பேச விஷயங்கள் குவிந்து கொண்டேயிருக்கின்றன.

வாழ்க்கையில் படிந்திருக்கும் பொய்மையின் காரணமாகப் போலித்தனமாகி, வெற்றுப் பாவனைகளும் நடிப்புமாகக் கூக்குரலிடும் மனிதர்கள் குறித்து நிரம்ப விஷயங்கள் கதைகளில் பதிவாகியுள்ளன. சமூக நலப் பணியாளர்கள், எளிய மனிதர்கள், சராசரி கணவான்கள், சிறிய உயிரினங்கள்... பற்றிய கோபியின் பதிவுகள் முக்கியமானவை. அவரது

நிலைப்பாடு என்னவென்று கேள்வி தோன்றுகின்றது. சமூகப் பணி என்ற பெயரில் மேனாமினுக்கி முகப் பூச்சுகளுடன் உலா வரும் மேல் தட்டு வர்க்க முதுபெண்டிர், கழிவறைகளைக் கூட, அலுவலக ஊழியர்களின் தரத்திற்குத் தக்கவாறு ஒதுக்கீடு செய்த செயல், கதை சொல்லிக்கு கோபத்தைத் தருகின்றது. ஒரு சிறுகதையில் "மேடம் உள் பாத்ரூமில் பன்னீரா பெய்யுராங்க" என்ற கீழ்நிலைப் பணியாளர் கூறுவது வெறும் பகடி மட்டுமல்ல, ஆத்திரமும் எரிச்சலும் கலந்த கலவையாகும்.

சிறுகதை இலக்கணம் குறித்து, அது எந்தவொரு இஸத்தின் பின்புலத்தில் பொதிந்து வருகிறதென்று உற்றுநோக்கும் விமர்சகர்களின் பிடிக்குள்ளிருந்து, பளிச்சென்று தாவிடும் இயல்புடையன கோபியின் கதைகள். அவற்றின் சாரம் வழமையான அளவுகோல்களின் பிடிக்குள் சிக்காதவை. அவற்றுக்கெனப் புது வகையான அணுகுமுறைகளைக் கோருகின்றன. டேபிள் டென்னிஸ், இலியும் வழியும் புறப்பாடும் நெறிப்பும், உயிர்ப்பு - நாட்குறிப்புப் பதிவுகள், சமூகப்பணி போன்ற கதைகளின் விவரிப்பு முறைகள் தமிழுக்குப் புதுசு. டேபிள் டென்னிஸ் நெடுங்கதையில் பாலுணர்வு பற்றிய மனப்பதிவுகள் அடுக்கடுத்து வெவ்வேறு அடுக்குகளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. காதல், உடலுறவு என்ற சொற்களை குற்றமானதாகக் கருதி சிக்கித் தவிக்கும் மனங்களுக்கு கோபியின் எழுத்து, போர்னோவாகத் தோன்றலாம். உடல்ரீதியான பரவசங்களும் கொண்டாட்டங்களும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் மனதின் வெளிகளில் பிரச்சனைகள் தோன்ற வாய்ப்பில்லை. அமுக்கப்பட்ட பாலுணர்வுகள் பீரியடிக்கும்போது வெளிப்படும் வார்த்தைகள் டென்னிஸ் பந்தாக அங்குமிங்கும் பாய்ந்தோடிச் சலனங்களை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. இடைவிடாத ஆட்டம் போல, சொற்களின் தொடர்ந்த வெளிப்பாட்டின் விளைவாக வடிவமெடுக்கும் சொல்லாடல்கள் வாசிப்பில் வேறுபட்ட அனுபவங்களைத் தந்து கொண்டிருக்கின்றன. கோபிக்கு எதுவும் சொல்லியாளாது. ஆயிரமாயிரம் வார்த்தைகள் பொங்கி வழிந்து கொண்டேயிருக்கின்றன. அவரது வெளிப்பாட்டில் எந்தவொரு புள்ளியும் முற்றுப்புள்ளி அல்ல. அது இன்னொன்றின் தொடக்கமாக இருப்பதுதான் கதையாடலின் விசித்திரம்.

கோபியின் கதைக்குள் பயணித்திட பிரத்யேகப் பாஸ்வேடு தேவையில்லை. அவரது கதைக்குள் இயங்கிடும் மனிதர்களும் சாராசரிக்கும் கீழானவர்களே. மனிதப் பூச்சிகளின் கதையாடல் மூலம், புவியில் மனித இருப்புச் சூசகமாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் தமிழில் சிறுகதை படைத்திட்டவர்களில், கோபியின் எழுத்துகள் சுய பலத்தின் மீது தனித்து விளங்குகின்றன. ஒப்பனைகள் அற்றுப் பொலிந்திடும், கோபியின் எழுத்துகள் விருப்பு, வெறுப்பினை முன்வைக்கவில்லை. எனினும் வாசித்து முடிக்கையில், ஒருவிதமான சங்கடத்தையும் அசௌகரியத்தையும் தருகின்றன. எந்த இடத்திலும் உரத்துப் பேசாமல், மெல்லிய பகடியுடன் சூழலைத் துவம்சம் பண்ணிக் கொண்டு வெளிப்பட்டுள்ள கோபியின் கதைகள், மனித மனத்தினை நுட்பமாக விசாரிக்கின்றன. இதுவே கோபியின் ஆகச் பெரிய சாதனை.

கோபிகிருஷ்ணன் கவிதை

சொர்க்கவாசி

மோசே வந்தார்
பாவம் ஒழிந்தது

காந்தி வந்தார்
தீண்டாமை ஒழிந்தது

புத்தர் வந்தார்
உயிர்வதை ஒழிந்தது

சாக்ரடீஸ் வந்தார்
மூடசிந்தனை ஒழிந்தது

மார்க்ஸ் வந்தார்
ஆதிக்க வர்க்கம் ஒழிந்தது

டால்ஸ்டாய் வந்தார்
வேறுபாடுள்ள சமுதாயம் ஒழிந்தது

லிங்கன் வந்தார்
அடிமைத்தனம் ஒழிந்தது

பெரியார் வந்தார்
அறிவிலித்தனம் ஒழிந்தது

வேறு யாரோ வந்தார்
தீமை ஒட்டுமொத்தமாக ஒழிந்தது

உல்லாசமாக இருக்கிறேன்
காதில் கடுக்கன் போட்டுக்கொண்டு
யார் வருகைக்கோ காத்துக்கொண்டு

எழுத்தாளர் கோபிகிருஷ்ணன் குடும்ப நலநிதிக்கு நிதி அளித்தோர் பட்டியல்

1.	நடிகர் பார்த்திபன், சென்னை	5000
2.	கண்மணி, கோயம்புத்தூர்	500
3.	ஷிப்ராகர், சிதம்பரம்	50
4.	வெங்கடநாராயணன், மதுரை	500
5.	பா.ரா. சுப்பிரமணியன், சென்னை	200
6.	தமிழ்ச்செல்வம், ராஜபாளையம்	100
7.	ராமமூர்த்தி, சென்னை	1000
8.	சிவகுமார், சென்னை	2000
9.	பாஸ்கர், சென்னை	500
10.	சங்கரநாராயணன் சென்னை	500
11.	ஆர். ராஜகோபாலன், சென்னை	500
12.	ஆர். பழனிவேல், திருப்பத்தூர்	100
13.	பாலசுப்பிரமணியன், சென்னை	50
14.	நரேந்திரர், மும்பை	200
15.	ரா. சேதுராமன், பூனே	500
16.	மகாலிங்கம், பெங்களூர்	500
17.	திருஞானசம்பந்தம், பெங்களூர்	500
18.	ஸ்ரீ கே. ராமசாமி, பெங்களூர்	500
19.	விஜயன், பெங்களூர்	500
20.	பாலகிருஷ்ணன், பெங்களூர்	500
21.	ரவிசுப்பிரமணியம், சென்னை	500
22.	என். எஸ். ராமச்சந்திரன், மதுரை	1000
23.	அன்னவேலு, நாகர்கோவில்	1000
24.	தேவராஜ், கும்பகோணம்	300
25.	வைகைச் செல்வி, சென்னை	500
26.	கமலக்கண்ணன், மகாராஷ்டிரா	200
27.	செந்தில்குமார் மற்றும் நண்பர்கள், பூனே	400
28.	மாமல்லன், சென்னை	100
29.	வெங்கடாசலம், சென்னை	200
30.	நசீமா, பாண்டிச்சேரி	5000
31.	எஸ். சுப்பிரமணியன், சென்னை	1000
32.	கனிமொழி, சென்னை	1000
33.	கலாப்ரியா, தென்காசி	1000
34.	என் செல்வந்தர், சென்னை	10000
35.	டி.வி. நடராஜன், சென்னை	5000
36.	அமரந்தா, சென்னை	5000
37.	கீதாலட்சுமி, சென்னை	200
38.	அ. முத்துலிங்கம், கனடா	3330
39.	கோ. ராஜாராம், அமெரிக்கா	5000
40.	கோகுலக்கண்ணன், அமெரிக்கா	4500

41.	பி.கே. சிவகுமார், அமெரிக்கா	4650
42.	முன்றில் மகாதேவன், சென்னை	2000
43.	பாரவி, சென்னை	500
44.	சிங்கப்பூரிலிருந்து ஒரு நண்பர்	5000
45.	எஸ். ஆல்பர்ட், சென்னை	500
46.	லேனா, தமிழ்வாணன், சென்னை	1001
47.	இனியன் சம்பத், சென்னை	551
48.	ராகவன், சென்னை	500
49.	மாசிலாமணி, கலைஞன் பதிப்பகம், சென்னை	250
50.	ராமச்சந்திரன், சென்னை	500
51.	சம்பத்குமார். சென்னை	100
52.	ஜோதிர்லதா கிரிஜா, சென்னை	500
53.	பாரதிராமன், சென்னை	1000
54.	சி. அண்ணாமலை, சென்னை	500
55.	ராணிமைந்தன், சென்னை	250
56.	திலகவதி ஐ.பி.எஸ், சென்னை	500
57.	க்ருஷாங்கினி, சென்னை	300
58.	ஆர். சேகர், சென்னை	1000
59.	கே. பாரதி, சென்னை	1000
60.	பா. ஜெயப்பிரகாசம், சென்னை	500
61.	எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னை	250
62.	சூர்யபிரகாசம், சென்னை	250
63.	சிவசங்கரி, சென்னை	1000
64.	என்.எம். பதி, சென்னை	1000
65.	எஸ். கோபால், சென்னை	1000
66.	எக்ஸில், பிரான்ஸ்	1000
67.	பத்மனாப ஐயர், லண்டன்	5000
68.	க்ரியா ராமகிருஷ்ணன், சென்னை	1000
69.	திலிப்குமார், சென்னை	1000
70.	வசந்தகுமார், சென்னை	1000
71.	காஞ்சனா தாமோதரன், அமெரிக்கா	9200
72.	டாக்டர் சுந்தரம், அமெரிக்கா	4600
73.	ஆனந்த், சென்னை	1001
74.	மனோன்மணி, காவேரிப்பட்டிணம்	250
75.	ஜெயந்தன், சென்னை	200
76.	பா. வெங்கடேசன், ஓசூர்	500
77.	மா. அரங்கநாதன், சென்னை	500
	மொத்தம்	**1,08,834**

நிதியுதவி அளித்த அனைத்து நண்பர்களுக்கும், நேரில் உதவி செய்த எழுத்தாளர்கள் நா. முத்துக்குமார், அழகிய சிங்கர், வைத்தீஸ்வரன் மற்றும் கோபிகிருஷ்ணன் நண்பர்கள் குழுவைச் சேர்ந்த வெளிரங்கராஜன், அமரந்தா, லதாராமகிருஷ்ணன் ஆகியோருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. உஷாராணி
(கோபிகிருஷ்ணனின் துணைவியார்)

எஸ். செந்தில்குமார் கவிதைகள்

கடற்கரையில் பயணம்

ஒரு படகில் ஒருகடலை கடந்துபோனேன்
ஒரு கரையில் ஒரு பூங்காவில் ஒரு இருக்கையில்
உன்னுடன் சேர்ந்துகொண்டேன்
ஒரு இருக்கை ஒரு பறத்தலில் ஒரு வானம்
சென்றடைந்தோம் நாம்
ஒரு சிகரெட்டை ஒரு மதுபுட்டியை தந்து மகிழ்ந்தது
ஒரு நிலவு
ஒரு மாயகம்பளம் வேண்டி கேட்கிறோம்
தரையிறங்கிக்கொள்ள
ஒரு பயணமற்ற பயணத்தை
ஒரு சூரியன் மூலம் நிலவு நிகழ்த்திவிட்டது
ஒரு கடற்கரையில்
ஒரு ஒருவன் எப்போதும் போல ஒரு இரவிலிருந்து
ஒரு அதிகாலை வரை
0

ஸ்திரிகளின் கடிகாரம்

எண்ணற்ற திராட்சை ரசக் கோப்பைகள்
எண்ணவியலாத உதடுகள்
கொடுப்பவரின் கைகளும் பெற்றுக்கொள்பவரின் கைகளும்
சொல்லமுடியாத அழகாகயிருக்கின்றன
உன் கடவுளை பிரார்த்தித்துக் கொண்டிருப்பாய்
உன் பகல் பொழுதை முடியாததாகவும்
துவங்கியதும் முடிந்து விடுவதாக இரவையும்
யாரோ செய்து வைத்திருக்கிறார்கள் உனக்கான கடிகாரத்தில்
நீ காலம் கடந்த கர்ப்பத்தை சுமந்தபடி
கதைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறாய் பகல் முடிந்துவிடும் ஆவலில்
கருந்திராட்சைகளை பறிப்பவளின் இரவு
திராட்சையின் வடிவே சுருங்கியிருக்கிறது
பறிக்கப்பறிக்க நீள்கிறது திராட்டிசைக்கொடிகளின் வழி
அவள் பகல்
இரவு கூழாங்கல்லைப் போல சிறியதாகவும்

கழுதையின் வாலின் நீளமே இரவு இருந்ததாகவும்
பகல் முழுதும் பேசிக்கொள்ளும் ஸ்திரீகள்
திராட்சைகளை கோப்பைகளில் பிழிகின்றனர்.
0

தேனீக்களின் தேசத்தில் தரையிறங்காத மாயக் கம்பளங்கள்

தரையிறங்காத மாயக் கம்பளங்களின் வருகையினை
எப்போதேனும் உறுதிசெய்து விடுகிற காகித தேவதைகள்
நகரங்களின் முடிந்துவிடாத சுவர்களில் படர்ந்திருக்கின்றனர்.
கிழிக்கப்பட்டு மடிந்த தேவதைகளுக்கென
அழுது கொண்டிருக்கிறான்
காகிதம் விட்டு வெளியேறாத துக்கத்தில்
கரைந்த ஒருவன்
இறக்கையுள்ள அத்தேவதைகள் பறந்தபடியே
இருக்கின்றன தேனீக்களின் தேசத்தில்
ரகசியமாக சுவர்களில்
ஒட்டப்படுகிற தேவதைகள் அவரவர் நிறங்களை
இழந்து வருகிறார்கள் தவிப்பின் அனலில்
தங்கள் அறைகளில் ஒட்டப்படுவதற்கென
தேவதைகளை தேடுபவர்கள் காணாமல் போன
தேவதைகளின் முகங்களையும் உடல்களையும்
எப்போதும் ஞாபகங்களில் இருத்திக்கொள்கின்றனர்
மனதில் சுவர் எழுப்பி.
இன்னமும் தேவதைகள் சுவர்களிலேயே
படர்ந்திருக்கின்றனர் காகிதங்களாக
இறந்து போன காகித தேவதை ஒருத்தியின்
விவரிக்கயியலாத சிரிப்பு
தேனீக்களின் தேசத்தில் பகல்பொழுதின்
முதல் காட்சிகளாக துவங்குகிறது
மனதில் எழுப்பும் சுவர்களில் எப்பொழுதும்
பெரிய தேவதைகளே
அசைகின்றதை விரும்பாத சின்ன தேவதைகள்
துக்கத்தோடு சிரிக்கின்றனர்.
கண்ணில் புலனாகத்தேனை
தேனீக்கள் தேவதைகளிடம் வழிகிறதென
இரவு தோறும் மன சுவரில் நெளியும் காகிதங்களில்
கூடி ஒய்ந்து தூங்குகின்றனர்.
0

சங்கர ராமசுப்பிரமணியன்

கவிதைகள்

அவள் சிறுமியாயிருந்த போது
பெற்றோர் அவளுக்கு ஒரு வெள்ளி யோனியை
பரிசளித்தனர்
அப்போது அவளுடைய தந்தை ஒரு சிறுநகரத்தில்
ஆசிரியராய் இருந்தார்
வீட்டின் குளிர்மர இருக்கைகளும் இருந்தன
வெள்ளி யோனியுடன் அவள் வளர்ந்து
பருவமடைந்த போது
தந்தை தலைமையாசிரியராகியிருந்தார்
வெள்ளியோனிக்கு
நகரத்தின் தலைமைச் செயலக உதவி அதிகாரியுடன்
திருமணம் செய்விக்கப்பட்டது
சிறுமியின் ஊரிலிருந்த ராட்டை கிணற்றின்
சப்தம்
நகர்வீட்டிற்குள்ளும் அவளுக்கு
முதலில்
ஒலித்துக் கொண்டிருந்தது
குடித்தனத்தின் சத்தத்தில் கிணற்றின்
முனகல் அமிழ்ந்தே போனது.

இப்போது வெள்ளியோனி தூர்ந்து
மந்திர ஜெபங்களை முணுமுணுக்கத்
தொடங்கி விட்டது.
ஊரின் கிணற்று ராட்டை சப்தம் வேறு
கனவுகளில் வர ஆரம்பித்திருந்தது
தலைமைச் செயலக அதிகாரியும்
வெள்ளியோனி அம்மாவும்
தங்கள் சிறுமிக்கு பரிசளித்தனர்
ஒரு தங்கயோனியை

சிறிதாய் இருந்தபோது
தங்க யோனி பட்டு மென்மையாக
மடிந்தபடி இருந்தது

ஒரு கண்ணில் கனிவு
மறு கண்ணில் குறும்பு
மலர்கள் பூத்த உள்ளுடைகள்
மேலுடைகள்
என
மனதின் உருத்தெரியாத
கைகள் போஷித்தன தங்க யோனியை

இப்போது வெள்ளியோனி பூஜை பீடமாகிவிட்டது.
தங்க யோனி பருவத்திற்கு வந்துவிட்டது.
உடலெங்கும் பரவுகின்றன அதன் கட்டளைகள்
நிழல்களை பிரதிபலிக்கும் தங்கயோனி
எந்த காதலையும் ஞாபகம் வைத்துக் கொள்வதில்லை.

சிறுநகரத்தில் வெள்ளியோனியின் நினைவிலிருந்த சாட்டைக் கயிறு
வீட்டின் நடுவில்
பழம்பொருள் அலங்காரமாய் நிற்கிறது
வெள்ளியோனி 'சிவ சிவ' ஜெபித்துக்
கொண்டே இருக்கிறது.

தங்க யோனி
நகரத்தை அலைக்கழித்தபடி
சாலையில் விரைகிறது.
0

ஒரு சோப்பு

உங்கள் கையிலிருந்து தவறி
நதியின் அடி இருட்டுக்குள் நழுவிவிடுவதைப் போல்தான்
அது.
இதைப்போல உங்களுக்கும் நேர்ந்திருக்கும்
ஒரு சின்ன பறிகொடுப்பு
நிறைவுறாத முத்தம்
சிறுமுரணில் நிகழ்ந்துவிட்ட முறிவு
புறக்கணிப்பு
இப்படி எத்தனையோ
அதைப் போல உனக்கென்ன நடந்ததென்று
என்னிடம் கேட்காதீர்கள்
அது அவசியமற்றது.

நானும் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்
என் கையிலிருந்து சோப்பு தவறி
நதியின் அடி இருட்டுக்குள்
நழுவி செருகுவதை
நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

இன்று நாங்கள் பார்த்தது
கரும்பழுப்பு நிற ஆமையை
ஓய்வெடுக்கவோ
கரைபார்க்கவோ
ஒரு சிறிய யானையைப் போல்
ஒதுங்கியிருந்தது
ஒரு காகம் வந்தால் சண்டை
இரண்டு கருங்காகம் வந்தால் மகிழ்ச்சி
மூன்று கருங்காகம் வந்தால் சுபம்
நான்கு
ஐந்து
ஆறு என்று எண்ணிக்கொண்டே போவாள்
அவளின் எண்ணிக்கையை
முடிவுக்கு வராதவாறு குழப்பிக் கொண்டிருப்பேன்
இதன் நடுவில்
இந்த கரும்பழுப்பு நிற ஆமை கரைக்கு
எங்கிருந்து கடல்கடந்து வந்து எங்களை
ஆசீர்வதிக்க ஒதுங்கியிருந்தது
முன்பு பார்த்த நீலநிற ஆமை
என் நினைவிலேயே இல்லை.
0

ஜிம்கார்பெட்டை ஏழாம் வகுப்பில்
அறிமுகம் செய்தான் பிரபு
வழக்கம்போல் பெயர் மட்டும் ஞாபகத்தில் இருக்க தொடராமலே
விட்டுவிட்டேன்
ஆனால் புலியோடு சம்பந்தப்பட்டிருந்த அந்த வேட்டைக்காரனின்
பெயர் ஜிம்கார்பெட்டை தவிர வேறு எதுவாகவும் இருக்க நியாயமில்லை
ஜிம்
கார்பெட்
இருபத்திநாலு வயதில் சந்திரசேகரன் தான்
குமாவுனின் புலிகளை எனக்குத் தந்தது

சாம்பவாத் புலி பிறக்கும் போதே
அதன் விதியும் கார்பெட்டின் விதியும் சந்திப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது
போலும்
வனம்
மிருகங்கள்
எதுவும் பரிச்சயம் இல்லாவிட்டாலும்
வேட்டை என்றவுடன் மூளை கொதிப்பேறத்தான் செய்கிறது
ஒரு பிஸ்டலின் உலோகக் குளிர்ச்சி
துப்பாக்கி சுடும் வாகில் என்
சுட்டு விரலையும் நடுவிரலையும் சேர்த்துச் சுடுகிறேன்
பெருவிரல் டிரிக்கரை அழுத்துகிறது
கண்ணாடிக்கு அப்பால் என் மேற்பார்வையாளரின் தலை
கண்ணாடி துளைக்க
தலை சிதறடிக்கப்படுகிறது
மேகசினை உருவிப் பார்க்கிறேன்
ஒரு தோட்டா கூட மிச்சமில்லை
சந்தேகமே இல்லை
சிதறடிக்கப்பட வேண்டிய கபாலம் தான் சிதறடிக்கப்பட்டிருக்கிறது.
இரத்தம் வரவில்லை.
சாம்பவாத் புலியின் விதியும்
ஜிம்கார்பெட்டின் விதியும் எங்கேயோ சந்திக்க
தீர்மானிக்கப்பட்டிருந்தது.
0

உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட விளையாட்டின்
வரையறைகளை நீங்கள் அறிவீர்கள்
இருந்தும் ஒருவருக்கொருவர் விதிகளை மீறி
உங்கள் படைப்பாற்றலை பயன்படுத்தி
ஒரு தனித்துவமான ஆட்டமாய்
வளர்த்தெடுத்த பெருமை உங்களையே சாரும்
இதையெல்லாம் உங்களுக்கு நான் சொல்ல
வேண்டியதே இல்லை
உங்களில் சிலர் விளையாட்டில் குதூகலமாய் ஈடுபட்டும்
ஏதோ விதி விட்ட வழியில் நடப்பதைப் போல
பாவனைச் சோகத்துடன் அமர்ந்திருக்கும் உங்களுக்காகத்தான்
இதை சொல்ல வேண்டியுள்ளது
மேல்பெர்த்தில் அமர்ந்தவர் எதிர்பெர்த்தில் உள்ளவரை
அடிக்க வேண்டும் என்பது விதி
ஆனால் கையெட்டும் வரை.
0

சீதமண்டலம்

கண்டராதித்தன்

பதுமகோடி வருடங்களாக
இந்தஉலகம் உன்னைப்போலொரு
பெருந்தகைக் கூனனுக்காக
காத்திருந்தது.
பதும கோடி வருடங்களும்
உலகத்தினர் பெருந்தகைக் கூனனை
கனவு கண்டதொழிய
காத்திருந்திருக்கவில்லை

- வேதாள விருட்சம் சொன்னது.

மகிஷபுரி செழிப்புடனிருந்தபோது
வேதாளா உலக கட்டளைப்படி
சாத்வீக தேவருலகம் இருக்க
கடமைபபட்டது
அவர்களின் பூஜிக்கப்பட்ட
உத்தம உத்தமியர் மாயப்படி
வைக்கப்பட்டனர்

இரவின் கரிய இருளை
நீருக்கு பதிலாக இருகரைகளையும்

கொட்டி வழிந்தோடும்படி
ஆறு தங்கியது

தங்கியதால் ஓடிய இருள்
ஆற்றின் முடிவில் திரண்டு
ஒரு குழியில் நிற்கும்
மழை மேலும் வலுக்கும்போது
கருமை நெடி கொண்ட இருள்
ஆறு முழுக்க பெருக்கெடுத்து
சப்தமெழுப்ப
மகிஷபுரி குகை வேதாளம்
விழிப்பு கொள்கிறது.

சூர்ய சந்திர ஒளிகளாலும்
கருடபுரத்து பஞ்சவர்ண பக்ஷியாலும்
கொழுந்தசையும் கொடிகளாலும்
விகல்பமற்ற பார்வையின் விகல்பத்தாலும்
ஊர்வனவற்ற விஷ ஜந்தாலும்
மகிஷம் குயானையும்.

— வேதாளம் அறியாமல்
விருட்சம் அறிந்ததாகச் சொன்னது.

பிணைந்த பாம்புசிற்பக் கற்களைக்
கொண்டதொரு ஆலவிழுதினுள்ளும்
இரவு கவ்விவிட்டது

ஊர் முகட்டில் நின்று

துறக்க வேதாளமாகிய நான்
கேட்பது என்னவென்றால்
மக்களூரத்து அன்னம் புசித்த
வீடுகளெல்லாம்
புருஷர்கள் பத்தினிகளை
கூடிக்கலவாயும் சாமம் வந்ததா

வந்தது

அந்திமுதிகள் சாபத்தால் பிரிந்த
தம்பதிகள்
ஒன்றோடொன்றாகினரா

ஒன்றோடொன்றாகினர்

கேட்டது கேட்டபடி
சொன்னது சொன்னபடி
வந்தே தீரும் மக்களுத்தின்
மாட்சிமை பொருந்திய
எம்பாடிக காலசூழ்ந்த
எம்பாடிக மனையமெரிக்கும்
எம்பாடிக கோட்டைவாழ்

பாதுகா பாதாள் நமக்கரித்த
கரிய இருளின் ஒரு துளியை
பிராட்டிகளின் தொடைபிடிக்கில்
சொட்டி

புத்திரசோகமும் பாக்கியமுமற்று
பேறுகாற்று பிறவிக்காக
இன்று
ஆணைபின்படியும் விசுவாசப்படியும்
இன்னும் நான்காவது சாமத்தில்
அழித்துவிட்டு சபனாம் கொள்ள
ஊர்நக்குள் காவடிவைக்காமல்
விட்டுப்பாடிககளா எட்டாமல்
கிழக்கும் மேற்கும் திரும்பாமல்
பாதாள் சொன்னதை சொன்னபடி செய்து
திரும்பிப் போகிறேன். கேட்கட்டும்.
()

நாளொரு நாளில்
காரிருள் ஓடிய ஆற்றங்கரையில் விளைந்த
தர்ப்பை புற்களை சேகரிக்கும்
தருணத்தில் இரட்டைமுக
நாகமொன்று தலைகாட்டி
எமது பிதுர்களில் புண்யகோடி
எம்மிடம் தெரிவித்தது
மனுஷ ஜீவிதத்திற்கு உதவாதிருக்கும்
வரம்தந்து
தவபதம் சேர்ந்தாரென்பது.

— வேதாளம் சொல்லச்சொல்ல
நான் சொன்னது.

மகிஷமலை பாதாளியின் கட்டளை மீறிய
தம்பதிக்கு
ஒரு கை நாகத்தைப்போல்
மகவு ஜனித்ததும்
வேதாள உலகின் சான்றோர்களறியாமல்
நகரின் விசுவாசக் குருடிகளின்
நாசிகளுக்கு வாசம் காட்டாது
கரிய இருளோடிய ஆற்றின் கரையில்
தவழவிட்டுத்திரும்பினர் தம்பதியர்

வீடுவீடாக கேட்டுக்கொண்ட
வேதாள பட்டாளத்திடம்
நேற்றொன்றே இல்லாத மகிஷத்தில்
மகவொன்றிற்கேது வாய்ப்பென
மறுத்ததும்
செங்குச்சியைச்செருகி
கண்காணிப்புள்ள வீடென பறந்தன.
0
சூர்ய ஒளிபிறந்தது
சந்திர ஒளிபிறந்தது
தரைகளில் மிக நீண்டநீண்ட
கொடிகள் அசுரவேகத்தில் முளைத்து
ஸ்படிகமலையை மூடியது
மகிஷத்தின் சான்றோர்கள்

உயிர் நீக்கம் செய்து கொண்டதும்
அஞ்சாமலிருந்த வேதாளம்
விமோசன வழிகளைத்தேடி அலைந்தது
ஒரு கை பாம்புடன் பிறந்த
பெருந்தலைக்கூனன் திரும்பிவந்தால்
மகிஷம் உருப்பெறுமென
ஸ்படிக மரம் சாய்ந்ததும்
வேதாள உலகின் சாமராஜ்யம் அழிந்தது
சர்வ பாதாளி
வேதாள உருக்கொண்டு கிளம்பினாள்
()
இஃதென் கனவென்று
நான் கூறுவது காட்சிகளாக
உருமாறும் பெருந்தலைக் கூனன் நான்
பதுமகோடி வருடங்களாக
மகிஷபுர பாதாளி பின்தொடர
வடிவுமாற்றி வாழ்கின்றேன்
அறம் அன்பு தானம் பரிபாலனம்
மிக்கது கருடமென சொல்லக்கேட்டேன்
யோனி உதிர்ந்த மங்கைக்கு
தக்க துணையில்லை யென்பதும்
எனக்கு சாதகமாயிற்று
ஆகவே கருடபுரி நோக்கி பயணிப்பதை
உசிதமாக கருதிச் செல்கிறேன்.

- மகிஷபாதாளி தேடும்
ஒரு கை பாம்புக் கூனன்
விருட்சத்திடம் சொல்ல நினைத்தது.

அகண்ட பாத்திரங்களில் கொதிக்கும் நீரில்
அள்ளிப் போடுகின்றார்கள்
க்ஷேமலாபத்துடன் இருந்து போனவர்களின்
விழிகளை

வெந்த சுட்டுவிரலைக்கிள்ளி
வாயில் போட்டு சூடுபொறுக்க
திணறுகிறார்கள் அவசர பாலகர்கள்

மலங்களும் கசடுகளும் களைந்த
குடல்கள் நிறைந்த கலன்களில்
காரம் மிகுதி சேர்க்க வேண்டுமென
தன்னிலும் முதியவர் அறிவிக்கிறார்

குருதி நிறைந்த பாத்திரங்களை
குளிர்பதத்திற்கான பாதாள அறைக்கு
கொண்டுபோகிறார்கள்
அறுத்த தொடைகளைவழித்து
சத்தானபாகமென்று தனி பதத்தில்
கவனிக்கப் படுகிறது
கருட நகரெங்கும் தீவர்த்திகள்
பந்தத்துடன் திரியும்போது
முக்கொம்பு ராட்சசர்கள் விருந்தைப்பற்றி
அளவாளாவினர்
கனத்த சரீரம் கொண்டவர்கள்
இராஜபாட்டையில் - யோனியுதிர்ந்த மங்கையின்
கண்பட சாஷ்டாங்க நமஸ்காரம்
செய்கிறார்கள்
புதிய மரபிற்கான ஆணவத்திடம்
பணிவாக சிலர் முட்டிவரை
வளைந்து நின்றார்கள்
பழுக்கக்காய்ச்சிய குழாய்கள்
செருகப்பட்ட புத்திமான்கள் பின்னேவர
கம்பீரமாகச்சென்றாள்
யோனி உதிர்ந்த மங்கை

– கருடபுரத்தின் ஒரு திருவிழா
நாளின் காட்சி

எட்டுத்திசைகளிலும் நற்குறிகள்
தென்பட்டன
கருடபுர அரசி மனைக்குச்
சென்ற நேரம்
விகல்பமற்று என்னைப் பார்த்தாள்
அதன் பிரதான மையம் எனதிடைக்கும்
தொடைக்குமிடையில் குவிந்த நித்திர நிலை
எளிதாக வீழ்த்தும் தந்திர வீச்சு

அற்புதம் கண்டிராத நேர்த்தி
திரளான பாசாங்கு
இரைவீழ்ந்த பெருமிதத்துடன்
வாயிலடைந்து உள் சென்றாள்.

– கூனன் கருடபுர அரசியைக் கண்டது

அவளை நான் பின்தொடர
எனது இடதுகையாகிய நாகம்
வெறுப்புடன் எனை நோக்கி நாவசைத்தது

எனதன்பு நாகமே
நம்மில் யார் யாருடைய உடல்
எனது சந்ததியின் எந்த பயனுக்காக
நானுனை எனது இடது கையாக
பாவித்திருப்பது
நமது உடலின் விகாரமான
பொருத்தமற்ற உபரியான அங்கங்களாகிய
நீயும் நானும் விடுவித்துக்கொள்ள
தக்க தருணமிது
நமது மூதாதையரை நினைவுபடுத்தி
கருமஞ்செய்ய உபவாசதினம்
கைகூடியிருக்கிறது

நீ உனதுடலின் முழு அசைவிலும்
என்னை நெகிழ்த்தியிருந்தாய்
மிதந்த நேரங்களில் என்னைவிட
கோபம் கொண்டாய்
உனது மேனி எனது மற்றொரு
கையைவிட வழுவழுப்புடனும்
மிருதுவாகவுமிருக்கிறது

எனதொரு கை அசைவற்றிருந்தபோது
நீ நெளிந்தபடியிருந்தாய்
நன்று, கடவுளின் வம்சபிதுர்களுக்கு
மனம் மகிழும்படி உபன்யாசம் கூற
நாவன்மை கொண்டோரே வருக
அவர்களறிந்த பாஷைகளில்

வேதங்கள் கூற
வேதியர் கூட்டத்தாரே வருக
யாக குண்டங்களெரிய
அக்னியுரு வருக வருக.

கடவுளறிந்த பாஷையால்
நல்லோர்கூறிய ஆசிகளால்
நம்மைப் பகிர்ந்து கொண்டது நிகழ
என்னைவிட்டு கீழறிங்கிச் செல்.

— பாம்பு விகார உரு நீங்கியது.

மகிஷபுரத்து பிதுர்வம்ச குமாரனே
கனவுகளை காட்சிகளாக்கும்
பெருந்தகைக் கூனனே
கருடபுரி அரசியை நீ
விரும்பியதால்
உனது பிறப்பால் நீ
பெற்ற மாந்ரீகப் பலன்களை இழந்து
மனுஷபாவமடைந்து
இந்த இரு மாயலோகங்களையும் மறந்து
நீயும் கருடபுர அரசியும்
பூலோகத்தில் ஜீவிதமாகி
அல்லல்பட ஸ்படிகலோகத்தின் மீது
ஆணையிட்டு சபிக்கின்றேன்.

— மகிஷபுர பாதாளபாதாளி.

மகாமேருபர்வத்தின் உச்சியில்
ஒரு அசரீரி சொன்னது
நீங்கள் இந்த உலகைச் செப்பனிட்டு
வாழத்தொடங்குங்களென்று

இந்த மங்கையுடன் வெகுதூரப்
பிராயணங்களைச் செய்தேன்
காடுகளில் மலைகளில் சமுத்திரங்களில்
மழை வருஷித்தது
குகைகளில் தஞ்சமடைந்து

ஒருவரையொருவர் தழுவி
புணரக் கற்றோம்
மகவுகள் பெருக்கப் பெருக்க புணர்ந்தோம்
துயில் கொண்டோம்
சாவைக் கண்டோம்
ஜீவிதம் தொடர மழைவலுத்தது
அரசர் வந்தார்
மகாராணி வந்தாள்
மந்திரி சேனாதிபதி வந்தார்கள்
வீரர்கள் மக்கள் தலைகள் தென்பட்டன
வம்சத்தின் மூத்த குடிகளாகிய நாங்கள்
தயாமண்டப இடிபாட்டில் இறந்தோம்
புற்றுகளும் புதர்களும்
நிழலும் இருளும் அடர்ந்த
இடங்களில்
சீதமண்டல பிறப்பெடுத்து
திரிந்து கொண்டிருக்கிறோம்.
()

போர் தொடர்கிறது

தமிழில்: எஸ். பாலச்சந்திரன்

அகஸ்டோ ரோவா பஸ்டோஸ் 1917 - ஆம் ஆண்டு பாரகுவேவில் பிறந்தவர். இராணுவப் புரட்சிகளால் பாரகுவே அரசுகள் அடிக்கடி கவிழ்க்கப்பட்டு வந்த கொந்தளிப்பான ஆண்டுகளில் ஒரு வங்கியாளராகவும் செய்திகாளராகவும் பணிபுரிந்த இவர், ஸ்ட்ரோஸ்னர் என்னும் சர்வாதிகாரியின் ஆட்சியின்கீழ் பாரகுவேவில் தலைமறைவாக வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். பின்னர் பியூனஸ் அயர்ஸுக்குத் தப்பித்துச் சென்றார். அங்கு பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். அதன்பின் பிரான்ஸிலுள்ள டௌலூஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். இவர் தனது தாய்நாட்டில் வசிக்க முடியா விட்டாலும்கூட, பாரகுவே நாட்டுக் கல்வித்துறை இவர் எழுதிய Sun of man என்ற நாவலைப் பாடநூலாக வைத்திருக்கிறது. இவர் El trueno entre las hojas (Thunder in the Leavs) என்ற சிறுகதைத் தொகுப்பை 1953 - ஆம் ஆண்டிலும், El Supremo (I, the Supreme) என்ற நாவலை 1974 - ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். 1961 - ஆம் ஆண்டு இவர் எழுதிய Hijo de Hombre (Son of man) என்ற நாவலை

விடியல் பதிப்பகம் தற்போது போர் தொடர்கிறது என்ற தலைப்பில் தமிழில் வெளியிடுகிறது. இந்நாவலைத் தமிழில் மொழி பெயர்த்திருப்பவர் எஸ். பாலச்சந்திரன். தற்காலத்தின் தலைசிறந்த நாவல்களில் ஒன்றாக மதிக்கப்படும் இந்த ஸ்பானிய நாவலின் ஒரு சில பகுதிகள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

இரயில் நின்றது. இடாபேவில் நடந்த அனைத்தும் இங்கும் நடந்தன. இரயிலுக்கு செல்வதற்கான இடைவழிகளில் உற்சாகம் நிறைந்த பயணிகள் உள்ளே வருவதும் வெளியே போதுவாக இருந்தார்கள்.

மறுபக்கத்தில் இருந்த நடைபாதையில் பெண்கள் கூவி விற்றுக் கொண்டிருந்தார்கள். கூடைகளுக்குக் கீழே அவர்களுடைய முகங்கள் உலர்ந்த களிமண் நிறத்தைக் கொண்டவையாகக் காட்சியளித்தன. அவர்கள் கிளிகளைப்போலக் கத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களின் உதடுகளிலிருந்து சுருட்டுகள் தொங்கிக்கொண்டிருந்தன.

இங்கு நடந்த அனைத்தும் இடாபேவையே நினைவுபடுத்தின. அந்த பருத்த மனிதன் வெளியே எட்டிப் பார்த்தபோது அவனுடைய பெரிய உடல் ஜன்னல் முழுவதையும் அடைத்துக் கொண்டது. அவனுடைய கை துப்பாக்கி உறைவாருக்கும் அப்பாலிருந்த தோட்டா உறைவாரை நோக்கி நீண்டது. அந்த உறைவாரும் வெள்ளி மணிகளால் அழகுபடுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து அவன் கைநிறையப் பணத்தை எடுத்து, சிபாக்களையும் வாழைப் பழங்களையும் வாங்கினான். அவனுடைய மோதிரத்திலிருந்த வைரத்தின் நீலநிற ஒளி சிபா - விற்பவளின் பழுப்புநிற முகத்தில் பட்டுப் பிரதிபலித்தது. அவன் ஒரு குவளை அலோஜாவையும் வாங்கி, அதிலிருந்த தூசு தும்புகள், செத்துப்போன ஈக்கள் ஆகிய அனைத்துடனும் ஒரே மடக்கில் குடித்தான்.

நான் தாகத்தால் செத்துக்கொண்டிருந்தேன்.

இரயில் மீண்டும் கிளம்பியது. வீடுகள், வயல்கள், விலங்குகள், தொலைவில் தெரிந்த காடுகள் ஆகிய அனைத்தும், ஒரு மாபெரும் பச்சைப் பம்பரத்தின்மீது ஒட்டப்பட்ட படங்களைப் போன்று சுழன்று எங்களுக்குப் பின்னால் சென்றன.

"கொஞ்சம் சாப்பிடுங்கள், நண்பர்களே"

அந்தப் பண்ணை நில உரிமையாளன் பெரிய, வட்டமான சிபாக்களையும் பெரிய பழச்சீப்புகளையும் தனது நண்பர்களுடன் பகிர்ந்துகொண்டான். உணவால் ஈர்க்கப்பட்ட அவர்கள் ஆர்வத்துடன் அவற்றைச் சாப்பிட்டார்கள்.

எங்களுடைய உணவுக் கூடையைப் பற்றிய நினைவே எழாத அளவுக்கு மிகவும் களைத்துப் போனவளாகவும் கவலையடைந்தவளாகவும் டாமியானா இருந்தாள். பண்ணை நில உரிமையாளனின் உணவைப் பார்த்தவுடன் என் வாயில் எச்சில் ஊறியது. ஆனால் சாப்பிடுவதற்கு ஏதாவது தருமாறு வாய்விட்டோ, சைகையின் மூலமாகவோ டாமியானாவைக் கேட்கக் கூடாது என்று நான் முடிவு செய்திருந்தேன். நான் ஒரு வளர்ந்த ஆண்மகனைப்போல நடந்து கொள்ள விரும்பினேன், அவளுக்கு நான் துணையாக வருகிறேனே தவிர, அவள் என்னைக் கவனித்துக் கொள்ளிவரவில்லை என்று காட்ட விரும்பினேன். அஸன்ஷியோன் சிறையிலிருந்த அவளுடைய கணவனைப்பற்றி அவள் நினைத்துக்கொண்டு இருந்திருக்கக்கூடும். சில சமயங்களில், துணி துவைப்பதற்காக அவள் ஆற்றுக்கு வரும் போது, அவனைப்பற்றி என்னிடம் பேசுவதுண்டு. அப்போதெல்லாம் டாமியானாவின் அழகான முகம் துயரமும் ஏக்கமும் நிறைந்ததாகத் தோன்றும். இளமையான அவளுடைய உருவம் நீரின் விளிம்பில் அசைவற்று நின்றுகொண்டிருக்கும். சோப்பைக் கடிப்பதற்காக வரும் சிறிய மீன்களுக்கு மத்தியில், ஆற்றின் மணல் நிறைந்த அடிப்பரப்பில் பிரதிபலிக்கும் அவளுடைய பிம்பத்தையே நான் பார்த்துக் கொண்டிருப்பேன். ஆனால் இப்போதோ அவளுக்கு ஏற்பட்ட களைப்பும் அவளது முகத்தில் இருந்து தூசியும் அவள்

பொலிவிழந்தவளாகவும் வயதானவளாகவும் தோன்றக் காரணமாகி விட்டன.

கிரிங்கோ இப்போதும் கண்ணயர்ந்திருந்தான். சில சமயங்களில் அவன் தூக்கத்திலிருந்து விடுபட்டு, தனது அன்னியக் கண்களால் எங்களைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான். அவன்எந்த நாட்டைச் சேர்ந்தவன் என்று இன்னும் எனக்குத் தெரியவில்லை.

தவளையைப்போலக் கத்தி அழத தொடங்கியது குழந்தை. டாமியானா சால்வையால் மூடிக்கொண்டு அந்தக் குழந்தைக்குப் பால் கொடுத்தாள். திடீரென்று வீசிய காற்றில் சால்வை விலகியது. பாலில் நனைந்த ரோஜா நிறக் காம்புகளைக் கொண்ட, நீல நரம்போடிய அவளுடைய மார்புகள் வெளியே தேரிந்தன. உடனே என் வாயில் எச்சில் ஊறியது. இந்த அற்புதமான அழகை வீணடித்துக் கொண்டிருந்த நோயாளிக் குழந்தையின்மீது எனக்குக் கோபம் வந்தது.

" உன் குழந்தைக்கு என்னவாயிற்று?"

திகைப்புற்ற டாமியானா கண்களை இமைத்தாள். அவளுக் கருகில் ஒரு வயதான பெண்மணி உட்கார்ந்திருந்தாள். அவள் பிரம்பாலான விசிறியால் விசிறிக்கொண்டிருந்தாள். அந்த விசிறியில் இதயத்தைத் திறந்து காட்டு இயேசுவின் படம் வரையப்பட்டிருந்து.

"அவனுக்கு என்னவாயிற்று"?

" எனக்குத் தெரியாது," என்று தயக்கத்துடன் கூறினாள்

டாமியானா. "அவனை மருத்துவரிடம் எடுத்து செல்கிறேன். நாங்கள் அஸன்ஷியோனுக்குப் போகிறோம்"

அடக் கடவுளே இன்னும் வெகுதூரம் போக வேண்டுமே" என்று தனது உடைந்துபோன குரலில் குறைபட்டுக்கொண்டாள அந்தக் கிழவி. "அவனுக்கு ஒன்றுமிருக்காது. மூலிகை வைத்தியத்திலேயே அவனைக் குணப்படுத்தி விடலாம் என்று நினைக்கிறேன்."

'நாங்கள் எல்லாமே செய்துபார்த்துவிட்டோம். ஆனால் அவனை மீண்டும் மீண்டும் அந்த நோய் தாக்கிவிடுகிறது.'

"என்ன நோய்?"

"அவனுக்கு வலிப்பு வந்துவிடுகிறது. அப்போதெல்லாம் அவனுடைய உடம்பு செயலிழந்துவிடுகிறது. அவன் வாயில் நுரை தள்ளுகிறது."

"எனக்கு தெரியும், இது காக்காய் வலிப்புதான். சாவதற்குச் சமம். இதை எப்படிக் குணப்படுத்துவது என்று எனக்குத் தெரியும். ரூ செடியின் தண்டு, சோம்பு, கீழாநெல்லி விதை ஆகிய மூன்றையும் தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்து ஆறவைக்க வேண்டும்..."

"அதையும் நாங்கள் செய்து பார்த்துவிடடோம்."

அந்தக் கிழவி கண்களைச் சுருக்கிக்கொண்டு குழந்தையைப் பார்த்தாள். அவளுடைய தட்டை மூக்கில் சுருக்கங்கள் காணப்பட்டன, அவள் வாயில் சுருட்டு இருந்ததால் வாய் கோணலாகக் காட்சியளித்தது. அவளுடைய உதட்டுக்குமேல் நீண்ட வெள்ளை முடியைக் கொண்டே ஒரு பெரிய மச்சம் அவள் பேசும் போதெல்லாம் மேலும் கீழும் நகர்ந்தது. இதயத்தைத் திறந்து காட்டும் இயேசு பிரானின் படம் வரையப்பட்ட சிசிறி அசைவற்றுக் கிடந்தது. அவள் தோல்வியை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

"நீ அவனுக்குக் கழுதைப்பாலைத் தவிர, வேறெதையும் தரக் கூடாது."

"நாங்கள் ஆட்டுப்பாலைக் கொடுத்துப் பார்த்து விட்டோம்."

"இரண்டும் ஒன்றல்ல. கழுதைப்பாலைத்தான் கொடுக்க வேண்டும், விலங்குகள் வெவ்வேறானவை, மனிதர்களைப் போலத்தான். என்னால் அவனைக் குணப்படுத்த முடியும். இந்தக் குட்டிக் குழந்தை மிகவும் அழகாக இருப்பதுதான் துயரமானது, அவனை மட்டும் குணப்படுத்த முடிந்தால்! ஆனால் அஸன்ஷியோனில் உள்ள டாக்டர்களை நம்ப முடியாது. அவர்களுக்கு உன்னிடமிருந்து பணத்தைப் பிடுங்கத்தான் தெரியும். அவனைன இவ்வளவு தூரம் ஏன் எடுத்துச் செல்கிறாய் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு தூரம் செல்வதாக இருந்தால், வில்லாரிகாவில்கூட நல்ல மருத்துவர்கள் இருக்கிறார்கள்.

"அது மட்டுமல்ல என் கணவரைப் பார்ப்பதற்காகவும் நான் போகிறேன்."

"அவர் அங்கே வேலை செய்கிறாரா?"

"அவர் சிறையில் இருக்கிறார்."

"ஓ... அவர் யாருடனாவது சண்டை போட்டாரா? யாரையாவது குத்தி விட்டாரா"

"இல்லை, கடைசியாக நடந்த புரட்சியின்போது சிவிகோக்கள் அவரைச் சிறையில் அடைத்துவிட்டார்கள்."

விசிறியை அவள் வேகமாக வீசிக்கொண்டே "இது மிகவும் மோசம்! அரசியல்" என்று கண்டனம் தெரிவித்தாள். அரசியலில் ஈடுபடாமல் இருப்பதற்கு மனிதர்கள் எப்போதுதான் கற்றுக்கொள்ளப் போகிறர்களோ!

"சிரிலோவை அவர்கள் முதலிலேயே கொண்டு போய் விட்டார்கள். அவர் தனது மகனைக்கூடப் பார்க்கவில்லை. அதனால் தான் அவனை நான் எடுத்துப் போகிறேன். அவனை அவர் பார்ப்பதற்காக."

"அப்படியா? நல்லது அப்புறம்..."

தனது விசிறியைக் கொண்டு விசிறியபடியே இடையிடையே நிறுத்தி நிறுத்திப் பேசிக்கொண்டிருந்த கிழவி அந்த உரையாடலைத் தொடர்ந்து நடத்துவதில் முனைப்பாக இருந்தாள். அந்தச் சலிப்பூட்டும் உரையாடலை கிரிங்கோ கேட்டுக்கொண்டிருந்தான். அல்லது அவன் கேட்டுக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது.

0 0 0 0

கித்தார் வாசித்த கிழவனும் போர்ஜாவில்தான் இரயிலில் ஏறியிருக்க வேண்டும். பறட்டைத் தலையோடு காட்சியளித்த ஒரு சிறுவன் அந்தக் கிழவனைச் சங்கிலியைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு வந்தான்.

அந்தக் கிழவன் ஒரு இருக்கையின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு கித்தாரை வாசிக்கத் தொடங்கினான். அவனுடைய சுருக்கம் விழுந்த, ஒடுங்கிப்போன முகம் அந்த கித்தாரை நோக்கிக் குனிந்திருந்தது. அந்தச் சமயத்தில்தான், பாசி படிந்து ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்த மரங்களுக்கு நடுவில் ஜெசூட் மிஷன் கட்டிடங்களின் சிதிலங்கள் பார்வையில் பட்டன.

எனக்கு காஸ்பார் மோரா, மக்காரியோ ஃப்ரான்ஷியா ஆகியோரைப் பற்றி நினைவு வந்தது.

அந்த கித்தாரின் சில கம்பிகள் அறுந்திருந்தன. எனினும் அதன் இசை ஒரு நீலநிறச் சீசாவிலிருந்து எழும் சப்தத்தைப் போல் ஒலித்தது. அந்தக் கிழவன் நீளமான தலைமுடியைக் கொண்ட தலையை அவ்வப்போது ஆட்டிக்கொண்டிருந்தான். அவன் கித்தாரை வாசித்துக் கொண்டிருந்த சமயத்தில், அந்தச் சிறுவன் தங்களுக்குக் கிடைத்த காசுகளை நக்கி ஈரப்படுத்தி, பிறகு தனது கிழிந்துபோன உடையில் தேய்த்துப் பளபளப்பாக்கினான்.

"பரிதாபத்துக்குரிய இவர்களைப் பாருங்கள்! என்றான் குவேலர்.

"இப்போதெல்லாம் நிம்மதியாகப் பயணம் செய்ய முடிவதில்லை." என்றான் காஸாபாவைச் சேர்ந்த பண்ணை நில உரிமையாளன். "இரயில்களில் பிச்சைக்காரர்களும் திருடர்களுமே அதிகமாக இருக்கிறார்கள்." அவன் கையை ஆட்டியபடியே பேசினான். எனவே அவனுடைய மோதிரத்திலிருந்த கல்லையே எல்லாரும் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"ஆமாம்," என்று ஒப்புக்கொண்டான் நுனெஸ். "அவர்களிடமிருந்து தப்பிக்கவே முடியாது. அத்துடன், மிகப்பெரிய திருடர்கள், குற்றவாளிகள் ஆகியவர்களிடம்தானே இப்போது ஆட்சியதிகாரமே இருக்கிறது."

பருத்த மனிதன் அதிர்ச்சியடைந்ததுபோல் காணப்பட்டான். அவன் பேசத் தொடங்கினான். ஆனால் யோசனை செய்துகொண்டேயிருந்தான்.

"அந்தக் கிழவன் யாரென்று எனக்குத் தெரியும்." என்று கூறிய குவேலர் பேச்சை மாற்றியதன் மூலம் சங்கடமான நிலைமை ஏற்படாமல் தவிர்த்துவிட்டான்.

"அவனை நீ ஏற்கனவே பார்த்திருக்கிறாயா?"

"இல்லை."

"பிறகு?" என்று கேட்டான் பண்ணை நில உரிமையாளன்.

"அவன் என்ன வாசிக்கிறான் என்று தெரிகிறதா?" சோஸா எஸ்கலாடாவின் நாட்டுப்புற இசை அது. நீங்களே இதைக் கண்டு பிடித்துவிட முடியும்."

"என்னால் ஒரு போல்க்காவைக்கூடக் கண்டுபிடிக்க முடியாது." என்றான் சிலிகோ. "நான் எவ்வளவுதான் முயன்றாலும் முடியாது. கேம்ப்பமென்ட்டோ ஸெர்ரோ லியோன், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த போல்க்கா இசையான டயானா ஒரே குவேரா ஆகியவற்றின் மெட்டுகளை மட்டும்தான் என்னால கண்டுபிடிக்க முடியும்."

சக்கரங்களின் ஓசையில் அந்தக் கிழவனின் இசை ஓரளவுக்கு அமுங்கி விட்டது. அந்தக் கிழவன் இரயில்பெட்டியின் பின்பகுதியில், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

சங்கிலியுடன் அவனது இசைக்கருவி ஒரு வயர் கம்பியால் இணைக்கப்பட்டிருந்தது.

"அவர்கள் எல்லாருமே இப்படித்தான் முடிந்துபோனார்கள்." என்றான் குவேலர். "பாரகுவே நாட்டின் மாபெரும் கித்தார் இசைக் கலைஞர்கள் எல்லாரும் இறந்துவிட்டார்கள். அல்லது மிகுந்த துன்பங்களை அனுபவித்தார்கள். அல்லது அவர்கள் குடிகாரர்களாக மாறிவிட்டார்கள். இரங்கத்தக்கவர்களான அவர்கள் மறக்கப்பட்டு விடுகிறார்கள். காஸ்பார் மோரா தொழுநோயாளியாகி, காட்டிற்குச் சென்று ஒளிந்துகொண்டான். அவன் ஒரு கிறிஸ்துவை விட்டுச் சென்றான், அகஸ்டின் பாரியோஸ் தனது கடைசிக் கச்சேரியை ஒரு சதுக்கத்தில் நடத்தவேண்டியிருந்தது. அதன் பிறகு அவன் காணாமல் போய்விட்டான். அவன் இப்போது எங்கே இருக்கிறான் என்று யாருக்கும் தெரியாது. ஆம்பெலியா விலாக்ராவுக்கும் இதுதான் நடந்தது. தனது நாக்கு அறுக்கப்பட்ட நிலையில், சிறுசிறு உணவு விடுதிகளில் வாசித்தபடி அவன் பியூனஸ் அயர்ஸில் அலைந்து திரிகிறான் என்று சொல்லப்படுகிறது. மார்ஷியல் டாலவேரா தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டான். தனது ஞாயிற்றுக்கிழமை உடைகளை அணிந்துகொண்டு அவன் ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டான். அவனுக்கும் வானத்துக்கும் இடையில் ஒரே ஒரு திராட்சைக்கொடி மட்டும்தான் இருந்தது. தனது ரிவால்வரின் குழலை வாயில் வைத்த அவன் நிரந்தரமாக மௌனமடைந்துவிட்டான். நமது கலைஞர்கள் அவர்களின் சொந்த நாட்டில் வாழ்வது சாத்தியமேயில்லை என்று நான் ஒரு கட்டுரையில் எழுதியிருந்தேன். அதற்காக நான் கைது செய்யப்பட்டேன்."

"இந்த நிலைமை கலைஞர்களுக்கு மட்டுமல்ல," என்றான் நுனெஸ். "யாரோ சொன்னதைப் போல, மனிதர்களே இல்லாத நிலமும், நிலம் இல்லாத மனிதர்களே இல்லாத நிலமும், நிலம் இல்லாத மனிதர்களும் உள்ள நாடு இது." ஆனால் இசைக்கலைஞர்களின் விஷயத்தில் இது இன்னும் துயரமானது," என்றான் குவேலர். "கேப்ரியேல் பெர்மேஜோதான் இவர்களில் கடைசியானவன். பார்வையற்றவனாகவும் குடிபோதையில் மூழ்கியவனாகவும் அவன் கிராமங்களில் திரிந்துகொண்டிருப்பதாக சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கேள்விப்பட்டேன்.

"அது இவன்தான் என்று நீ நினைக்கிறாயா?....." என்று சிலிகோ அந்தக் கிழவனைச் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

"எனக்குத் தெரியாது...... நாம் எப்படிச் சொல்லமுடியும்?"

கிழவன் வாசிப்பதை நிறுத்தினான். சிறுவன் கித்தாரை எடுத்துக்கொண்டான். அது ஏறத்தாழ அவனுடைய உயரத்திற்கு இருந்தது, பிறகு கிழவனின் இடுப்பு வாருடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த சங்கிலியை இழுத்தான். கிழவன் எழுந்து தடுமாறியபடியே நடைபாதையில் நடந்தான். அவனை, சங்கிலியைப் பிடித்துச் சிறுவன்

இழுத்துச் சென்றான். ஒரு கையால் பயணிகளிடம் வைக்கோற் தொப்பியைக் கழற்றிப் பிடித்தபடியே மறுகையால் கித்தாரை அணைத்துக்கொண்டு சென்றான். நாங்கள் உட்கார்ந்த பெஞ்சை அவர்கள் கடந்தபோது, அந்தக் கிழவனின் தோளின்மீது குவேலர் கைவைத்தான்.

"நீ கேப்ரியேல் பெர்மேஜோ, இல்லையா?"

கிழவன் தன் வெள்ளைக் கண்களை அவனை நோக்கித் திருப்பினான். அவன் வாசித்து முடித்த பாடலை சீழ்க்கையடித்துப் பாடுவதுபோலத் தனது பொக்கைவாயைக் குவித்தான். ஆனால் அந்தக் கேள்வியைப் புரிந்துகொண்டதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அவனிடம் காணப்படவில்லை. பெஞ்ச்சின்மீது சங்கலி பட்டதால் எழுந்த சப்தத்தைத் தவிர அங்கே மௌனம் நிலவியது. அவனோடு துணைக்கு வந்த சிறுவனும் நின்றான். தனது காதுகளையும் கண்களையும் தொட்டுக் காட்டினான்.

"ஆகுவேலிட்டோவுக்குக் காதும் கேட்காது கண்ணும் தெரியாது. அவரால் எதையும் கேட்கவோ பார்க்கவோ முடியாது.

எழுத்தாள் குழி பறித்ததற்காக நாடுகடத்தப்பட்டவன் ஏதோ சைகை செய்தான். அவன் முகத்தை நாங்கள் பார்க்காமல் இருந்திருந்தால், அது ஏளனச் சிரிப்பு என்று நாங்கள் நினைத்திருப்போம். அவன் பணத்தை எடுத்து அந்தச் சிறுவனிடம் நீட்டினான். ஆனால் அச்சிறுவன் அதை வாங்க மறுத்து விட்டான். அவன் சந்தேகத்துடன் கூறினான்

"இது வெறும் காகிதம். எனக்குக் காசு கொடுங்கள், ஐயா...."

திடீரென்று அவன் இவ்வாறு கூறியதைக் கேட்ட மற்றவர்கள் அனைவரும் சிரித்தார்கள். அந்தச் சிறுவனின் கைகளில் ஆரஞ்சுப் பழச்சாறும் அழுக்கும் படிந்திருந்தன. அந்தக் கைகள் ஒரு கிழவனின் கைகளைப்போன்று இருந்தன. ஆனால் அவனுடைய சிறிய, தீர்க்கமான கண்கள் ஒரு பருந்தைப்போன்று, ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் மிக்கவையாக இருந்தன.

அவனுடைய தொப்பிக்குள் எல்லாரும் காசு போட்டார்கள். பண்ணை நில உரிமையாளனும் இதற்கு விதிவிலக்கல்ல. வெறுப்புடன்தான் என்றபோதிலும் அவனும் காசு போட்டான். நான் எனது புதிய பூட்ஸ்களை இருக்கைக்கு அடியில் மறைத்துக்கொண்டேன்.

அவர்கள் மற்றொரு பெட்டிக்குச்சென்றார்கள். சங்கிலியிலிருந்து எழுந்த ஓசை விரைவிலேயே இரயிலின் இரைச்சலில் கரைந்து மறைந்து போனது.

கோபிகிருஷ்ணன்

ராணிதிலக்

ஒரு காலைவேளை. என் கால்கள் முதன்முறையாக அப்பிரதேசத்தைத் தொட்டுப் பதற்றமடைகின்றன. இந்தப் பிரதேசத்தில் ஏதோவொரு மூலையில் இருக்கும் நூலகத்தை, எதிர்பட்டுக்கொண்டு இருக்கும் மனிதர்களிடம் கேட்கத் தொடங்கினேன். அவர்களின் வார்த்தைகளில் நூலகம் இல்லை. சாலை மட்டுமே இருக்கிறது. அவர்கள் காட்டிய திசையில் சென்றுகொண்டிருக்கிறேன். அவர்களின் வார்த்தைகள் அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றன. மிகவும் கடினமான பாதை அது. இப்போது நினைத்தாலும் எரிச்சல் தருகின்ற அந்நூலகத்தையும் தெருவையும் கேட்கிறேன். இவர்களின் வார்த்தையிலும் அந்த சாலை மட்டுமே வருகிறது. காலைவேளை மங்கி, மதியபொழுதிற்கு மாறிக்கொண்டிருக்க. அந்தச் சாலையை என் கால்கள் அதே படபடப்புடன் தொட்டுவிட்டன. கண்கள் அந்த நூலகத்தை அடைந்துவிட்டன. தனித்த தீவைப்போல் யாரும் நுழைய தயங்கும் சுண்ணாம்புப் பூசப்பட்ட கட்டிடமாகக் காட்சியளிக்கிறது அது.

நுழைவாயிலில் ஒரு மனிதன் நின்றான். 'எங்கிருந்து வருகிறாய்?' என்றான். என் அடையாளத்தைச் சொன்னேன். கதவு திறக்கப்பட்டது.

கதவிற்குள்ளே ஓர் புத்தக வாசனை வீசும் அறை முழுக்க நாற்காலிகளுடன் யாருமற்று அமர்ந்திருந்தன. அவற்றின் நடுவே ஒரு மர டேபிள் சலனமற்றுக் கிடந்தது. அதன் மேல் காலத்திற்கும் அழியாத இறக்கவே இறக்காத பூ வொன்று பிளாஸ்டிக் தன்மையுடன் பூத்துக் கிடக்கிறது. பூவின் நிறம் இப்போது ஞாபகத்தில் இல்லை,

நான் அமர்கிறேன். என் முன்பாகப் படிவம் ஒன்று நீள்கிறது.

நான் யார்? எதற்காக வந்திருக்கிறேன்? என்ன செய்யப் போகிறேன் இதுவரை என்ன செய்திருக்கிறேன். எத்தனை கட்டுரைகள் எழுதி இருக்கிறேன்? எவற்றில் அவை பிரசுரமாகியிருக்கின்றன? எத்தனை பல்கலைக் கழகங்களில் வாசித்திருக்கிறேன் என்று இரண்டு பக்கங்களில் என்ன? எத்தனைகள்? எப்படிகள்? நீண்டு கொண்டே போயின. நல்ல வேளை தான் என்பது இரண்டு பக்கத்தைமட்டுமே கொண்டிருக்கிறது. முடிவுறாத பக்கங்களை ஒரே தாள் கொண்டிருக்குமானால்! அந்தப் படிவத்தில் என்னால், என் பெயரையும், படிக்கும் பல்கலைக்கழகத்தையும் மட்டுமே குறிப்பிட முடிந்தது. வந்த ஆள்

வெறுப்புடன் திரும்பினான். சிறிது நேரம் கழித்து வந்தான். கையில் மீண்டும் வேறொரு விண்ணப்பம் முளைத்தது. என் பல்கலைக்கழகத்தின் அத்தாட்சியுடன் வந்தால்தான், என் விரல்கள் புத்தகத்தைத் தீண்ட முடியும் என்று புரிந்தது. இரண்டு புத்தகங்களை மட்டுமே பார்க்க வந்திருப்பதாகவும், அதற்கு திரும்பப் போய் வருவது சிரமம் என்றும் கூறினேன்.

அனுமதி மறுக்கப்பட்டது. நான் திரும்பும் வேளை எதிரே மரடேபிளின் மேல், ஒரு தாளின் மேல், எழுத்துகள் வளர்ந்து கொண்டிருந்தன. அந்தக் கைகளின் சொந்தக்காரரின் முகம் எனக்கு, பத்திரிகைகளின் மூலம் பிரசுரமாகியதாகத் தெரியவில்லை. அந்த முகம் சீராக இல்லாமல், வெளிறிக்கிடக்கிறது. தாள் தன்னை எழுதி முடித்துக் கொண்டது. அவரை நான் வினவினேன். என் சந்தேகம் தீர்ந்தது. பரவசத்தில் என் உடல் குதூகலம் கொள்ள, அவர் கையைப் பற்றினேன். அவரின் வாசகன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். பேசத் தொடங்கினார். எந்த நூலும் பேசாதபோது மறுக்கப்பட்டபோது, அவர் பேச்சு இதமானது. என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள், கதையா? என்றேன். அவரின் உடனடியான, மிகத் தெளிவாகச் சொன்ன பதில் ஆச்சரியத்தையும் திடுக்கிடுதலையும் எனக்குள் ஏற்படுத்தியது. 'ராஜினாமா' தான் அந்த வார்த்தை. அந்த அறையில் தடுத்து ஏற்படுத்தப்பட்ட கண்ணாடி அறைக்குள் இருந்த மனிதர் உற்றுப்பார்ப்பதை அவர் சுட்டிக்காட்டினார். வெளியே போகலாம் என்றார்.

நுழைவாயிலில் இருந்த மனிதர், என் எழுத்தாளருக்கு, ஒரு கோப்பை தேநீர் தந்தார். எனக்கும் கிடைக்கும் என்ற நப்பாசையில் நானும் காத்திருந்தேன். அவரோ மறுத்தார். ஏன் நான் சாப்பிடக்கூடாதா? என்றேன். இல்லை இந்த நூலகத்தில் பணிபுரிபவர்களுக்கு மட்டும்தான். சரி பாதியாக்கித் தரலாமே என்று வாய்விட்டே கேட்டுவிட்டேன். அவர் சிரித்தபடியே சொன்னார். 'விருந்து என்பது தராமலும் இருப்பதுதான்' எனக்காக அவர் தேநீரை அருந்தவில்லை. வெளியே போய் அருந்தாலாமா? என்று கேட்டேன். 'இன்னும் ராஜினாமா கடிதம் தரவில்லை. மேலும் வெளியே செல்ல அனுமதியும் இல்லை.'

எரிச்சலையும் தீராத மன வேதனையும் தரக்கூடிய இந்த நகரத்தின் ஓர் குட்டி சாத்தானை விட்டு வெளியேறினேன். புழுக்கம் தாங்க முடியாமல் பாதை முழுக்க வளர்கிறது. என் உடல் வியர்த்துக் கொண்டு இருக்க, பேருந்தை வெகுகாலம் கழிந்தது போல் அடைந்தேன்.

ஒரு முறை அந்தச் சாலையைத் திரும்பிப் பார்த்தேன். முடிவுற்றுத் திரும்பிய, அந்தச் சாலையில் ஒரு பெயர், எனக்காகத் தேநீரை அருந்தாமல், ராஜினாமா கடிதத்துடன் நின்று கொண்டிருப்பது என் கற்பனையில் அலைகிறது. அந்தப் பெயரை மனத்திற்குள் மீண்டும் உச்சரிக்கிறேன்.

"கோபி கிருஷ்ணன்."

அர்த்தமற்ற அர்த்தமுள்ள ஓசை அலைகள்

Zing Zing Zing
Zoom Zoom Zoom
Literary bla bla bla
Moron Moron Moron
Literary builshit shit shit
Literary rape rape rape
Manhood Manhood Manhood
incest incest incest
hypocrite hypocrite hypocrite
Verbal idiocy idiocy idiocy
Grandeur complex complex complex
Personality deterioration deterioration
horse horse horse horse
he-goat he - goat he - goat ram
Facade facade facade
Kick chuck kick
mcp mcp mcp mcp

- gobikrishnan

('தோழர் சமுத்திரத்திற்கு ஒரு காணிக்கை' என்ற கோபிகிருஷ்ணனின் சிறு வெளியீட்டிலிருந்து.)

150 விதமான தமிழ் எழுத்துக்கள்
30 குறியீடு எழுத்துக்கள்
5000 தயார் நிலை வரைபடங்கள்

Publishers Special Edition

jeeva fonts

150 variety of **tamil** fonts

30 symbol fonts

5000 clip arts

special **borders, corners**

jeeva fonts can be had from...

Jeeva Computers

40b old police line, chengam 606 701, tiruvannamalai dt,
tamil nadu, india. *cell no. 94434 92461*
e-mail: www.jeevafontech@yahoo.com

பை ஜூயி

புதிய கவிதைகள் எதையும்
அவனது தூரிகை தீட்டவில்லைதான்
அவனது புகழும்கூட மங்கிப்போனது
அவனது பழைய கவிதைகள்
பெட்டிகளில்
அலமாரிகளின் அடியில் தூசித்தும்புகளில் கிடக்கின்றன
ஒரு சமயம் எவனோ ஒருவன்
பாடிக் கொண்டிருந்த பொழுது
அவனது அக்கவிதையை தற்செயலாகக் கேட்டேன்
ஒரு பெரும் வலி
எனது இதயத்தை துளைத்துச் சென்றது
முன்னமே அதனை கவனம்
செய்ய நேரமிருந்தும்
சும்மா இருந்ததால்.

கவிஞர் யுவான் ஷியன் எழுதிய பாடலை (ஷியன் இறந்து நெடுங்காலம் கழித்து) - எவனோ ஒருவன் பாடக் கேட்ட பொழுது பை ஜூயி எழுதியது. தமிழில் பினாகினி